விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005

இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 கார்த்திகை 28 வியாழக்கிழமை (14.12.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 360

## மலேசிய பிரதமர் இலங்கை விஜயம்



24

## சம்பந்தன், மாவை, சுமந்திரன் அரசியலிலிருந்து விலகினால் விடிவு தமிழ் மக்களுக்கு ஏற்படும் – சங்கரி

(யாழ்ப்பாணம்)

இரா.சம்பந்தன், மாவை சேனாதிராசா மற்றும் சுமந்திரன் ஆகியோர் அரசியலில் இருந்து விலகினால்தான் தமிழ் மக்களுக்கு விடிவு ஏற்படும் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்த சங்கரி தெரிவித்துள்ளார். 23



## ரயில் ஊழியர்களால் முன்னெடுக்கப்பட்ட பணிப்பகிஷ்கரிப்பு போராட்டம் கைவிடப்பட்டதாக அறிவிப்பு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் ரயில் ஊழியர்களினால் முன்னெடுக்கப்பட்டு வந்த பணிப்பகிஷ்கரிப்பு போராட்டம் கைவிடப்பட்டதாக ரயில்வே தொழிற்சங்கம் அறிவித்துள்ளது.

இந்நிலையில், வேலைநிறுத்தம் குறித்து ஆராயவென அமர்த்தப்பட்டிருக்கும் அமைச்சர் குழுவினரோடு ரயில்வே ஊழியர்கள் நேற்று முன்னெடுக்கப்பட்ட பேச்சுவார்த்தையில் சமரச முயற்சி எட்டப்பட்ட நிலையில் குறித்த போராட்டத்தை கைவிடுவதாக ரயில்வே தொழிற்சங்கம் அறிவித்துள்ளது.

சம்பளம் உள்ளிட்ட 24

## தேர்தல்விதி மீறல்

### ஆளுங்கட்சிக்கு எதிராக அதிக முறைப்பாடுகள்

(கொழும்பு)

தேர்தல்விதி மீறல் தொடர்பில் ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு எதிராகவே அதிக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதென தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டு 23

## தென்னிலங்கையில் கட்சி தாவல்கள்

(கொழும்பு)

ஒன்றிணைந்த கூட்டு எதிர்க்கட்சி மற்றும் ஐக்கிய தேசிய கட்சி ஆகியவற்றில் அங்கத்துவம் வகித்த முன்னாள் பிரதேசசபை உறுப்பினர்கள் சிலர் இலங்கை சுதந்திரக்கட்சியில் இணைந்து 23

## புலிகள் மீது உள்ள அக்கறை படையினரிடம் இல்லை - வீரசேகர


(கொழும்பு)

சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள புலிச் சந்தேகநபர்கள் தொடர்பில் மாத்திரமே ஐ.நா அக்கறை கொண்டுள்ளதென்றும் படையினர் தொடர்பில் அக்கறை 23

# உள்ளூராட்சி தேர்தலில் ஆசனப் பங்கீட்டில் தமிழரசுக்கட்சி ஏமாற்றிவிட்டது

## புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் குற்றச்சாட்டு

**(யாழ்ப்பாணம்) உள்ளூராட்சி தேர்தலில் ஆசனப்பங்கீடு தொடர்பாக எமக்கு வழங்கிய உறுதி மொழியை தமிழரசுக்கட்சி தனது அதிகாரத்தை பயன்படுத்தி மீறிவிட்டது என புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் குற்றம் சாட்டியுள்ளார்.** (23-ம் பக்கம் பார்க்க...)



THE FIRST TIME
இப்பொழுது யாழ்ப்பாணத்தில் முதல் முதலாக 10 அடி அகலம் கொண்ட அதி நவீன துல்லியத்தில்
8 கலர்ஸ் டிஜிற்றல் பனர் பிறின்டிங்
01 சதுர அடி 28/=

Photo Quality Printing
(C-695)
Normal Sticker - 65/=
Cleyar Sticker - 70/=
Backlit Banner - 65/=
One Way Vison Sticker - 170/=
Febric - 80/=
MUG PRINT 250/=
Minimum Sqf-100
Name Boards - 190/= /// Light Board - 400/=
இச்சலுகை 14-12-2017 தொடக்கம் 30.12.2017 வரை மட்டுமே...
உங்கள் விளம்பர பதாகைகளை ஒளிமயமாக்கிடுங்கள்...
ஜனா டிஜிற்றல் பிறின்டிங்
இல.246 கன்னாதிட்டி சந்தி யாழ்ப்பாணம் (மக்கள் வங்கிக்கு அருகாமையில்)
0770731654, 0712115533, 0717774556, 0212213233

## பெற்றோல் தட்டுப்பாடு மீண்டும் ஏற்படும்?

(கொழும்பு)

இலங்கையில் மீண்டும் பெற்றோலிய ஊழியர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட பேச்சு நடத்தி வருகின்றனர்.

திருகோணமலையில் உள்ள எண்ணெ 23

## முன்னாள் புலி உறுப்பினர்கள் 7பேருக்கு கடூழிய சிறை

### அநுராதபுரம் மேல் நீதிமன்றம் தீர்ப்பு

(அநுராதபுரம்)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளிகள் 7 பேருக்கு தலா 56 ஆண்டுகள் கடூழிய சிறைத் தண்டனை விதித்து அநுராதபுரம் சிறப்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஹேஸ் வீரமன் நேற்று தீர்ப்பளித்தார்.

வில்பத்து தேசிய 23

## இறுதிக்கட்ட போர்க்குற்றத்தை மறைத்த பிரித்தானிய பிரபுகளுக்கு மைத்திரி நன்றி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் போர்க்குற்றங்கள் நடக்கவில்லை என்று பிரித்தானிய பிரபுக்கள் சபையில் உரையாற்றிய நெஸ்பி பிரபுவுக்கு ஜனாதிபதி மைத்தரிபால சிறிசேன இரகசியமாக நன்றிக் கடிதம் அனுப்பியுள்ளார் என்று கூட்டு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். 23

## வித்தியா வழக்கு உயர் நீதிமன்றில்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை செய்யப்பட்ட வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட 7 குற்றவாளிகளால் முன்வைக்கப்பட்ட மேன்முறையீட்டு மனுவுக்கு அமை 23

## 2018-ம் ஆண்டுக்கான வட மாகாண பட்ஜெட்டில் விவசாயத்துக்கான நிதி ஒதுக்கீடு போதாது

### விவசாய அமைச்சர் சிவநேசன் தெரிவிப்பு


(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண விவசாய அபிவிருத்திக்கு 2018 ஆம் ஆண்டுக்கென கேட்கப்பட்ட நிதியில் மிக குறைவான தொகையே வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்த வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன் ஏனைய நிதி மூலங்களை கருத்தில் கொண்டு மாவட்டங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவு 24

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்

## வல்லிக்குட்டி பன்னிருகரம்



கொற்றாவத்தை ஆழக்கிணற்றடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிக்குட்டி பன்னிருகரம் அவர்கள் 12.12.2017 செவ்வாய்க்கிழமை அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிக்குட்டி-சீதவி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வயிரமுத்து-அம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், அமரர் புவனேஸ்வரி (செல்லம்) அவர்களின் அன்புக் கணவரும், அமரர்களான இராசையா, தம்பிராசா ஆகியோரின் மைத்துனரும் மற்றும் ஜெயக்கொடி (சுவிஸ்), மின்னொளி (சுவிஸ்), வெண்ணிலா ஆகியோரின் பாசமிகு தந்தையும், தெய்வநாயகி (சுவிஸ்), திருநாவுகரசு (சுவிஸ்), இராசநாயகம் ஆகியோரின் அன்பு மாமனாரும், குந்தவி, வைஷ்ணவி, பிறேந்திரா, திருஷிகா, வைசிகன், தாயகன், நிலாயினி, நிதார்ஜன் (ஜேர்மனி), அமரர் நிரோஜ் மற்றும் தனுஷன் ஆகியோரின் பேரனும், அமரர் இராசா மற்றும் நல்லையா, அமரர் நாகமுத்து ஆகியோரின் அன்பு சகோதரனும், அமரர் இராசமணி மற்றும் திருமேனி, திருப்புகழ், திருத்தணிகாசலம், இராசகாந்தம், இராசசீதம், கலைவாணி, லதா ஆகியோரின் சிறிய தந்தையும், ரூபனின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதி கிரியைகள் இன்று (14.12.2017) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 10.00 மணிக்கு தகனக்கிரியைக்காக அல்வாய் டாங்கு வேம்படி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆழக்கிணற்றடி,
கொற்றாவத்தை

(சி-692)


தகவல்:-
குடும்பத்தினர்

# முதலாம் ஆண்டு நினைவலைகள்...

## அமரர் கிட்டிணன் பொன்னையா

தோற்றம் 19 - 01 - 1937

மறைவு 26 - 11 - 2016



ஆண்டு ஒன்றென்ன ஆயிரம்தான் ஆனாலும்
ஆறாது எங்கள் துயர் காயாது எங்கள் கண்ணீர்!
எம் குடும்பத்து குலவிளக்கே
நீங்கள் அணைந்திட்ட நாள் முதலாய்
எங்கள் குடும்பமே இருளாகி விட்டதய்யா!

அன்பும் அறிவும் கொண்ட அழகான எங்கள் குடும்ப விருட்சமே!
கேட்டவர்க்கெல்லாம் வாரி வழங்கும் கொடை வள்ளலே!
உம் இன்முகத்திற்கு இவ்வுலகில் ஈடிணை இல்லையைய்யா!

நாமெல்லாம் வேண்டும் வரம் ஒன்றே ஐயா!
எம் வம்சத்தில் வாரிசாக மீண்டும் வந்திடுங்கள் ஐயா
உங்கள் ஆத்ம சாந்திக்காய் என்றும் பிரார்த்திப்போம்

(சி-687)

கூவில்,
புலோலி தெற்கு, புலோலி

இங்ஙனம்:குடும்பத்தினர்
தொ.பே.இல:-0212263482

# மகாநாயக்க தேரர்களாலேயே அரசியலமைப்பு தோற்கடிக்கப்பட்டது

## தேசிய அமைப்புகளின் ஒன்றியம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

உத்தேச அரசியலைப்பை தோற்கடிக்க செய்த பொறுப்பை மூன்று பீடங்களினதும் மகாநாயக்க தேரர்கள் உள்ளிட்ட மஹாசங்கத்தினர் ஏற்றுக்கொள்ள வேண்டும் என தேசிய அமைப்புகளின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போது தேசிய அமைப்புகளின் ஒன்றியத்தின் அழைப்பாளர் பேராசிரியர் குணதாச அமரசேகர இதனை தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## பூநகரி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றவில்லை

(பூநகரி)

பூநகரி பொலிஸ் பிரிவில் முச்சக்கரவண்டியில் பயணித்த போது ஓர் இலட்சம் ரூபாய் பெறுமதியான 100 கிராம் குடு போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்தார் என முச்சக்கர வண்டிச் சாரதியும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் கடந்த திங்கட்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

நேற்றையதினம் வெளியான வலம்புரி பத்திரிகையில் கைது செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் பூநகரி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுபவர் என குறிப்பிடப்பட்டிருந்தது.

எனினும் பிரஸ்தாப பொலிஸ் உத்தியோகத்தர் பூநகரி பொலிஸ் நிலையத்தில் பணி யாற்றவில்லை என பூநகரி பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம)

## தரம் 01 அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை மற்றும் கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை ஆகியவற்றில் 2018ஆம் ஆண்டில் தரம் 01 இற்காக விண்ணப்பித்து நேர்முகத்தேர்வு நடத்தப்பட்டவர்களல் அனுமதி கிடைக்கப் பெற்றவர்களின் தற்காலிக பெயர்ப்பட்டியல் வெளியாகி உள்ளது.

இப்பட்டியலை பார்வையிட்டு தெரிவு செய்யப்பட்டவர்கள் எதிர்வரும் சனிக்கிழமைக்கு முன்பாக தமது தெரிவை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு இவ் இரண்டு பாடசாலைகளின் அதிபர்களும் கேட்டுள்ளனர். (ம)


### தேவை

அரச உத்தியோகத்தரின் பாவனைக்கு நீர்வேலி, கோப்பாய் பகுதியில் வீடு வாடகைக்கு தேவை.

0774366704

(சி-693)

### பணியாளர் தேவை

நெல்லியடி ம.ம வித்தியாலய வீதியில் அமைந்துள்ள நெல்லியடி கிளினிக்கில் பணிபுரிவதற்கு அனுபவம் வாய்ந்த இரண்டு பெண்மணிகள் தேவைப்படுகின்றனர்.

**விபரங்கள் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.**

**தொடர்புகளுக்கு:-**
**0773754368**

(சி-691)


### வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம்
### வாகனப் பாதுகாப்பு நிலையம் நடாத்துபவர்களுக்கான அறிவித்தல்

எதிர்வரும் தைப்பொங்கல் தினத்தையொட்டி எமது பிரதேசத்தில் நடாத்தப்படவுள்ள பட்டத்திருவிழாவின்போது நகராட்சிமன்ற எல்லைக்குள் வாகனப்பாதுகாப்பு நிலையம் நடாத்த விரும்புவர்கள் 10.01.2018 இற்கு முன்பாக நகராட்சி மன்றத்துடன் தொடர்பு கொண்டு உரிய அனுமதியினை பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்.

செயலாளர்,
நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை.

(சி-686)


## இன்று முதல் ஆரம்பம்

இளையோர்களே சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்!

December 14 | 4 .00pm
Aaruthal's CITE – Job Skills Development & Training.
No. 125 Main Street, Jaffna. (near to Courts Complex)

Aaruthal's CITE
BELIEVE TO ACHIEVE
CENTRE FOR IT EDUCATION

"நீங்கள் ஆவலோடு எதிர்பார்த்திருந்த ஆறுதல் நிறுவனத்தின் கணனிக் கற்கை மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார் திறன் விருத்திக்கான செயற்பாடுகள் ஆரம்பிக்க இருக்கிறது"

- Computer Literacy & English Language Skills Development & Training Programme
- IT Job Skills Development & Training Programme.

(Covers ICT and Communicative English Syllabus of TVEC- NVQ Level 3,4)

ஏற்கனவே பதிவு செய்தவர்கள் உங்கள் பதிவினை உறுதி செய்யுமாறும் இதுவரை பதிவு செய்யாதவர்கள் விரைவில் பதிவினை மேற்கொள்ளுமாறும் கேட்கப்படுகிறீர்கள்

"தகவல் தொழில்நுட்பம் சார் வேலைவாய்ப்பு மற்றும் தேர்ச்சி பெறுவதற்கான வழிகாட்டல் கருத்தரங்கு"

குறிக்கப்பட்ட இருக்கைகளே இருப்பதனால் தாமதமின்றி பதிவினை மேற்கொள்ளவும் எமது நிறுவனத்தில் கற்கைநெறிக்கான பதிவினை மேற்கொண்டோருக்கு முன்னுரிமை


அனுமதி இலவசம்!

தொடர்புகளுக்கு 021 221 7029 | 077 292 8353

(சி-685)

சிறார்களே உங்கள் விடுமுறையை பயனுள்ளதாக்குங்கள்

Computer Wise Kids
Introducing technology to young minds



# பிரபாகரன் யுகம் மீண்டும் உருவாகும்

## ரோஹித அபேகுணவர்த்தன அச்சம்

(கொழும்பு)

அரசாங்கம் வடக்கில் ஒரு சட்டத்தையும் தெற்கில் மற்றுமொரு சட்டத்தையும் அமுல்படுத்துகின்றது. இது மீண்டும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் யுகம் உருவாவதற்கு வழிவகை செய்யும் என கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன எச்சரித்துள்ளார்.

கூட்டு எதிர்க்கட்சி ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் பத்தரமுல்லையிலுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின்அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தெற்கு மக்கள் மத்தள விமான நிலையத்தைப் பாதுகாப்பதற்கு முன்னின்று செயற்பட்டபோது பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவரை கைது செய்து சிறையில் அடைத்தனர். இதேவேளை வடக்கில் தேசியக் கொடியை ஏற்றுவதற்கும் இடமளிப்பதில்லை. மாகாண சபை அமைச்சர் ஒருவரே தேசியக் கொடியை ஏற்றமுடியாது எனக் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் அவருக்கு எதிராக இதுவரையில் நடவடிக்கை இல்லை.

இதேவேளை கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்றின் போது தேசியக்கொடியில் சிறு மாற்றம் ஏற்பட்டுள்ளதாகக் கூறி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக நீதிமன்றம் சென்றனர். எனவே சட்டம் வடக்கில் ஒரு விதமாகவும் தெற்கில் மற்றுமொரு விதமாகவும் நடைமுறைப்படுத்தப்படுகிறது. ஆகவே இது தொடர்பில் சகலரும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

இதுபோன்ற செயற்பாடுகளுக்கு எதிராகவே கூட்டு எதிர்க்கட்சி அரசாங்கத்திற்கு எதிராக செயற்பட்டு வருகிறது. எமக்கு தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல் இல்லை. நாம் கொள்கை ரீதியிலான தீர்மானத்திலேயே பயணிக்கிறோம்.

அத்துடன் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்டுகிறது. இவ்வாறான நிலையில் தேர்தல் சட்டம் பேணப்பட வேண்டும். எனினும் வெற்றிடம் நிலவும் கிராமசேவகர் பிரிவுகளுக்கு கிராம சேவகர்களை நியமிப்பதற்கென போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டதுடன் பின்னர் நேர்முகப்பரீட்சையும் நடத்தப்பட்டுள்ளது.

எனினும் அவர்களுக்கு நியமனம் வழங்காது, ஓய்வு பெற்ற கிராமசேவகர்களில் தெரிவுசெய்யப்பட்ட சிலரை மூன்று மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றுவதற்கு சேவையில் இணைத்துகொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

அவ்வாறு சேவையில் இணைத்துக்கொள்ளவுள்ள கிராம சேவகர்கள் தற்போது அமைச்சர்கள் மற்றும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் மாகாண சபை உறுப்பினர்களின் செயலாளர்களாக கடமையாற்றுகின்றனர். ஆகவே இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறையிடவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கடலில் கலக்கும் நன்னீரை சேமித்து குடிநீருக்குப் பயன்படுத்த வேண்டும்

## வடக்கு அமைச்சர் சிவநேசன் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

நன்னீரினை கடலில் கலக்க விட்டு, கடல் நீரினை நன்னீராக்கும் திட்டத்தை முன்னெடுப்பது என்பது முரண்பாடான திட்டம் ஒன்றாகும் என தெரிவித்துள்ள வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன், முதலில் கடலில் கலக்கும் நன்னீரை சேமித்து குடிநீருக்கு பயன்படுத்தும் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். வடக்கு மாகாண சபையின் 2018 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவு திட்டத்தின் மீதான இரண்டாம் நாள் விவாதம் நேற்றைய தினம் கைதடியில் அமைந்துள்ள பேரவைச் செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது விவசாய அமைச்சின் வரவு- செலவு திட்டம் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு அதன் மீது விவாதம் நடைபெற்றது. இந்த விவாதத்தில் உறுப்பினர்களால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். வன்னியில் இருக்கின்ற பாரிய குளங்களான இரணமடு, தண்ணிமுறிப்பு, முத்தையன் கட்டு, ஆகிய குளங்களின் உபரி நீரை இணைத்து யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வர முடியும்.

தற்போது கடல் நீரினை நன்னீராக்கும் திட்டம் பற்றி அனைவராலும் பேசப்படுகின்றது. எனினும் பெருமளவிலான நன்னீரை கடலில் கலக்க விட்டு விட்டு ஏன் அதனை செய்ய வேண்டும்?



கடல் நீரினை நன்னீராக்கும் திட்டத்திற்கு நான் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. இருந்தும் இலகுவில் கிடைக்கின்ற நன்னீரை சேமித்து வைக்காமல் உவர் நீரை நன்னீராக்குவது என்பது முரண்பாடாக உள்ளது. இது தவிர ஆறுகளை இணைத்து யாழ்ப்பாணத்திற்கு அந்த நீரை கொண்டுவர முடியும். இதே போன்று மன்னாரிலும் பெருமளவிலான நன்னீர் கடலில் கலக்கின்றது. அதனையும் தடுத்து சேமித்து குடிநீராக்க முடியும். அடுத்து நிலத்தடி நீரையும் பாதுகாக்க வேண்டியுள்ளது. இதற்கு குன்றுகளை தூர்வார வேண்டியுள்ளது.

அம்மாச்சி உணவகம்

அம்மாச்சி உணவகத்தில் துர்நாற்றம் மற்றும் இலையான்களின் எண்ணிக்கை அதிகரித்து இருப்பதாக கூறப்படுகின்றது. கழிவுகள் உடனடியாக அகற்ற முடியாமல் தான் இலையான் தொல்லை ஏற்படுகின்றது. அந்த கழிவுகளை உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. மற்றும் ஊழியர்களை பயன்படுத்தி மேலும் ஆளுமையாக இயங்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

பாலை விற்று அங்கர் வாங்குகின்றனர்

வடக்கு மக்கள் பால் உற்பத்தியில் ஆர்வம் காட்டுகின்றனர் இல்லை. இதனால் பால் உற்பத்தியும் குறைவடைந்து வருகின்றது. சில இடங்களில் பசு மாடுகளில் பாலை கறந்து அந்த பாலை விற்று விட்டு அங்கர் பால் பவுடர் வாங்கி செல்கின்றனர். இவ்வாறுதான் வடக்கின் பால் உற்பத்தி நிலை, மற்றும் பால் பதனிடும் தொழிற்சாலை ஒன்று வவுனியாவில் உள்ளது. எனினும் அது முறையற்ற விதத்தில் இயங்கி வருகின்றது. இது தொடர்பில் கூட்டுறவு அமைச்சு விசாரணை செய்ய வேண்டும்.

மேலும் மாடு கடத்தல் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றது. இந்த மாடுகளை காடுகளின் ஊடாக கடத்தி வருகின்றனர். மேலும் வடக்கில் பெரும் பாதிப்பு ஏற்படுத்தும் விடயமாக விவசாய நிலங்களை அபகரிக்கும் நடவடிக்கை தொடர்கின்றது. வளமான விவசாய நிலங்களை வீட்டுத் திட்டங்களுக்கு வழங்கப்படுவதால் தோட்ட நிலங்களை இழந்து வருகின்றோம். மேலும் நன்னீர் மீன்பிடிக்கு 5 மில்லியன் மத்திய அரசின் நிதியில் எம்மால் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இது நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-4-9)

### 11 தமிழர்கள் கடத்தல் விவகாரம்

# டி.கே.பி. தசநாயக்க உள்ளிட்ட ஐவரின் விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

11 தமிழர்களின் கடத்தல் மற்றும் காணாமற்போதலுடன் தொடர்புபட்டாரென்ற சந்தேகத்தின்பேரில், கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் டி.கே.பி தசநாயக்க உள்ளிட்ட ஐவரினதும் விளக்க மறியல் எதிர்வரும் 22ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு முதன்மை நீதிமன்றத்தினால் நேற்று இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2008 மற்றும் 2009 ஆண்டு காலப்பகுதியில் 11 தமிழர்கள் காணாமல்போன சம்பவம் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட சி.ஐ.டி விசாரணைகளின்போது வெலிசரவில் அமைந்துள்ள கடற்படைத் தளத்தில் வைத்து முன்னாள் கடற்படைப் பேச்சாளர் கைது செய்யப்பட்டார்.

மேற்படி தமிழர்கள் 2008 மற்றும் 2009 ஆகிய காலப் பகுதியில் தெஹிவளை, பத்தரமுல்லை மற்றும் வத்தளை ஆகிய பகுதிகளில் வைத்து கடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# "நான் குற்றவாளி அல்லன்" நீதிமன்றில் மகிந்தானந்த

(கொழும்பு)

மோசடியான முறையில் சம்பாதித்த பணத்தில் ஆடம்பர வீடு ஒன்றைக் கொள்வனவு செய்தார் என்ற குற்றச்சாட்டை எதிர்நோக்கியுள்ள முன்னாள் அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே, தான் குற்றவாளி அல்லன் என நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அளுத்கமகேவுக்கு எதிரான குற்றப்பத்திரிகை நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதியினால் வாசிக்கப்பட்டது.

அப்போது தான் நிரபராதி என அளுத்கமகே கூறியுள்ளார். இதனையடுத்து வழக்கு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மகிந்தானந்த அளுத்கமகே அமைச்சராக பதவி வகித்த காலத்தில் முறைகேடான முறையில் சம்பாதித்த 27 மில்லியன் ரூபாவை பயன்படுத்தி கொழும்பு கிங்சி வீதியில் ஆடம்பர வீடு ஒன்றை



கொள்வனவு செய்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அவருக்கு எதிராக பணச்சலவை தடுப்பு சட்டம் மற்றும் குற்றவியல் தண்டனைச் சட்டத்தின் கீழ் சட்டமா அதிபரினால் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கூட்டு எதிரணி, ஐ.தே.கவினர் ஜனாதிபதி மைத்திரிக்கு ஆதரவு




(கொழும்பு)

தெரணியகல பிரதேச சபையின் முன்னாள் தலைவர் அநுர குருப்பு மற்றும் முன்னாள் உப தலைவர் எல். டி விஜேவர்தன ஆகியோர் நேற்று முற்பகல் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு வருகை தந்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு வழங்கியுள்ளனர்.

குறித்த இருவரும் இதுவரை கூட்டு எதிர்க்கட்சியுடன் இணைந்து செயற்பட்டு வந்தனர். இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய செயற்பாட்டாளர்களான தெஹியோவிட்ட பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் தோமஸ் சமிந்த மற்றும் தெரணியகல ஐக்கிய தேசியக் கட்சி நிறைவேற்றுச் சபையின் செயலாளர் ஏ.வீ. பியரத்ன ஆகியோர் நேற்று முற்பகல் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு வருகை தந்து ஜனாதிபதி முன்னெடுத்துள்ள நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்து ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து கொண்டனர். (இ-7)

# திருமண நிறைவு நாளில் ரோகித் முத்தான இரட்டைச் சதம் மொஹாலியில் இலங்கையை சூறையாடியது இந்தியா



மொகாலி ஒருநாள் போட்டியில் அணித் தலைவர் ரோகித் சர்மா விஸ்வரூபம் எடுத்தார். ஓட்ட மழை பொழிந்த அவர், மூன்றாவது முறையாக இரட்டை சதம் கடந்து உலக சாதனை படைக்க, இந்திய அணி 141 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இமாலய வெற்றி பெற்றது. இலங்கை அணி 'சரண்டர்' ஆனது.

இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி, அங்கு மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டியில் இலங்கை அணி வெற்றி பெற்றது.

இந்நிலையில் நேற்று, இரண்டாவது ஒருநாள் போட்டி மொகாலியில் (பஞ்சாப்) நடந்தது. இலங்கை அணியில் மாற்றம் எதுவும் செய்யப்பட வில்லை. இந்திய அணியில், தமிழக 'சகல துறை வீரர்' வாஷிங்டன் சுந்தர், (வயது-18), அறிமுகமானார். குல்தீப் யாதவ் நீக்கப்பட்டார். ரகானேவுக்கு மீண்டும் இடம் கிடைக்கவில்லை. நாணயச்சுழற்சியில் வென்ற இலங்கை அணித் தலைவர் திசர பெரேரா, முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

### நல்ல ஆரம்பம்

இந்திய அணிக்கு அணித் தலைவர் ரோகித் சர்மா, ஷிகர் தவான் நல்ல ஆரம்பம் வழங்கினர். பிரதீப் வீசிய 14 ஆவது ஓவரில் 3 பவுண்டரி அடித்து, ஒருநாள் அரங்கில் தனது 23ஆவது அரைசதத்தை பதிவு செய்தார் தவான். முதல் விக்கெட்டுக்கு 115 ஓட்டங்கள் சேர்த்திருந்த போது பதிரண 'சுழலில்' தவான் (68) சிக்கினார்.

### ஸ்ரேயஸ் நம்பிக்கை

அடுத்து வந்த ஸ்ரேயஸ் ஐயர், ஆரம்பத்தில் இருந்து வேகமாக ஓட்டங்களைச் சேர்த்தார். பொறுப்பாக ஆடிய இவர், ஒருநாள் அரங்கில் தனது முதல் அரைசதம் அடித்தார். மறுமுனையில் அசத்திய ரோகித், ஒருநாள் அரங்கில் தனது 16ஆவது சதமடித்தார். பின் அதிரடிக்கு மாறிய ரோகித், சிக்சர் மழை பொழிந்தார்.

இவர், லக்மல் வீசிய 44ஆவது ஓவரில் 4 சிக்சர் விளாச 26 ஓட்டங்கள் கிடைத்தன. பின், பிரதீப் வீசிய 45ஆவது ஓவரில் தொடர்ச்சியாக 2 சிக்ஸர் அடித்த இவர், பெரேரா பந்தையும் விட்டுவைக்கவில்லை. இரண்டாவது விக்கெட்டுக்கு 213 ஓட்டங்கள் சேர்த்திருந்த போது, பெரேரா பந்தில் ஸ்ரேயாஸ் (88) வெளியேறினார்.

### உலக சாதனை

அடுத்து வந்த தோனி (8) நிலைக்கவில்லை. தொடர்ந்து அதிரடி காட்டிய ரோகித், ஒருநாள் அரங்கில் மூன்றாவது முறையாக இரட்டை சதமடித்து, புதிய உலக சாதனை படைத்தார். ஆட்டத்தின் கடைசி பந்தில் ஹர்திக் பாண்ட்யா (8) ஆட்டமிழந்தார்.

50 ஓவர்கள் நிறைவில் இந்திய அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 392 ஓட்டங்கள் குவித்தது.

ரோகித் (208 ஓட்., 153 பந்து, 12 சிக்ஸர், 13 பவுண்டரி) ஆட்டமிழக்காமல் இருந்தார். இலங்கை சார்பில் திசார பெரேரா 3 விக்கெட்டுக்கள் கைப்பற்றினார்.

### கடின இலக்கு

கடின இலக்கை விரட்டிய இலங்கை அணிக்கு, இந்திய வேகப்பந்துவீச்சாளர்கள் தொல்லை கொடுத்தனர். பாண்ட்யா 'வேகத்தில்' தரங்க (7) ஆட்டமிழந்தார். பும்ரா பந்தில் குணதிலக (16) வெளியேறினார். அடுத்து வந்த திரிமன்னே (21), வாஷிங்டன் சுந்தர் 'சுழலில்' சிக்கினார். டிக்வெல (22) நிலைக்கவில்லை. சகால் வீசிய 31ஆவது ஓவரில் குணரத்ன (34), அணித் தலைவர் திசர பெரேரா (5) ஆட்டமிழந்தனர்.

நிதானமாக ஆடிய மத்யூஸ், ஒருநாள் அரங்கில் தனது 2ஆவது சதமடித்தார். இலங்கை அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 251 ஓட்டங்கள் மட்டும் எடுத்து தோல்வியடைந்தது. மத்யூஸ் (111), லக்மல் (11) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் இந்தியா சார்பில் சகால் 3, பும்ரா 2 விக்கெட் கைப்பற்றினர். ஆட்டநாயகன் விருதை இரட்டை சதமடித்து அசத்திய இந்திய அணித் தலைவர் ரோகித் சர்மா வென்றார்.

இந்த வெற்றியின்மூலம் தரம்சாலாவில் சந்தித்த தோல்விக்கு இந்திய அணி சரியான பதிலடி கொடுத்தது. தொடர் 1-1 என சமநிலை அடைந்தது.

மூன்றாவது மற்றும் கடைசி போட்டி வரும் 17 ல் விசாகப்பட்டினத்தில் நடக்கவுள்ளது.

### எப்படி '200'

நேற்றைய போட்டியில் ஆரம்பத்தில் அடக்கிவாசித்த ரோகித், பின் விளாசினார். முதல் 65 பந்தில் 50 ஓட்டங்கள் மட்டுமே எடுத்த இவர், பின் சந்தித்த 50 பந்தில் 100 ஓட்டங்களை எட்டினார்.

அதன்பின், புயலாக மாறிய ரோகித் அடுத்த 18 பந்தில் 150 ஓட்டங்களை நெருங்கினார். தனது அசத்தலை தொடர்ந்த இவர், அடுத்த 50 ஓட்டங்களை சேர்க்க அதாவது இரட்டை சதத்தை எட்ட 18 பந்து மட்டுமே எடுத்துக்கொண்டார். மொத்தம் 151 பந்தில் இரட்டை சதம் விளாசினார்.

### 100 முறை

ஒருநாள் கிரிக்கெட் அரங்கில் 100 முறை 300க்கும் மேல் ஓட்டங்கள் எடுத்த முதல் அணி என்ற சாதனை படைத்தது இந்தியா.

கடந்த 1996 இல் சார்ஜாவில நடந்த பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் சச்சின் (118), சித்து (101) சதம் விளாச, இந்திய அணி (305/5) ஒருநாள் அரங்கில் முதன் முறையாக 300 ஓட்டங்களுக்கு மேல் எடுத்தது. இரண்டாவது இடத்தில் அவுஸ்திரேலிய அணி (96 முறை) உள்ளது.

நேற்று அசத்தியதை அடுத்து, ஒருநாள் கிரிக்கெட்டில் 100ஆவது முறையாக, 300க்கும் மேல் ஓட்டங்கள் எடுத்த முதல் அணி என்ற சாதனை படைத்தது இந்தியா.

தவிர, இதில் அதிக முறை 350 ஓட்டங்களுக்கும் மேல் எடுத்த அணிகள் வரிசையில் இந்தியா இரண்டாவது இடம்(25 முறை) பிடித்தது. முதலிடத்தில் அவுஸ்திரேலியா (26) உள்ளது.

### திருமண பரிசு

நேற்று இந்திய வீரர் ரோகித் சர்மா, அவரது மனைவி ரித்திகா ஜோடிக்கு 2ஆம் ஆண்டு திருமண நாள். மொகாலி போட்டியை ரித்திகா நேரில் கண்டு ரசித்தார்.

ரோகித் இரட்டை சதம் அடிப்பதற்கு முன் பதற்றத்துடன் இருந்த ரித்திகா, தனது கணவர் புதிய உலக சாதனை படைத்ததும் ஆனந்த கண்ணீருடன் உற்சாகமடைந்தார்.

மூன்றாவது முறையாக இரட்டை சதம், தலைவராக முதல் வெற்றி போன்றவை ரோகித்தின் திருமண நாள் பரிசாக அமைந்தது.

### 45

நேற்று, 12 சிக்சர் விளாசிய இந்தியாவின் ரோகித் சர்மா, இந்த ஆண்டு அதிக சிக்சர் அடித்த வீரர்கள் பட்டியலில் முதலிடம் பிடித்தார். இதுவரை இவர், 20 போட்டியில் 45 சிக்ஸர் அடித்துள்ளார்.

இவரை அடுத்து இந்தியாவின் ஹர்திக் பாண்ட்யா (30 சிக்ஸர், 27 போட்டி), இங்கிலாந்தின் இயன் மோர்கன் (26 சிக்ஸர், 20 போட்டி) உள்ளனர்.


### 162

ஒருநாள் அரங்கில் அதிக சிக்ஸர் அடித்த வீரர்களுக்கான பட்டியலில் 9வது இடத்தை அவுஸ்திரேலியாவின் ரிக்கி பொண்டிங்குடன் பகிர்ந்து கொண்டார் ரோகித் சர்மா. இவர்கள் இருவரும் தலா 162 சிக்ஸர் அடித்துள்ளனர். முதலிடத்தில் பாகிஸ்தானின் அப்ரிடி (351 சிக்ஸர், 398 போட்டி) உள்ளார்.

### 16

இலங்கைக்கு எதிராக 208 ஓட்டங்கள் குவித்த ரோகித், தனது 16வது சதமடித்தார். இதன்மூலம் ஒருநாள் போட்டி வரலாற்றில் அதிகமுறை சதமடித்த இந்திய வீரர்கள் பட்டியலில், சேவாக்கை (15 சதம்) முந்தி 4ஆவது இடம் பிடித்தார் ரோகித்.

## ஓய்வு குறித்து சிந்திக்கவில்லை - அலஸ்ரயர் குக்



ஓய்வு குறித்து இன்னும் எந்த முடிவும் எடுக்கவில்லை என இங்கிலாந்து அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரரும் முன்னாள் அணித் தலைவருமான அலஸ்ரயர் குக் கூறியுள்ளார்.

இங்கிலாந்து - அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான ஆஷஸ் தொடரின் 3ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி பெர்த்தில் இன்று ஆரம்பமாகிறது. இலங்கை நேரப்படி காலை 8 மணிக்கு இந்த போட்டி தொடங்குகிறது.

இந்த போட்டி அலஸ்ரயர் குக்கின் 150ஆவது டெஸ்டாகும். 'இந்த மைல்கல்லை எட்டும் முதல் இங்கிலாந்து வீரர், ஒட்டுமொத்த அளவில் 8ஆவது வீரர் என்ற சிறப்பை அவர் பெறுகிறார்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் இரு டெஸ்டில் அவர் சோபிக்க தவறிய தால் (2, 7, 37, 16 ஓட்.) இந்த தொடருடன் ஓய்வு பெறக்கூடும் என்று முன்னாள் வீரர்கள் கெவின் பீற்றர்சன் (இங்கிலாந்து), மிட்செல் ஜோன்சன் (அவுஸ்திரேலியா) ஆகியோர் கூறியிருந்தனர்.

இதுபற்றி 32 வயதான அலஸ்ரயர் குக்கிடம் நேற்று நிருபர்கள் கேட்ட போது,

'எதிர்காலம் குறித்து நான் இன்னும் எந்த முடிவும் எடுக்கவில்லை. எப்போது ஓய்வு பெறுவேன் என்பது எனக்கு தெரியாது. தற்போது முழு கவனமும் இந்த டெஸ்ட் மீதுதான் (பெர்த்) இருக்கிறது. எனது வாழ்க்கையில் மிகப்பெரிய போட்டி இதுவாகும்.

என்னை பற்றி விமர்சித்தவர்களுக்கு என்னிடம் பேசுவதற்கு நேரம் இல்லை போலும். வலைப்பயிற்சியில் நான் இன்னும் கடினமாக உழைப்பது அவர்களுக்கு தெரியாது. துடுப்பாட்ட பயிற்சியாளருடனும் நிறைய நேரம் செலவிடுகிறேன். இன்னும் சாதிக்கும் உத்வேகத்தில் இருக்கிறேன்' என்றார்.

மேலும் அவர் கூறும் போது, '150ஆவது டெஸ்டில் ஆடுவது பெருமைப்படக்கூடிய விடயமாகும். அது மட்டுமின்றி காயமின்றி தொடர்ச்சியாக 147 டெஸ்ட்களில் விளையாடியது அதிர்ஷ்டமே' என்றார்.

## தல தோனி வேகம்; பாண்ட்யா சோகம்



இந்தியா, இலங்கை அணிகள் மோதிய 2ஆவது ஒருநாள் போட்டி, நேற்று மொகாலியில் நடந்தது.

போட்டி 11.30 மணிக்கு தொடங்கும் என்பதால் காலையில் வீரர்கள் பயிற்சியில் ஈடுபட்டனர். அப்போது, இந்திய அணியின் 36 வயதான 'சீனியர்' வீரர் தோனி, 24 வயதான 'ஜூனியர்' பாண்ட்யாவும் 100 மீ., ஓட்டத்தில் பந்தயம் வைத்தனர். தொடக்கத்தில் தோனியை விட பாண்ட்யா வேகமாக ஓடினார். கடைசியில் நம்ம 'தல' தோனி, பாண்ட்யாவை முந்தி, முதலிடம் பிடித்தார். அந்தளவுக்கு இன்னும் உடற்தகுதியுடன் உள்ளார் தோனி.

100 மீ., ஓட்டத்தில் பாண்ட்யாவை, 'சீனியர்' தோனி முந்தினார்.

# அமைச்சர் அமரதுங்கவின் கருத்துத் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு விசாரிக்க வேண்டும்

## கூட்டு எதிரணி கோரிக்கை

(கொழும்பு)

அமைச்சர் ஜோன் அமரதுங்கவால் வெளியிடப்பட்ட கருத்துக்கள் தொடர்பில், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் உடனடியாக விசாரணை செய்ய வேண்டுமென, ஒன்றிணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனக பண்டார தென்னக்கோன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர்.

"அரசாங்கமும் பொலிஸாரும் தங்கள் பக்கம் இருப்பதாகவும், அதனால் எதிர்வரும் தேர்தலில் அச்சமின்றி வாக்களிக்குமாறும், மக்களை அவர் கோரியுள்ளார். அத்தோடு, தேங்காய், அரிசி, மரக்கறிகள் ஆகியவற்றை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வது தொடர்பாகவும் கூறியுள்ளார். இது மக்களுக்கு எதிராக முன் வைக்கப்பட்ட எச்சரிக்கை ஆகும்.

அரசியல்வாதிகளால் முன் வைக்கப்படும் இவ்வாறான கருத்துகள், மக்களின் மன நிலைகளைக் குழப்புவதற்கான முயற்சி எனத் தெரிவித்த அவர், மரக்கறிகளை இறக்குமதி செய்வது தொடர்பான கருத்து, தம்புள்ளை பொருளாதார நிலையத்துக்கான அவமானப்படுத்தல் என்றும் ஜானக தெரிவித்தார்.

இவ்வாறான அரசியல்வாதிகளுக்கு, எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் மக்கள் தகுந்த பதில்களை வழங்க வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)



# அமைதிக்கான வர்த்தகம் யாழில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.முகாமையாளர் சம்மேளனம் (JME) இலங்கை பொறியியலாளர் நிறுவகம் - வட பிராந்தியம் (IESL) இணைந்து "அமைதிக்கான வர்த்தகம் அமெரிக்க மற்றும் சீன அனுபவத்திலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்ளலாம்" என்ற விடயத்தினை பற்றிய கலந்துரையாடல் ஒன்றினை ஒழுங்கு செய்துள்ளது. இக் கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை மாலை 4.30 இற்கு யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இக் கருத்தரங்கின் வளவாளராக பேராசிரியர் பெட்ரிக் மெண்டிஸ் கலந்துகொள்வார். ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும்படி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (இ)



# சிறு சிறு விடயங்களுக்காக நான் கட்சி மாற மாட்டேன்

(கொழும்பு)

சிறு சிறு சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு தான் அரசியல் கட்சியை மாற்றப் போவதில்லை என பாராளுமன்ற உறுப்பினர் விமலவீர திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அண்மையில், ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து கொண்ட ஶ்ரீயானி விஜேவிக்ரம குறித்து கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி தடுத்து வைத்திருந்தவர்கள் முறைப்படி வெளியேறி வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அகுணுகொலபெலஸ்ஸ பகுதியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, விமலவீர திஸாநாயக்க இவ்வாறு தெரிவித்தார். (இ-7)


# மரண அறிவித்தல்

## பொன்னம்பலம் சங்கரப்பிள்ளை



நவாலி தெற்கைப் பிறப்பிடமாகவும் நாமகள் வீதி கொக்குவில் கிழக்கில் வசித்து தற்போது கனடாவை வசிப்பிடமாகக் கொண்ட பொன்னம்பலம் சங்கரப்பிள்ளை 02.12.2017 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற சிரோன்மணியின் அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான செல்லத்துரை-சிவபாக்கியம் தம்பதிய ரின் மருமகனும், காலஞ்சென்றவர்களான பரமகுரு, சின்னத்தம்பி, பொன்னம்மா, சோதிப்பிள்ளை, அல்லிமலர், சிவகுரு ஆகியோரின் சகோதரரும், ஞானகணேசன் (பிரதேச மின் பொறியியலாளர்- இ.மி.சபை, யாழ். பிரதேசம்), Dr.ஞானபாஸ்கரன் (கனடா), ஞானம்பாள் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், வசந்தினி, அஜந்தா (கனடா), கணேந்திரன் (லண்டன்) ஆகியோரின் மாமனும் ரஜீவன், ஷர்மி, அஸ்வின்,சோபிதா, ஹம்சினி அபிஷேக், அகல்யா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 16.12.2017 சனிக்கிழமை பார்வைக்கு வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் 17.12.2017 ஞாயிற்றுக்கிழமை கனடா High Land Hills Crematorium 12492 Woodbine Ave Gormley, Ontrio, LOHIGO இல் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச.ஞானகணேசன் (மகன்-077 737 6450)
Dr. ஞானபாஸ்கரன் (மகன்- கனடா-0019055342079)
544,William Bercy Blod, Markham,Ontrio L6C2P6

(1818)



# கண்ணீர் அஞ்சலி



சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான
மக்கள் குழுவின் செயலாளர் நாயகம்

## அமரர் சுப்பிரமணியம் பரமநாதன்

யாழ். மண்ணிற்கும் மக்களுக்கும் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக அயராது அர்ப்பணிப்புடன் சேவையாற்றியவரான அமரர் சுப்பிரமணியம் பரமநாதன் அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு அமைப்பின் உறுப்பினராகிய நாம் ஆழ்ந்தகவலை அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்கு இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

(1819)

ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.

சமாதானத்திற்கும்
நல்லெண்ணத்திற்குமான
மக்கள் குழு.


# இராசி பலன்

14.12.2017
கார்த்திகை 28, வியாழக்கிழமை
ஏகாதசி காலை 6.26 மணிக்கு
சுவாதி பின்னிரவு 1.38 மணிவரை
சுபநேரம் 7.51-9.21 மணிவரை
இராகுகாலம் 1.51-3.21 மணிவரை
சர்வதேச குழந்தைகள் தினம்
ஏகாதசி விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| . | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>உத்திரட்டாதி, ரேவதி | | ராகு |
| கேது | | | |
| | சூரி, சுக்<br>சனி, புத | குரு, செவ்,<br>சந் | |

**மேடம்:** விருந்தினர் வருகையுண்டு, ஒரு கடனை அடைக்க மற்றொரு கடனை வாங்க முற்படுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**இடபம்:** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், உடல் நலன் சீராகும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, முயற்சிகள் கைகூடும்.

**மிதுனம்:** சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பெருமைகள் வந்து சேர பிள்ளையாரை வழிபட வேண்டிய நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகம்:** தொலைதூரத்திலிருந்து சுப தகவல்கள் வந்து சேரலாம், வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், பயணங்களால் பலனுண்டு, நண்பர்கள் சந்திப்புண்டு.

**சிம்மம்:** நினைத்த காரியங்கள் கைகூடும், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், நண்பர்களால் வளர்ச்சி கூடும், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.

**கன்னி:** திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், உடல்நலன் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**துலாம்:** தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், செலவுக்கேற்ப வருமானம் வந்து சேரலாம், போசன சுகமுண்டு, மனதில் புதிய கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள்.

**விருச்சிகம்:** பயணத்தால் பலன் கிடைக்கும், வழிபாட்டால் நலம் காண வேண்டிய நாள், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும், பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது.

**தனுசு:** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் வந்து சேரலாம், பொதுவாழ்வில் புகழ் கூடும், செய்தொழில் மேன்மையுண்டு உறவினர்களின் வருகையால் குடும்ப மகிழ்ச்சி கூடும்.

**மகரம்:** பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், கனவுகள் நனவாக கண்ணனை வழிபட வேண்டிய நாள், செய்தொழில் மேன்மையுண்டு.

**கும்பம்:** தொழிலில் அதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், இறைவழிப்பாட்டால் இனிமை காண வேண்டிய நாள், பயணங்களால் பலனுண்டு, புதிய திருப்பங்கள் ஏற்படலாம்

**மீனம்:** உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், குடும்பத்தினரிடையே கோபமாகப் பேசி விட்டு பின்னர் மனம் வருந்தும் நிலை ஏற்படலாம்.

# கல்வியாளர்களை ஒன்றிணைத்து வடக்கில் பல்பரிமாண சேவையை உருவாக்குவது மிகவும் முக்கியம்

## விவசாய அமைச்சர் சிவநேசன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கின் அபிவிருத்திக்கு எம்மிடமுள்ள பல வளங்களை இனங்காண வேண்டிய தேவை இன்னும் உள்ளது என தெரிவித்த வடமாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன், அதற்கு துறைசார் நிபுணர்கள் மற்றும் கல்வியாளர்களை ஒன்றிணைத்து பல்பரிமாண சேவை ஒன்றை ஏற்படுத்துவது மிகவும் முக்கியம் எனவும் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் 2018 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின் மீதான விவாதத்தின் 2 ஆம் நாள் அமர்வு நேற்று வடக்கு மாகாண சபையில் நடைபெற்றது. இதில் பாதீட்டு உரை நிகழ்த்தும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தனது உரையில் மேலும் தெரிவிக்கையில் ,

வடமாகாணம் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும் போது வறுமை கூடிய மாகாணமாக உள்ளமை அனைவரும் அறிந்த விடயமாகும். வறுமையினைத் தணித்து மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டிய தார்மீகக் கடப்பாடு எம் அனைவரையும் சார்ந்ததாகும். மக்களுக்கான வாழ்வாதாரத் திட்டங்களை மேம்படுத்தக் கூடிய துறைகளான விவசாயம், கால்நடை வளர்ப்பு, நீர்ப்பாசனம் மற்றும் மீன்பிடி ஆகிய துறைகள் எமது அமைச்சின் நிர்வாகப் பரப்பி னுள் உள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

இத்துறைகளினூடாக பொருளாதார ரீதியாக நன்மை கிடைக்கக்கூடிய திட்டங்களை முன்னெடுத்து நவீன தொழில்நுட்ப முறைகளை அறிமுகம் செய்து பெறுமதி சேர் உற்பத்திப் பொருட்களை உருவாக்க முடியும் இதன்மூலம் உள்நாட்டு சந்தை வாய்ப்பு வசதிகள் மட்டுமன்றி வெளிநாடுகளுக்கு எமது உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்யவும் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்துதல் வேண்டும்.

வாழ்வாதார உற்பத்தி செயற்பாடுகளின் போது அரச-தனியார் பங்களிப்பு மற்றும் முயற்சியாண்மையாளர் பங்களிப்பு என்பவற்றைப் பெற்றுக் கொள்வதுடன் அமைச்சினூடாக உருவாக்கப்பட்டு வரும் விவசாயம், கால்நடை, நீர்ப்பாசனம், சுற்றாடல் மற்றும் மீன்பிடி தொடர்பான நியதிச் சட்டங்கள் மூலம் துறைசார்ந்த கட்டமைப்புக்களை உருவாக்கி சட்டரீதியாக நிர்வாக கட்டமைப்புக்களை பலப்படுத்தி எமது மாகாணத்தின் அபிவிருத்தியை முன்னெடுத்தல் அவசியமானதாகும்.

எமது மூதாதையர்கள் தன்னிறைவுடனும் பாரம்பரியமாகவும் காலங்காலமாகவும் மேற்கொண்டு வந்த எமது மிக முக்கிய வாழ்வாதாரச் செயற்பாடுகளான விவசாயம், கால்நடை வளர்ப்பு, மீன்பிடி ஆகிய துறைகளை அபிவிருத்தி நோக்கிய பாதையில் இட்டுச் செல்ல வேண்டியது காலத்தின் தேவையாகவுள்ளது. எமது மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளுக்கு எமது மாகாணசபை உறுப்பினர்களின் ஆலோசனை, பங்களிப்பு என்பன எமக்கு மிகவும் வேண்டப்படுகின்றது. இன, மத, மொழி, பிரதேச, கட்சி வேறுபாடுகளை மறந்து மக்களின் வறுமை நிலையை தணிப்பதற்கு நாம் அனைவரும் ஒரே நோக்குடனும் ஒரே சிந்தனையுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்பட வேண்டியது மிகவும் முக்கியமானதாகும்.

எமது மாகாணத்தின் அபிவிருத்திக்கு தேவையான எம்மிடமுள்ள வளங்கள் பலவற்றை நாம் இன்னும் இனங்காண வேண்டியுள்ளது. அவற்றில் இருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய வருமான வழிவகைகளையும் உரிய ஆக்கபூர்வமான திட்டங்களை வகுத்து செயற்படுத்த வேண்டிய தேவையும் காணப்படுகின்றது. அரசியல் ரீதியான தலைமைத்துவம், வழிகாட்டல் என்பவற்றுடன் நிர்வாக அதிகாரிகள், அரச பணியாட் தொகுதியினர், கல்வியியலாளர்கள், துறைசார்ந்த நிபுணர்கள், பல்கலைக்கழக கல்வியாளர்கள் என பல்பரிமாண சேவை ஒன்றிணைப் பெற்று எமது மாகாணத்தை அபிவிருத்தி செய்யவேண்டியது மிகவும் முக்கியமானதாகும்.

எமது மாகாணத்தின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு .விவசாயம், கால்நடை வளர்ப்பு, நீர்ப்பாசனம், நன்னீர் மீன் வளர்ப்புத் துறைகளை அபிவிருத்தி செய்வதன் ஊடாக மக்களின் வாழ்வாதாரத்தை அதிகரித்து தனிநபர் வருமானத்தை உயர்த்தி மாகாணத்தில் சுபீட்சமான, நிலைத்து நிற்கக் கூடிய, நிலைபேறான அபிவிருத்தியை ஏற்படுத்த அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என மேலும் அவர் தெரிவித்தார். (4-9)




## முருகப் பெருமானின் படையணியின் தோற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சின்மயா மிஷன் ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யாவால் கந்த புராணம் பற்றிய வாராந்த விளக்கவுரை பிரதி வெள்ளிக்கிழமைகளில் மாலை 6.30 மணி முதல் 7.30 மணிவரை இல. 700, பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள "ஞானவேல்" ஆச்சிரமத்தில் இடம்பெறுகின்றது.

இதில் நாளை வெள்ளிக்கிழமை முருகப் பெருமானின் படையணியின் தோற்றம் என்ற தலைப்பில் விரிவுரை நடைபெறவுள்ளது. (இ-7)

## சிறுவர் செந்தமிழ்ப் பாடல்கள் நூல் வெளியீட்டு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசம் என்பன இணைந்து நடத்தும் சிறுவர் செந்தமிழ்ப் பாடல்கள் நூல் வெளியீட்டு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் ப.நோ.கூ. சங்க மண்டபத்தில் சமாச உப தலைவர் கே.அருட்செல்வம் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளர் சி.பெலிசியன் கலந்து கொள்வார். (இ)

## அபிவிருத்திச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம்

கரவெட்டி மத்தி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் கரவெட்டி மத்தி கிராம மண்டபத்தில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சாந்திகுமார் தலைமையில் இடம் பெறும். (இ-7)



உயர் பாதுகாப்பு வலயமாக இருந்து விடுவிக்கப்பட்ட மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயத்திற்கு புதிய நிழற்பிரதி இயந்திரத்தை வடமாகாண சபை உறுப்பினர் சி.அகிலதாஸ் அண்மையில் வழங்கி வைத்தார்.

## ஆறுமுகநாவலர் மாநாட்டின் நிறைவு நாள் நிகழ்வு நாளை

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மாநாடும் குருபூசை நிகழ்வும் கடந்த 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை நல்லூர் ஸ்ரீதுர்க்காதேவி மணிமண்டபத்தில் ஆரம்பமாகிய அதே வேளை மறுநாள் சனிக்கிழமையும் நிகழ்வுகள் நடைபெற்றன. இதன் நிறைவு நாள் நிகழ்வுகள் நாளை 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நல்லை ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் முன்னிலையல் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் இடம் பெறும். இந் நிகழ்வில் பிரதம விருந்தனராக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, மீள் குடியேற்றம், புனர் நிர்மாணம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், கௌரவ விருந்தினராக மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவைத்தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன், சிறப்பு விருந்தினராக நாவலர் நற்பணி மன்றத் தலைவர் ந.கருணை ஆனந்தன், சைவ மகாசபை பொதுச் செயலாளர் வைத்திய கலாநிதி ப.நந்தகுமார் ஆகியோர் கலந்து கொள்வர். இங்கு "சைவ வினாவிடை", "பாலபாடக்கட்டுரைகள்", ஆறுமுகநாவலர் சரித்திரம் போன்ற நூல்கள் வெளியீட்டு நிகழ்வும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் வரலாற்று அறிவுப் போட்டியில் திறமையை வெளிக்காட்டிய மாணவர்களைப் பாராட்டும் நிகழ்வும் இடம்பெறும். (இ-7)

## சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



கிளிநொச்சி மாவட்ட செயலக உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தரும் தேசாபிமானிய, தேசபந்து.சாமதேசகீர்த்தி போன்ற விருதுகளைப் பெற்றுக்கொண்டவரும் யாழ். பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவப்பட்டப் படிப்பை மேற்கொண்டவரும் யாழ். சென் ஜோசப் மகா வித்தியாலயம், யாழ்.சென் பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவருமான யாழ்.பாசையூர் சென் செபஸ்ரியன் வீதியைச்சேர்ந்த மரியதாஸ் ரிறோன், யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.(இ-7)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பெரியபுலம் மகா வித்தியாலயத்தின் 195 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கனகசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது என வித்தியாலய அதிபர் ந.பரமேஸ்வரன் அறிவித்துள்ளார். (இ-7)

## தென்மராட்சி பிரதேசத்தில் இயங்கி வந்த பிரமிட் வியாபாரத்திற்கு தடையுத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - தென்மராட்சிப் பிரதேசத்தில் 'குளோபல் லைவ்ரைல் லங்கா தனியார் நிறுவனம்' மேற்கொண்டு வந்த 'பிரமிட்' முறையிலான வியாபாரத்திற்கு சாவகச்சேரி நீதிமன்றம் தற்காலிக தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

சாவகச்சேரிப் பொலிஸாரால் நேற்று முன்தினம் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை ஆராய்ந்த சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

குறித்த குளோபல் லைவரைல் லங்கா தனியார் நிறுவனமானது 'நெற்வேக் மார்க்கெற்றிங்" என்ற அடிப்படையில் வாடிக்கையாளரைச் சேர்த்து அந்த வாடிக்கையாளர் மூலம் வேறு நபர்களையும் வாடிக்கையாளர்களாக கொண்டுவர வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் தமது வியாபார நடவடிக்கையை பண ரீதியாக மேற்கொண்டு வந்தது.

முகத்தோற்றமளவில் இது பிரமிட் முறையிலான வியாபார நடவடிக்கையாகத் தெரியவருவதாகவும், அதனால், குளோபல் லைவ்ரைல் லங்கா தனியார் நிறுவனம் தனது வியாபார நடவடிக்கையை தற்காலிகமாக நிறுத்த உத்தரவிடுவதாக நீதி மன்றம் தெரிவித்துள்ளது.

அத்துடன், நிதி குற்றவியல் விசாரணைப் பிரிவினருக்கும் இந்த விடயந் தொடர்பாக நிறுவனத்தின் பதிவுப் பிரதிகளை அனுப்பி அறிக்கை சமர்ப்பிக்கக் கோருமாறும், இலங்கை மத்திய வங்கியின் ஆளுநருக்கு அறிவித்து வாடிக்கையாளர்களுக்கு பாதகம் ஏற்படாத வகையில் பொதுநலன்கருதி ஏற்ற நடவடிக்கை எடுக்க கடிதங்களை அனுப்புமாறும் பதிவாளருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும்.இந்த விடயந் தொடர்பாக பொலிஸ்மா அதிபர், வட பிராந்திய பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கு அறியத்தருமாறு சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பணிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், அனுமதியளிக்கப்படாத இந்த வியாபார நடவடிக்கைக்கு கூட்டங்களை நடத்துவதற்கு குறித்த நிறுவனத்திற்கு மண்டபம் வழங்கிய உரிமையாளர் மற்றும் ஏனைய வசதிகளை செய்துகொடுத்தோரிடம் வாக்கு மூலங்களை பதிவு செய்யுமாறும் பொலிஸாருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இவ்விடயந்தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்த நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குட்பட்ட பிரதேச செயலர், கிராம சேவையாளர்கள் அனைவரும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (இ-4-9)

# பொது அறிவித்தல் - 2018

## கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி

**01. படவரைஞரைப் பதிவு செய்தல்**

2018ஆம் ஆண்டு சபையின் படவரைஞராகப் பதிவு செய்வதற்கு விரும்புவோரும். ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும். 2018 ஆம் ஆண்டு தை மாதம் 31ம் திகதிக்கு முன்னர் தங்கள் பதிவுகளை கரைச்சிப் பிரதேச சபையில் மேற்கொள்ளவும். புதுப்பித்துக் கொள்வோர் கரைச்சிப் பிரதேச் சபையின் உப அலுவலகத்துடன் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

**02. வியாபார உரிம அனுமதிப்பத்திரம்-2018**

கரைச்சிப் பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் மற்றும் பிரதேசத்திற்குள் பொருட்களை விநியோகிப்போர் உரிய விண்ணப்பப்படிவத்தை கரைச்சிப் பிரதேச சபையின் கிளிநொச்சி, முரசுமோட்டை உப அலுவலகங்களில் 2018 ஆம் ஆண்டு தை 15 ஆம் திகதிக்குள் பெற்று அதனை பூரணப்படுத்தி சம்பந்தப்பட்ட உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 2018.02.28 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி வியாபார அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளவும். 2018.03.31 ஆம் திகதிக்கு முன்னர் வியாபார அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**03.சூழல் பாதுகாப்பு உரிமம் (EPL-2018)**

கரைச்சிப் பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் சிறிய மற்றும் நடுத்தர வியாபார/ தொழில் முயற்சிகளில் ஈடுபடும் சகலரும் உப அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு சூழல் பாதுகாப்பு உரிமத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். சூழல் பாதுகாப்பு உரிமத்தை பெற்றுக்கொள்ளாது 2018 ஆம் ஆண்டில் மேற்குறிப்பிட்ட வியாபார/தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத் தருகின்றேன்.

**04. துவிச்சக்கர வண்டி ,விலங்கு உரிமம்**

கரைச்சிப் பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் துவிச்சக்கர வண்டிகள், வளர்ப்பு நாய்கள் வைத்திருப்போர் 2018.03.31 ஆம் திகதிக்கு முன்னர் சம்பந்தப்பட்ட உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களைச் செலுத்தி 2018 ஆம் ஆண்டிற்கான வாகன, விலங்கு உரிமங்களைப் பெற்றுக்கொள்ளவும்.

**05. வீடுகள், கட்டடங்கள், மதில்கள், மலசலகூடங்கள், கிணறுகள் அமைத்தலும், புதுப்பித்தல் /திருத்த வேலைகள் செய்தலும்**

5.1) எமது நிர்வாகத்திற்குட்பட்ட பிரதேசத்தில் மேற்படி அமைப்பு/புனரமைப்பு வேலைகளை அனுமதியின்றி மேற்கொள்ளல் வீடமைப்பு நகரசீர்திருத்த கட்டளைச்சட்டம் பிரிவு-268 இன் பிரகாரம் தண்டனைக்குரிய குற்றமாகும். எனவே உரிய விண்ணப்பப்படிவங்களை சம்பந்தப்பட்ட உப அலுவலகங்களில் பெற்று சபையின் முன்னனுமதியினை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு முன்னனுமதி பெறப்படாத கட்டடங்கள் யாவும் எவ்வித நட்டஈடும் வழங்கப்படாது அனுமதியற்ற கட்டடமாகக் கருதி சபையினால் அகற்றப்படுவதுடன் அதற்கான தண்டப்பணத்தையும் சபைக்குச் செலுத்த வேண்டும்.

5.2) ஏற்கனவே அனுமதி பெற்று ஒரு வருடகாலத்தில் கட்டட வேலைகள் பூர்த்தியாகாத விடத்து அவ் விண்ணப்பதாரிகள் அனுமதியினை புதுப்பித்துக்கொள்வதோடு கட்டடத்தினை பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள் உரிய அமைவுச்சான்றிதழை உரிய காலத்தில் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**06. வீதி ஒழுங்கினைப் பேணல்**

கிளி.நகர மையப் பகுதியில் போக்குவரத்து அதிகரித்துள்ள நிலையில், விபத்துக்களை தவிர்த்துக் கொள்ளும் முகமாக வியாபார நிலையங்களுக்கு முன்னால் பொருட்களை வெளியே வைத்து விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது. இவ்வறிவித்தலை பின்பற்றி செயற்படுமாறு வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு அறியத்தருகின்றேன்.

**07.விளம்பரப் பலகைகளை அமைத்தல்/காட்சிப்படுத்தல்**

கரைச்சிப் பிரதேச சபையின் நிர்வாக பிரிவில் உள்ள பொது வீதிகளின் இரு மருங்கிலும் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் பொருத்தப்படும்/காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களுக்கு 2018.02.16 ஆம் திகதிக்கு முன்னர் உரிய கட்டணத்தைச் செலுத்தி சபையின் அனுமதியினை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அனுமதி பெறப்படாத முகவர்கள்/நிறுவனங்கள்/வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு அவ்விளம்பரங்களை உரிய நிலையங்களிலிருந்து 2018.03.31ஆம் திகதிக்குப் பின் அகற்றுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**கட்டண விபரம் பின்வருமாறு (வரி தவிர்ந்த)**

| தொ.இல | விபரம் | பிளாஸ்ரிக் (1 சதுரஅடி) | துணி (சதுர அடி) |
|---|---|---|---|
| 1 | தனியார் வளைவுகளில் நிர்மாணிக்கப்படும் அல்லது காட்சிக்கு வைக்கப்படும் விளம்பரப் பலகைகள் | ரூபா 50.00 | ரூபா 25.00 |
| 2 | பிரதான பாதைக்கு தெரியக்கூடிய இடத்தினை பயன்படுத்தி பிரதான பாதைக்கு அருகில் நிர்மாணிக்கப்படும் அல்லது காட்சிப்படுத்தப்படும் விளம்பரப் பலகைகள் | ரூபா 60.00 | ரூபா 30.00 |
| 3 | உள்ளூராட்சி மன்றங்களின் வளைவுகளை பயன்படுத்திய வண்ணம் நிர்மாணிக்கப்படும் விளம்பரப் பலகைகள் | ரூபா 100.00 | ரூபா 50.00 |

**08.பொது இடங்களில் கழிவுகள் போடுதல் தொடர்பான அறிவித்தல்**

கரைச்சிப் பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசங்களில் கழிவுப்பொருட்களை அனுமதியின்றிக் கொண்டு செல்லல், கொட்டுதல் ஆகியன பொதுச் சுகாதாரத்தினை கருத்திற் கொண்டு தடைசெய்யப்பட்டுள்ளது. தவறின் பிரதேச சபையின் சட்டம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புச்சட்டம் போன்றவற்றின் பிரகாரம் சட்டநடவடிக்கை எடுக்கப்படும்.மேலும் தங்களினால் அகற்றப்படும் திண்ம, திரவக் கழிவுகள் பிரதேச சபையின் வாகனங்களினூடாகவே அகற்றப்படுதல் வேண்டும். உணவகங்களை நடாத்துவோர் தமது திரவக்கழிவு நீரை வீதியின் பொது கால்வாய் வழியாக திறந்து விடுவதனால் பொது மக்களுக்கு அசௌகரியமும், டெங்கு பரவும் அபாயமும் காணப்படுவதனால் மேற்படி செயற்பாட்டை மேற்கொள்பவர்களின் உணவகங்கள் பூட்டப்படுவதுடன் சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படும்.

**09. தரகர் முறை நீக்கல்**

எமது பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சந்தைகளில் தரகர் மூலமான நடைமுறை முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது. இதனை கருத்திற் கொண்டு செயற்படுமாறு வியாபாரிகள் வேண்டப்படுகின்றனர்.

**10.நடைபாதை வியாபாரம் தடை செய்யப்பட்டுள்ளது.**

கரைச்சிப் பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் அனைத்து விதமான நடைபாதை வியாபாரங்களும் தடை செய்யப்பட்டுள்ளன. மீறுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

கணேசன் கம்ஸநாதன்,
செயலாளர்,
பிரதேசசபை கரைச்சி, கிளிநொச்சி.

(க-679)

# சிகரம் பணிப்பாளர் கோ.றுஷாங்கன் தொழில் முனைவோர் விருது வென்றார்



(கொழும்பு)

சிகரம் நிறுவனத்தின் பணிப்பாளர் கோடீஸ்வரன் றுஷாங்கன் இலங்கையின் மிகப்பெரிய வரத்தக ஒன்றிய மான வர்த்தக கைத்தொழில் மன்றங்களின் ஒன்றியத்தின் 2017ம்ஆண்டுக்கான இலங்கை தொழில்முனைவோர் விருது வென்றுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை கொழும்பு சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற 2017 ஆம் ஆண்டுக்கான இலங்கை தொழில் முனைவோர் விருது வழங்கும் விழாவில் அவர் இந்த விருதைப் பெற்றுக்கொண்டார்.

யாழ்.இந்துக் கல்லூரி பழைய மாணவரான இவர், யாழ்.பல்கலைக்கழகத்தில் நாடகமும், அரங்கியலும் துறையில் முதற்பிரிவில் சித்திபெற்று பட்டதாரி ஆனதுடன், தொடர்ந்து சர்வதேச உறவுகள் துறையில் பட்டமேற்படிப்பு டிப்ளோவை பெற்று தற்போது கொழும்பு திறந்த பல்கலைக்கழகத்தில் அபிவிருத்திக் கற்கைகள் துறையில் முதுமாணி பட்டக்கல்வியைத் தொடர்ந்து வருகிறார்.

2009 ஆம் ஆண்டு முதல் யாழ்ப்பாணத்திலிருந்து வடக்கு மாகாணம் தழுவிய அளவில் கல்வி-தொழில் வழிகாட்டி சேவையை வழங்கிவரும் சிகரம் நிறுவனம், தொழில் மையமான கல்வி கற்று வேலை வாய்ப்புக்கள் பெற இளைஞர்களை தொடர்ச்சியாக ஊக்குவித்து வருகிறது.

2012ம் ஆண்டு இலங்கையின் முதல் தமிழ் மொழியிலான கல்வி-தொழில் வழிகாட்டி கையேட்டை வெளியிட்ட பெருமையைக் கொண்ட சிகரம் நிறுவனம், தொடர்ச்சியாக பாடசாலைகள், பிரதேச செயலகங்கள், சனசமூக நிலையங்கள் தோறும் கல்வி-தொழில் வழிகாட்டி கருத்தரங்குகளையும், சர்வதேச கல்விக் கண்காட்சிகள் மற்றும் கருத்தரங்குகளையும் நடத்தி வருகிறது.

2012 முதல், உலகளவில் மிக அதிகளவு வேலைவாய்ப்புக்கள் குவிந்துள்ள சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவத் துறையில் உள்நாட்டு, வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஏற்பாடுகளுடன் இளைஞர், யுவதியருக்கு பயிற்சி வழங்குவதில் முன்னோடி நிறுவனமாகவும் திகழ்ந்து வரும் சிகரம் நிறுவனம், மத்திய கிழக்கு நாடுகளில் காணப்படும் வேலைவாய்ப்புக்களை வடக்கு மாகாண இளைஞர், யுவதியருக்குப் பெற்றுக் கொடுக்கும் பாதுகாப்பான ஏற்பாடுகளையும் அண்மைக்காலமாக மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
சூரிசெவ் 11 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்
தொ.இ: B/8053

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா: செவ் 1 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:A/L/சொந்ததொழில்
தொ.இ: B/8055

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: மகம்
சூரிசெவ் 11 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:O/L/வியாபாரம்
தொ.இ: B/8056

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: செவ் 1 இல
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:O/L/காவலாளி(அரச)
தொ.இ: B/8059

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்:அவிட்டம்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/7324

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 5
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: MBBS/ Demo
தொ.இ: G/7326

பிறப்பு: 1972 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: MSc
தொ.இ: G/7327

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 20
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BSc, MBA/வங்கியாளர்
தொ.இ: G/7329

கல்யாணமாலை
இல. 144, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 222 5484
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# 57 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டில் 13 சிறிய நீர்ப்பாசனக் குளங்கள் புனரமைப்பு

## முல்லை.மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள அலுவலகத் தகவலின்படி

(மல்லாவி)

மத்திய அரசின் கீழ் உள்ள கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் 57.14 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டில் முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்குட்பட்ட ஒட்டுசுட்டான், பாண்டியன்குளம், ஒலுமடு, முள்ளியவளை ஆகிய கமநல சேவை நிலையங்களிற்குட்பட்ட 13 சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வருவதாக முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மத்திய அரசின் கீழ் உள்ள கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் நடப்பாண்டுக்குரிய 57.14 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டில் முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்குட்பட்ட 13 சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் புனரமைப்பு வேலைகளுக்காக பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, பாண்டியன்குளம் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட செம்பர் குளம், பரப்புக்கல்குளம், கும்மாங்குளம் ஆகிய 03, குளங்களின் புனரமைப்புக்காக தலா 4.11 மில்லியன் ரூபா வீதம் 12.33,மில்லியன் ரூபாவும் உயிலங்குளம் புனரமைப்புக்காக 03, மில்லியன் ரூபாவுமாக மொத்தம் 15.33, மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இதேபோன்று, ஒலுமடு கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட பனை நின்றான் குளம், மரக்குற்றிக் குளம் ஆகிய குளங்களின் புனரமைப்பு வேலைகளுக்கு தலா 05, மில்லியன் ரூபா வீதம் மொத்தம் 10, மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட வேப்பன்குளம் 04, மில்லியன், ஏம்பல் குளம் 05 மில்லியன், அம்பலவன் பற்றுக் குளம் 4.96, மில்லியன், சேகண்டிக் குளம் 4.17 மில்லியன், குஞ் சுப் பருத்திகுளம் 4.73, மில்லியன், பனிச்சை முறிப் புக் குளம் 3.97, மில்லியன் ரூபாவுமாக மொத்தம் 26. 83 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

முள்ளியவளை கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட சமரவயல் குளத்தின் புனரமைப்பு 4.96 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் வேலைகள் நடைபெற்று வருவதாகவும் முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

வன்னி வலம்

# நீதிமன்ற அபராதங்கள்

(கண்டாவளை)

முல்லைத்தீவு பகுதியில் இயற்கைச்சூழலை பாதிக்கும் வகையில் குப்பைகளைப்போட்ட ஐந்து சாரதிப்பயிற்சிப் பாடசாலைகளுக்கு தலா இருபத்து ஐயாயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு பகுதியை அண்மித்த பகுதியில் உள்ள ஆற்றுப்பகுதியின் இயற்கைச்சூழலை மாசுபடுத்தும் வகையில் அப்பகுதியில் சாரதி பயிற்சியை வழங்கி வரும் ஐந்து சாரதிப் பயிற்சி நிலையங்களால் இயற்கைச்சூழலை மாசுபடுத்தும் வகையில் குப்பைகள் போடப்பட்டது தொடர்பில் பொதுச்சுகாதார பரிசோதகரால் ஐந்து சாரதிப்பயிற்சிப் பாடசாலைகளுக்கு எதிராக வழக்குப்பதிவு செய்யப்பட்டு குறித்த ஐந்து பேரையும் நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் சம்சுதீன் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து ஒவ்வொருவருக்கும் தலா இருபத்து ஐயாயிரம் ரூபா தண்டபணம் விதிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

முல்லைத்தீவு நகரை அண்மித்த பகுதியில் காலாவதியான உணவுப்பொருட்களை விற்பனைக்காக காட்சிப்படுத்திய இரண்டு வர்த்தகர்களுக்கு தலா ஐயாயிரம் ரூபா வீதம் தண்டப்பணம் விதிகப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு நகரை அண்மித்த பகுதியில் பொது சுகாதார பரிசோதகர் ஆ.சுரேஸ்சானந்தன் தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின்போது காலாவதியான உணவுப்பொருட்களை விற்பனைக்காக காட்சிப்படுத்திய இரண்டு வர்த்தகர்கள் இனங்காணப்பட்டு இவர்களுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்த பொதுச்சுகாதார பரிசோதகர் குறித்த இருவரையும் நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் சம்சுதீன் முன்னிலையில் தனித்தனியாக ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த இரண்டு பேருக்கும் தலா ஐயாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் கடுமையாக எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

முல்லைத்தீவு நகரில் இயங்கி வரும் உணவகம் ஒன்றின் குளிர்சாதனப்பெட்டிக்குள் அட்டை காணப்பட்டதையடுத்து குறித்த வர்த்தகருக்கு இருபதாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன், கடுமையாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு நகரை அண்மித்த பகுதியில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது உணவகத்தின் பாவனையில் இருந்த குளிர்சாதனப்பெட்டிக்குள் அட்டை காணப்பட்டதையடுத்து குறித்த வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குப்பதிவு செய்த பொதுச்சுகாதார பரிசோதகர் நேற்று முன்தினம் குறித்த நபரை முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் சம்சுதீன் முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து இருபதாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் கடுமையாக எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளார். (2-315)

# உதவிட முனைந்தவரின் கைத்தொலைபேசி வழிப்பறிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு பரந்தன் ஏ-35 வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவரை மூவர் வழிமறித்து பெற்றோல் தருமாறு கேட்டு அவரது கைத்தொலைபேசியை பறித்துச் சென்ற சம்பவம் ஒன்று நடைபெற்றுள்ளது.

முல்லைத்தீவு பரந்தன் ஏ-35 வீதியின் முரசுமோட்டை பகுதியில் நேற்று முன்தினம் இரவு மோட்டார் சைக்கிளில் பயணித்த அரச உத்தியோகத்தர் ஒருவரை மோட்டார் சைக்கிளுடன் நின்ற மூன்று பேர் வழிமறித்து தங்களது மோட்டார் சைக்கிள் பெற்றோல் இன்றி வீதியில் நிற்பதாகவும் சிறிது பெற்றோல் தருமாறும் குறித்த உத்தியோகத்தரிடம் கேட்டனர். மனிதாபிமானத்துடன் செயற்பட்ட அவர் தனது மோட்டார் சைக்கிளில் இருந்த பெற்றோலை எடுத்துக் கொடுக்க முற்பட்டபோது, அவரது 75 ஆயிரம் ரூபா பெறுமதியான கைத்தொலைபேசியைப் பறித்ததுடன், அவரைத் தாக்கி அவரிடமிருந்த பணப்பையைப் பறிக்க முயற்சித்தபோது குறித்த உத்தியோகத்தர் அவ்விடத்திலிருந்து தப்பிச்சென்ற சம்பவம் ஒன்று நடைபெற்றுள்ளது. (2-315)



சமூக சேவையாளர்களும் சுவிஸ்வாழ் புலம்பெயர் ஈழத்தமிழருமான அமரசிங்கம் வானதி குடும்பத்தினர் தமது மகன் ரிசியின் 13 ஆவது மற்றும் மகள் அயிசானியின் 12 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு வாழ்வாதார உதவிகளை வழங்கினர். தாயக மீட்பிற்கான போராட்டத்தில் ஈடுபட்டு உடல் முழுவதும் 6க்கு மேற்பட்ட விழுப்புண்களைத்தாங்கி இறுதியில் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிக்கு வாழ்வாதார உதவியாக பசுமாடும் கன்றும் வழங்கப்பட்டதுடன் அவற்றுக்குரிய பராமரிப்புப் பொருட்களும் தாயகம் எங்கும் பசுமையின் விடியல் செயற்றிட்டத்தின் கீழ் பயன்தரு மரக்கன்றுகளையும் யாழ்.எய்ட் ஊடாக வழங்கி வைத்துள்ளனர்.இந் நிகழ்வுகள் அண்மையில் விசுவமடு றெட்பானா பகுதியில் வைத்து வழங்கினர்.

# நீதிமன்ற அபராதங்கள்

(கண்டாவளை)

கிளிநொச்சியின் பல்வேறு பகுதிகளிலும் அனுமதிப் பத்திரமின்றியும் அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறியும் மணல் ஏற்றிச்சென்ற ஏழு பேருக்கு இரண்டு இலட்சத்து நாற்பதாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன், மணல் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

டிப்பர் வாகனத்தில் அனுமதிப்பத்திரமின்றி மணல் கொண்டு சென்றவருக்கு 80 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் டிப்பர் வாகனத்தில் அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறி மணல் கொண்டு சென்றவருக்கு 40 ஆயிரம் ரூபாவும், என ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று அனுமதிப்பத்திரமின்றி உழவு இயந்திரங்களில் மணல் ஏற்றிச்சென்ற நான்கு பேருக்கு தலா இருபத்து ஐயாயிரம் ரூபா வீதம் ஒரு இலட்சம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அனுமதிப்பத்திர நிபந்தனையை மீறி உழவு இயந்திரத்தில் மணல் கொண்டு சென்றவருக்கு இருபதாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பல்வேறு பகுதிகளிலும் மணல் அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறியும் அனுமதிப்பத்திரமின்றியும் மணல் ஏற்றிச்சென்ற ஏழு பேரைக்கைது செய்து அவர்களுக்கு எதிராக வழக்குப்பதிவு செய்த பொலிஸார் குறித்த ஏழு பேரையும் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் கடந்த 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆஜர்படுத்தியதையடுத்து மேற்படி தண்டப்பணங்கள் விதிக்கப்பட்டுள்ளன.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

கிளிநொச்சிப் பகுதியின் வழித்தட அனுமதியின்றி பேருந்தை செலுத்திச்சென்ற இரண்டு பேருக்கு தலா பத்தாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிப் பகுதியில் வழித்தட அனுமதியின்றி பயணிகள் பேருந்தைச் செலுத்திச்சென்ற இரண்டு பேரைக் கைது செய்து அவருக்கு எதிராகப்பதிவு செய்த பொலிஸார் குறிந்த இருவரையும் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து இரண்டு பேருக்கும் தலா பத்தாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

கிளிநொச்சி பகுதியில் அனுமதிப்பத்திரமின்றியும் சாரதியனுமதிப்பத்திரமின்றியும் மணல் கொண்டு சென்றவருக்கு 36 ஆயிரம் தண்டப்பணம்விதிக்கப்பட்டதுடன், பத்து நாட்கள் சமூக சேவையில் ஈடுபடுமாறும் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சிப்பகுதியில் சாரதியனுமதிப்பத்திரமின்றியும் மணலுக்கான அனுமதிப்பத்திரமின்றியும் மணல் ஏற்றிச்சென்ற ஒருவரை கைது செய்த கிளிநொச்சிப் பொலிஸார் குறித்த நபருக்கு எதிராக வழக்குப்பதிவு செய்து குறித்த நபரை கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் கடந்த 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆஜர்படுத்தியதையடுத்து 36 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன் சமுதாயம் சார் சீர்திருத்தக்கட்டளைச்சட்டத்தின் கீழ் பத்து நாட்கள் சமூக சேவையில் ஈடுபடுமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

முல்லைத்தீவு முள்ளியவளைப்பகுதியில் அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறி உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிய இருவருக்கு தலா பத்தாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு முள்ளியவளைப் பகுதியில் அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறி உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிச்சென்ற இரண்டு பேரையும் உழவு இயந்திரங்களையும் கைது செய்து அவர்களுக்கு எதிராக வழக்குப்பதிவு செய்த பொலிஸார் குறித்த இருவரையும் நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் சம்சுதீன் முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த இருவருக்கும் தலா பத்தாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன், மணல் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

முல்லைத்தீவு முள்ளியவளைப் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிச்சென்றவருக்கு ஐம்பதாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது .

முல்லைத்தீவு முள்ளியவளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிச்சென்ற ஒருவரைக் கைது செய்து அவருக்கு எதிராக வழக்குப்பதிவு செய்த பொலிஸார் குறித்த நபரை நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் சம்சுதீன் முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து ஐம்பதாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன், மணல் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. (2-315)

# வவுனியா நீதிமன்றக் கட்டடத்தொகுதியில் மழலைகள் மகிழ்வகம், வாகனத் தரிப்பிடம்

## நேற்று திறந்து வைப்பு



(குருமன்காடு)

வவுனியா நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் மழலைகள் மகிழ்வகம், வாகனத் தரிப்பிடம் என்பன நேற்று திறந்து வைக்கப்பட்டன.

வவுனியா நீதிமன்றில் "தாபரிப்பு" குடும்பப் பிணக்குகள் வழக்குகளிலும், வேறு வழக்குகளிலும் வருகை தரும் பொதுமக்கள் தமது பிள்ளைகளை நீதிமன்றினுள் அமைதியாக வைத்துக் கொண்டிருப்பது என்பது சாத்தியமற்ற விடயமாகக் காணப்பட்டது.

இதனால் நீதிமன்றமும், பிள்ளைகளின் பெற்றோரும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்க நேரிட்டது.

இப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் முகமாக, "யுனிசெப்" அமைப்பினால் சர்வ தேச சிறுவர் தினம் - 2017 எனும் செயற்றிட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட தளபாடங்களைக் கொண்டு, நீதி அமைச்சின் அனுசரணையுடன், வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசி மகேந்திரனின் வழிகாட்டலின் கீழ் உருவாக்கப்பட்ட "மழலைகள் மகிழ்வகம்" வவுனியா மாவட்ட நீதிமன்ற நீதிபதி செல்வநாயகம் லெனின்குமார், வவுனியா மேலதிக மாவட்ட நீதிபதி தஸ்னீம் பௌஷான், வலயக் கணக்காளர் திருமதி ஜீவா சுகந்தன், முன்னாள் வவு னியா மேல் நீதிமன்றப் பதி வாளர் ஜனாப் என்.எம். அபூபக்கர் ஆகியோர் முன்னிலையில் ஜனாதிபதி சட்டத்தரணி முருகேசு சிற்றம்பலம், சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.ரி. கங்காதரன் ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது.

இதேவேளை, வவுனியா நீதிமன்ற வளாகத்தினுள் சட்டத்தரணிகளுக்கான, வாகனத் தரிப்பிட இடவசதியின்மை என்பது நீண்டகாலமாக எதிர்நோக்கப்பட்ட பிரச்சினையாக காணப்பட்டது.

அதற்குத் தீர்வுகாணும் வகையில் நீதிமன்றிற்கு அருகில் அமைந்துள்ள மன்றுக்குச் சொந்தமான வெற்றுக் காணியை சட்டத்தரணிகளின் வாகனத் தரிப்பிடம் அமைப்பதற்கு ஏதுவாகக் கால்கோளிடும் நிகழ்வு வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் தலைமையில், வவுனியா நகரசபைச் செயலாளர் இ.தயாபரனினால் தொடங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் நீதிபதிகள், சட்டத்தரணிகள், நீதிமன்ற உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (2-250)

## தேர்தலில் போட்டியிட கட்டுப்பணம் செலுத்தியது த.தே.ம.முன்னணி

(கண்டாவளை)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கிளிநொச்சி மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக தமிழ் தேசிய மக்கள் முன்னணி நேற்று கிளிநொச்சியில் கட்டு ப்பணத்தை செலுத்தியது. கிளிநொச்சியில் உள்ள கரைச்சி பசசிலைப்பள்ளி பிரதேச சபைகளிற்கான கட்டுப்பணத்தை கிளி நொச்சி தேர்தல்கள் அலுவலகத்தில் செலுத்தினர். (2-312)

## அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கிளிநொச்சியில் போட்டியிட கட்டுப்பணம்



(பரந்தன்)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் நேற்று முற்பகல் கிளிநொச்சியில் கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட தேர்தல் செயலகத்தில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் கிளிநொச்சி அமைப்பாளர் ஜெகதீஸ்வரன் தலைமையில் கரைச்சி, பூநகரி, பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கான கட்டுப் பணம் செலுத்தப்பட்டுள்ளது. (2-312)

## வவுனியாவில் கட்டுப்பணம் செலுத்தியது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

(குருமன்காடு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக வவுனியா மாவட்டத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கூட்டு அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியினர் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் உள்ள தேர்தல்கள் திணைக்களத்தில் குறித்த கட்சி நேற்று முன்தினம் தனது கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளது. கட்சியின் மாவட்ட அமைப்பாளர் மயூரன் தலைமையிலான குழுவினரே குறித்த கட்டுப்பணத்தை செலுத்தினர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வவுனியா மாவட்டத்தில் வவுனியா நகரசபை, செட்டிகுளம் பிரதேச சபை, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, வவுனியா வடக்கு பிரதேச சபை என்பவற்றில் போட்டியிடவுள்ளது. (2-250)

## முல்லைத்தீவு நகரில் கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் பிரதேசசபையினர்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு நகரில் கால்நடை வளர்ப்போர் தமது கால்நடைகளைக் கட்டுப்படுத்த தவறும் பட்சத்தில் எதிர்வரும் நாட்களில் கால்நடைகள் பிரதேச சபையினரால் பிடிக்கப்பட்டு நீதிமன்றில் ஒப்படைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபையினரால் நகரின் வீதிப் புறங்களில் காணப்படும் கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட நகரில் கட்டாக்காலி கால்நடைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ள நிலையில் அவற்றை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபையினர் ஈடுபட்டுள்ளனர்.

இதன் அடிப்படையில் கடந்த 11 ஆம் திகதி இரவு முல்லைத்தீவு நகரில் கட்டாக்காலிகளாக வீதியில் திரிந்த நான்கு மாடுகள், ஐந்து ஆடுகள் என்பன பிடிக்கப்பட்டு பிரதேச சபையில் கட்டி வைக்கப்பட்டுள்ளன.

இந்த கால்நடைகளின் உரிமையாளர்கள் தண்டப்பணம் செலுத்தி கால்நடைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இதே வேளை இனிவரும் நாட்களில் முல்லைத்தீவு நகரில் கால்நடைகளை கட்டுப்படுத்த தவறும் உரிமையாளர்களின் கால்நடைகள் பிரதேச சபையினரால் பிடிக்கப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (2-281)

## உள்ளூராட்சி தேர்தல் நடைமுறைகள் குறித்து விளக்கமளிக்கும் கலந்துரையாடல்

(பனிக்கன்குளம்)

எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தல் தொடர்பில் புதிய நடைமுறைகள் மற்றும் வாக்கு போடுவது தொடர்பில் அரச அதிகாரிகளுக்கு விளக்கமளிக்கும் கலந்துரையாடல் நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றுள்ளது.

மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் மாவட்ட செயலக அரச உத்தியோகத்தர்கள் மற்றும் முல்லைத்தீவு நகரில் உள்ள அரச திணைக்களங்களைச் சேர்ந்த 130 வரையான அரச உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு பயனடைந்துள்ளார்கள்.

இந்நிகழ்வில் புதிய தேர்தல் நடைமுறைகள் தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட உதவி தெரிவத்தாட்சி அலுவலகர் கா.காந்தீபன் கலந்து கொண்டு விளக்கமளித்துள்ளார்.

இதேவேளை தேர்தல் விதிமுறைகள் மற்றும் மக்கள் வாக்களிப்பது தொடர்பில் உத்தியோகத்தர்கள் மற்றும் அரசியல் ஆர்வலர்களுக்கு தொடர்ந்து விளக்கமளிக்க ஏற்பாடாகி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (2-281)






## தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிப்பு

செம்பன்குண்டு அ.த.க. பாடசாலையில் இருந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றி முதல்முறையாக பாடசாலையில் சித்தியடைந்த மூன்று மாணவர்களுக்கான பாராட்டு விழா கடந்த 7 ஆம் திகதி பாடசாலை அதிபர் இ.கலைச்செல்வன் தலைமையில் நடைபெற்றது.

மூன்று மாணவர்களுக்கும் வங்கியில் ஒரு தொகை கட்டுபணம் வைப்பிலிடப்பட்டு வங்கிப் புத்தகங்களும் பரிசில்களும் வழங்கப்பட்டன. 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கும் பரிசுப்பொருட்கள் வழங்கப்பட்டன. இதேவேளை நிகழ் பாடசாலைச் செயற்பாடுகளில் சிறப்பாக பங்குபற்றிய மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டனர். (2-84)

## கிரவல் வீதிக்கு தார் போடும் வேலைகளை நிறுத்தி உரிய முறையில் செப்பனிடுங்கள்



(பனிக்கன்குளம்)

வவுனியா சூடுவெந்தபுலவு பகுதியிலிருந்து நேரியகுளம் செல்லும் பகுதியிலுள்ள கிரவல் வீதிக்கு தார் போடப்பட்டு வீதி செப்பனிடப்பட்டு வருகின்றது.

வவுனியா சூடுவெந்த புலவு பகுதியிலிருந்து நேரியகுளம் செல்லும் வீதியில் பாவற்குளம் வைத்தியசாலையிலிருந்து சுமார் இரண்டு கிலோ மீற்றர் நீளத்திற்கு வெறும் கிரவல் வீதிக்கு தார் போட்டு வீதி செப்பனிடப்பட்டு வருகின்றது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பூரண கட்டுப்பாட்டிலுள்ள குறித்த வீதி சரியான முறையில் செப்பனிடப்படவில்லை. மழை பெய்யும் போது மழைநீரில் தார் கழுவிச் சென்றுவிடும் என்றும் குறித்த வீதியை சரியான முறையில் செப்பனிடப்படல் வேண்டுமே தவிர அவசர வேலையின் நிமித்தம் இவ்வாறு மேற்கொள்வதால் திரும்பவும் குறித்த வீதி செப்பனிடப்பட வேண்டும். இதன்காரணமாக செலவுகளே அதிகரிக்க வாய்ப்புக்கள் உள்ளன.

எனவே குறித்த வீதி செப்பனிடும் பணிகளை நிறுத்தி உரிய முறையில் வீதியைச் செப்பனிட்டுத் தருமாறு அப்பகுதியிலுள்ள சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (2-250)

## விவசாயிகளுக்கு மருந்து தெளிகருவிகள்

(மல்லாவி)

உலக தரிசனம் நிறுவனத்தின் நிதி உதவியுடன் முள்ளியவளை கமநல சேவை நிலையத்தின் ஒழுங்கமைப்பில் முள்ளியவளை வடக்கு, புதரிகுடா, வற்றாப்பளை ஆகிய மூன்று கிராம அலுவலர் பிரிவுகளுக்குட்பட்ட கமக்கார அமைப்புக்களின் கீழுள்ள விவசாயிகளுக்கு பயன்படும் வகையில் ஒன்பது மருந்து தெளிகருவிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.



இந் நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை ஒன்பது மணியளவில் முள்ளியவளை கமநல சேவை நிலையத்தின் ஒன்று கூடல் மண்டபத்தில் முள்ளியவளை கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் இ.சுகந்தன் தலைமையில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, முள்ளியவளை கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட வற்றாப்பளை, முள்ளியவளை வடக்கு, புதரிகுடா ஆகிய கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட கமக்கார அமைப்புக்களின் கீழுள்ள விவசாயிகளுக்கு பயன்படும் வகையில் ஒரு கமக்கார அமைப்புக்கு தலா 18 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒன்பது இயந்திரங்கள் மூலம் இயங்கும் மருந்து தெளிகருவிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு மூன்று கமக்கார அமைப்புக்களுக்கும் தலா மூன்று வீதம் மொத்தம் ஒன்பது மருந்து தெளி கருவிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. இந் நிகழ்வின் போது, உலக தரிசனம் நிறுவனத்தின் பிரதிநிதிகள், மேற்படி 3 கிராமங்களுக்கும் உரிய கிராம அலுவலகர்கள் மற்றும் இதே கிராமங்களுக்கான அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள், விவசாயிகள் எனப் பல தரப்பினரும் கலந்து கொண்டிருந்தனர். (2-5-281)

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்

## 19.12.2017-28.03.2020



எந்த நேரமும் சந்தோசமாக இருக்க வேண்டும் என்று விரும்பும் துலாம் இராசி வாசகர்களே!

நல்லநேரம் எப்போது வரப்போகிறது என்று காத்திருந்த உங்களுக்கு வந்துவிடடது நல்லநேரம். டிசெம்பர் 19ஆம் திகதியுடன் ஏழரைச் சனி விலகுகிறது. இனிய வாழ்க்கை மலரப் போகின்றது. இதுவரை கடந்த காலத்தில் ஏற்பட்ட துன்பங்களில் இருந்து விடுதலை கிடைக்கப் போகிறது. இந்த சனிப்பெயர்ச்சியின் விளைவாக முதன்மையான பலன் கிடைக்கும் இராசிகளில் உங்கள் இராசியும் ஒரு இராசியாக அமையும்.

முன்னேற்றம் தருமா?
மூன்றாமிடத்துச் சனி!

டிசெம்பர் 19ஆம் திகதி மாபெரும் கிரகம் என்று வர்ணிக்கப்படும் சனிபகவான் மூன்றாமிடத்திற்குச் செல்கின்றார். குடும்ப ஒற்றுமைக்கு குந்தகம் விளைவித்தவர்கள் இனி விலகிச் செல்வர். கடுமையாக முயற்சித்தும் பணத்தை அதிகம் செலவிட்டும் காரியம் முடியவில்லையே என்று கவலைப்பட்டவர்கள் இனி மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கப் போகிறீர்கள். மாற்றங்களும், ஏற்றங்களும் வந்து சேரப்போகின்றது.

உடன்பிறப்புகளுக்குள் ஒருவருக்கொருவர் சண்டைபோட்டுக் கொள்ள வழிசெய்தவர்கள் இனி விலகிச் செல்வர். சகோதர ஒற்றுமை பலப்பட்டு மற்றவர்கள் அதிசயிக்கும் விதத்தில் வாழ்க்கை அமையப் போகின்றது. முன்னேற்றத்திற்கு வித்திடும் இடம் மூன்றாமிடமாகும். இதை மறைவிடம் என்றும் சொல்வார்கள். மறைவிடத்திற்கு சனி வரும் பொழுதெல்லாம் நிறைவான பலனைக் கொடுக்கும் என்பது நம்பிக்கை.

அந்த அடிப்படையில் இப்பொழுது கூடப் பிறந்தவர்களின் பாசமழையில் நனையப் போகிறீர்கள். பூர்வீகச் சொத்துக்களைப் பிரித்துக் கொள்வதில் சகோதரர்களுக்குள் சமரசம் ஏற்பட்டு நல்ல வழி பிறக்கப் போகின்றது. நீண்ட நாட்களாக நடைபெற்று வந்த வழக்குகளில் வெற்றி கிடைக்கும். குடும்பப் பிரச்சினைகள் படிப்படியாக நல்ல முடிவிற்கு வரும். முயற்சி செய்தவர்களுக்கு அதுவும் கைகூடும். பெண் குழந்தைகளின் கல்யாண வாய்ப்புகளும் ஏற்படும்.

அடுத்து சனியின் பார்வை ஒன்பதாமிடத்தில் பதிவதால் பெற்றோர் வழி உறவில் ஏற்பட்ட விரிசல்கள் அகலும். பூர்வீகச் சொத்துக்களில் இருந்த வில்லங்கங்கள் விலகும். வாகனம் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். பழைய வாகனங்களைக் கொடுத்துவிட்டுப் புதிய வாகனங்களை வாங்கி அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்துவீர்கள். சனியின் பார்வை பன்னிரெண்டாமிடத்தில் பதிவதால் பயணங்கள் அதிகரிக்கும். குடும்பத்தின் சார்பாக முன்னோர்கள் கட்டிய கோவிலைப் பராமரித்து குடமுழுக்கு விழா செய்வதிலும் ஆர்வம் காட்டுவீர்கள்.

குதூகலம் தரும் குருப்பெயர்ச்சிக் காலம்!

4.10.2018இல் விருச்சிக இராசியில் குரு சஞ்சரிக்கப் போகின்றார். அதன்பிறகு 28.10.2019இல் தனுசு இராசிக்கு குரு செல்கின்றார். இந்த இரண்டு பெயர்ச்சிகளும் இழப்புகளை ஈடுசெய்யும் விதத்திலேயே இருக்கின்றது. குரு பார்க்க கோடி நன்மையல்லவா? எனவே, விருச்சிகத்தில் குருப் பெயர்ச்சி நடை



கோவிலூரில் உள்ள கொற்றவாளஸ்வரர், திருநெல்லையம்மனை வழிபட்டு வெற்றி வாய்ப்புக்களை வரவழைத்துக் கொள்ளுங்கள்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

துலாம் இராசியில் பிறந்த பெண்களுக்கு முழுமையான ஏழரைச் சனி விலகுகிறது. இனி உங்கள் எண்ணங்கள் ஈடேறும். எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும்.

# ஏழரைச் சனிதான் விலகியது! இனிய வாழ்க்கை மலர்கிறது!

சனி விலகுவதற்கு முன்னதாகவோ அல்லது விலகிய பின் ஓரிரு மாதங்களுக்குள்ளோ, சிறப்பு ஸ்தலங்களுக்குச் சென்று வழிபட்டு வந்தால் இழந்தவைகளை ஈடு செய்யும் வாய்ப்பு கிடைக்கும். சனிபகவான் சந்நிதியில் எள் தீபம் ஏற்றி வழிபடுவதோடு, கறுப்பு வண்ண வஸ்திரம் அணிவித்து எள்ளோதரை நைவேத்தியமிட்டு எண்ணெய்க் காப்பு சாற்றி அபிஷேக ஆராதனைகள் செய்து வழிபட்டால் பிரச்சினைகள் தீரும்.

திருநள்ளாறு, திருக்கொள்ளிக்காடு, பெரிச்சிக்கோவில், நல்லிப்பட்டி, திருக்கொடியலூர், குச்சானூர் போன்ற ஸ்தலங்களிலும் சனிபகவான் வீற்றிருந்து அருள்பாலிக்கின்றார். வாய்ப்பிருக்கும் பொழுது அருகில் இருக்கும் ஸ்தலங்களுக்குச் சென்று வழிபட்டு ஆராதித்து வரலாம். குறிப்பாக உங்களைப் பொறுத்தவரை சனி விலகும் நேரம் என்பதால் நள மகாராஜாவிற்கு சனி விலகி நல்லருள் கொடுத்த இடமான திருநள்ளாறிற்குச் சென்று வழிபட்டு வருவது நல்லது.

பொதுவாக உங்கள் இராசிக்கு 4, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனிபகவான். தாய் ஸ்தானம், சுக ஸ்தானம், வாகனம் மற்றும் வளர்ச்சிக்குரிய இடம், வீடு, நிலம், பூமி போன்றவைகளை அறியுமிடம், பூர்வீக சொத்துக்கள் மற்றும் புத்திரர்கள் சம்பந்தப்பட்ட விபரங்களை எடுத்துரைக்கும் இடங்களுக்கெல்லாம் அதிபதியானவர் சனிபகவான்.

உங்கள் இராசி ரீதியாக பார்க்கும் பொழுது முயற்சிக்கு வித்திடும் மூன்றாமிடத்தில் அவர் அடியெடுத்து வைக்கப் போவதால் இனி எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும். இயல்பான வாழ்க்கையில் ஏற்பட்ட தடைகள் அகலும்.

வெற்றிகள் ஸ்தானம் தன்னில்
வேந்தனாம் சனிதான் வந்தால்
சுற்றமும் நட்பும் போற்றும்!
சுகமெல்லாம் வந்து சேரும்!
கற்றவர் நண்பராவார்!
காரிய வெற்றி கிட்டும்!
முற்றிலும் நன்மை வாய்க்க
முறையாகவே வணங்குவீரே!

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

பிள்ளைகளுக்கு வேலை கிடைத்து அவர்கள் மூலமும் உங்களுக்கு உதிரி வருமானங்கள் வந்து சேரலாம். காது மற்றும் கழுத்து போன்றவற்றில் வந்த தொல்லைகள் அகலும். குடும்ப வருமானம் கூடுதலாக இருக்கும்.

தொழிலில், நீங்கள் சந்தோசமடையும் விதத்தில் அற்புதமாகப் பணியாற்றும் பணியாளர்கள் அமையப் போகிறார்கள். நம்பிக்கைக்குரியவர்களை இனம் கண்டு கொண்டு சேர்த்துக் கொள்வீர்கள். முயற்சியில் தீவிரம் காட்டும் நேரமிது. உள்ளத்தில் ஊக்கமும், உறுதியும் வந்து சேரும். இது போன்ற காலங்களில் புதிய முயற்சிகளில் ஈடுபடும்பொழுது முன்பின் தெரியாதவர்கள் கூட உங்கள் முன்னேற்றத்திற்கு வித்திடுவர். பூரணமாகச் சனி விலகும் நேரம் என்பதால் இனி நற்பலன்களே உங்களை நாடி வரப்போகின்றது.

சனியின் பார்வை பலன்கள்!

உங்கள் இராசிக்கு 3ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் சனிபகவான் 5, 9, 12 ஆகிய இடங்களைப் பார்க்கப் போகின்றார். சனியின் பார்வை பதியும் இடங்களை நாம் அறிந்து கொண்டு அதற்கு ஏற்ற விதத்தில் நமது வாழ்க்கைப் பாதையை அமைத்துக்கொள்ளலாம். குறிப்பாக அதன் பார்வை 5ஆம் இடத்தில் பதிவதால் பிள்ளைச் செல்வம் இல்லையே என்று கவலைப்பட்டவர்களுக்கு புத்திரப்பேறு கிடைப்பதற்கான அறிகுறிகள் தென்படும். இதுவரை ஏறாத கோவில் இல்லை, பார்க்காத வைத்தியம் இல்லை, செய்யாத பரிகாரங்கள் இல்லை என்று சொல்லி ஆதங்கப்பட்டவர்களுக்கு இப்பொழுது செய்த பரிகாரங்களுக்கு பலன் கொடுக்கப்போகின்றது.

பிள்ளைகளின் உயர்கல்வியை முன்னிட்டு வெளிநாட்டில் செய்த ஏற்பாடுகள் பலன் தரும். படித்து முடித்தும் வேலையில்லாமல் இருக்கிறார்களே அவர்களும் உத்தியோகத்திற்குச் சென்றால் உதிரி வருமானங்கள் கிடைக்குமே, மிதமிஞ்சிய பொருளாதாரத்தில் மிதக்கலாமே என்று சிந்தித்தவர்களுக்கு விடை கூறும் விதத்தில் வந்துவிட்டது இந்தச் சனிப்பெயர்ச்சி. வெளிநாட்டிலும் வேலை கிடைக்கலாம். உள்நாட்டில் அரசுப்பணிக்கு

பெறும் பொழுது குடும்ப முன்னேற்றம் கூடும். சுபவிரயங்கள் அதிகரிக்கும். தொழில் வளர்ச்சி கூடும். கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்வீர்கள். ஆரோக்கியத் தொல்லையில் இருந்து விடுபட்டு அதிக உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள்.

தனுசு இராசியில் குரு சஞ்சரிக்கும் பொழுது வெளிநாட்டு யோகம் வெற்றிகரமாக வந்து சேரும். விவாகப் பேச்சுகள் முடிவாகும். இளைய சகோதரத்தோடு இணக்கம் ஏற்பட்டு எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பெற்றோர்களின் ஆதரவு




உண்டாகும்.

ராகு-கேது பெயர்ச்சிக் காலம்!

13.2.2019இல் மிதுன இராசியில் ராகுவும், தனுசு இராசியில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். 9ஆம் இடத்தில் ராகுவும், 3ஆம் இடத்தில் கேதுவும் சஞ்சரிக்கும் பொழுது திடீர் தனலாபம் வந்து திக்குமுக்காடச் செய்யும். போட்டியாகச் செயற்பட்டவர்கள் விலகுவர். பொருளாதாரத்தில் இருந்த தேக்க நிலை மாறும். உடன்பிறப்புகள் உங்கள் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருப்பர். பூமி சம்பந்தப்பட்ட வழக்குகளில் புதிய திருப்பம் ஏற்படும்.

தொட்ட காரியங்களில் வெற்றி பெற வழிபாடு!

அருகிலிருக்கும் சிவாலயத்திற்குச் சென்று வெள்ளிக்கிழமை தோறும் அம்பிகை வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். பிரதோச நாளில் நந்தீஸ்வரர் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். சிறப்பு வழிபாடாக சிவகங்கை [illegible]டம் காரைக்குடி அருகிலிருக்கும்

பிரிந்த உறவினர்கள் மீண்டும் வந்திணைவர். பிரச்சினைகள் படிப்படியாக மாறும். இழந்த சொத்துக்கள், நகைகள் மீண்டும் பெறும் வாய்ப்புக் கிடைக்கும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்படுவீர்கள். உடல் நலம் சீராகி உற்சாகத்தோடு காணப்படுவீர்கள்.

உத்தியோகத்தில் நல்ல முன்னேற்றங்கள் வந்து சேரும். ஊதிய உயர்வும், நினைத்த இடத்திற்கு பதவி உயர்வோடு கூடிய இடமாற்றமும் கிடைக்கும். தனுசு இராசியில் குரு சஞ்சரிப்பது மிகுந்த அற்புதமான நேரமாகும். தங்கம், வெள்ளி தடையின்றி வந்து சேரும். வாகன யோகம் முதல் அனைத்து வளர்ச்சியும் உண்டாகும். ஆரம்பத்தில் சுக ஸ்தானத்தில் கேதுவும், தொழில் ஸ்தானத்தில் ராகுவும் இருப்பதால் வருமானம் திருப்தி தரவும், வசதி வாய்ப்புக்கள் பெருகவும், ராகு-கேது பிரீதி செய்வது நல்லது.

சனியின் வக்ர காலம்!

25.4.2018 முதல் 21.8.2018 வரை மூல நட்சத்திரக் காலில் சனி வக்ரம் பெறுகின்றார். 8.5.2019 முதல் 3.9.2019 வரை மீண்டும் பூராட நட்சத்திரக் காலில் சனி வக்ரம் பெறுகின்றார்.


உங்கள் இராசிக்கு 4, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனிபகவான். அவர் வக்ரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. குடும்பத்தில் குழப்பங்கள் அதிகரிக்கும். கூட்டாளிகள் விலகுவர். சுகங்களும், சந்தோசங்களும் குறையும். இதுபோன்ற காலங்களில் எச்சரிக்கை தேவை. பிள்ளைகளால் பிரச்சினைகள் அதிகரிக்கும். வெளியூரில் அல்லது வெளிநாட்டில் வசிக்கும் பிள்ளைகளை கண்காணித்துக் கொள்வது நல்லது. பூர்வீகச் சொத்துக்களில் மீண்டும் விவகாரங்கள் தலைதூக்கலாம். கொடுத்த பணம் குறிப்பிட்டபடி வசூலாகாமல் போகலாம். தொழிலில் புதியவர்களை நம்பி ஏமாற்றமடையும் சூழ்நிலையும் உண்டு.

(தொடரும்)

ஜோதிடக் கலாமணி
- சிவல்புரி சிங்காரம் -

# கலைத்தரிசனம்





## கூத்தாடி
# வி.சி.குஞ்சிதபாதம்
## அவர்களுடனான சந்திப்பு

**ஈழத்தின் ஆயிரத்து 338 தடவைகள் மேடையேறிய அடங்காப்பிடாரி நாடக நெறியாளரான இவர் 1938. 09.04 ஆம் திகதி சுண்டுக்குளியில் பிறந்தார். ஏழு வயதில் கலைத்துறைக்குள் பிரவேசித்த இவர் 79 வயதிலும் எந்தவிதச் சோர்வுமின்றி கலைப்பணிகளை முன்னெடுத்து வருகின்றார். அறுநூறிற்கும் மேற்பட்ட கவிதைகளை எழுதியுள்ளார். 2014 ஆம் ஆண்டு மனிதம் எனும் கவிதை நூலினை வெளியிட்டுள்ளார். கொழும்புத் துறை இந்து மகா வித்தியாலயம் , புனித பத்திரிசியார் கல்லூரி போன்ற பாடசாலைகளில் கல்வி கற்றார். 1962 ஆம் ஆண்டு உள்ளூராட்சித் திணைக்களத்தில் எழுதுநராக நியமனம் பெற்ற இவர் 1983 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார். நாற்பத்தைந்துக்கும் மேற்பட்ட நாடகங்களை நெறிப்படுத்தி நான்காயிரத்திற்கும் மேற்பட்ட மேடைகளைக் கண்ட நாடக ஜாம்பவானாகவுள்ளார். அடங்காப்பிடாரி என்னும் நாடகத்தைத் தற்கால இளம் தலைமுறையினரிடம் கையளித்து மேடையேற்ற வேண்டும் என்ற பேராவலோடு உள்ளார். கவிஞராக, நெறியாளராக, எழுத்தாளராக பல்துறைகளில் விளங்கும் இவர் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் ஒரு பகுதியில் வசித்து வருகின்றார். வியத்தகு நெறியாளர் வி.சி. குஞ்சிதபாதம் அவர்கள் தன் கலைப் பணி பற்றி மனந்திறந்து கூறியவை வலம்புரியில் பிரசுரமாகின்றது.**

**❖ தாங்கள் 7 வயதில் கலைத் துறைக்குள்கால்பதித்தீர்கள்.தங்களின் கலைப் பிரவேசம் பற்றி....?**

எனக்கு அப்போது வயது 7. பெரும் வசதியான ஓர் குடும்பத்தில் எடுபிடி. அத்தனவந்தருடன் நான் கோவிலுக்கு நடந்து கொண்டிருக்கையில் என் கரத்தில் அபிசேகத்திற்குரிய பால். வழியில் ஓர் பெரியவரைச் சந்தித்து உரையாடல் நடந்து கொண்டிருக்கையில் என் பின்புறமாக வந்த ஓர் ஏழை பசிக்கிறது ஏதாவது புசிக்கத் தருமாறு சைகை மூலம் என்னைக் கேட்கிறார். அவர் மேல் பரிதாபங்கொண்ட நான் கையிலிருந்த பாலை அவர் கையில் ஊற்ற அவர் அருந்திக் கொண்டிருக்கையில் தனவந்தர் காண்கின்றார். எனது கன்னத்தில் அறைந்த அவர் கடவுளுக்குக் கொண்டு சென்ற பாலை ஏன் பரதேசிக்குக் கொடுத்தாய் என மீண்டும் அறைந்ததும் நான் அவ்விடத்தைவிட்டு ஓடி விடுகிறேன். என் மனதில் உயிர்களுக்குச் செய்யும் சேவையே கடவுளுக்குச் செய்யும் சேவை என உணர்ந்த காரணியே அவ்விதம் என்னைச் செயற்படத் தூண்டியது. பின்னாளில் நாடகங்களில் இதுபோன்ற பல பாத்திரங்கள் ஏற்று நடிக்கலானேன்.

**❖ தாங்கள் இதுவரைக்கும் 600 க்கும் மேற்பட்ட தலைப்புக்களில் கவிதைகளைஎழுதியுள்ளீர்கள். நீங்கள் எவ்வாறு கவிதைத் துறையுள் பிரவேசித்தீர்கள்?**

நான் யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரியில் கல்வி கற்ற காலத்தில் கவிதைத் துறையில் கால் பதித்தேன் என் தமிழாசிரியர் வித்துவான் கே. எம். யோசப் வழிநடத்தலில் கவிதைகள் புனைய ஆரம்பித்தேன்.

ஆசிரியரின் வழிகாட்டலுடன் என் குடும்பப் பின்னணியும் என் உயர்வுக்கு உறுதுணையாயமைந்தமையும் ஓர் முக்கிய காரணியாகும். ஈழத்து நாளேடுகளும் என் உயர்வுக்கு வழி சமைத்தன. ஈழநாடு, வீரகேசரி போன்ற உள்ளூர் ஈழத்து நாளேடுகளும் தென்னிந்திய வாராந்தப் பத்திரிகையான கல்கண்டும் என் உயர்வுக்கு உந்து சக்தியாயமைந்தன.

சுண்டிக்குளி யாழ். நாடகக் கலா மன்றத்தின் ஸ்தாபகரான நாடகக் கலாமணி வி.சி. பரமானந்தம் வழிகாட்டலில் இயங்கிய மேற்படி மன்றத்தின் செயலாளர், நாடக இயக்குநர் ஆகிய பொறுப்புக்கள் எனது 20 வது வயதில் என்னிடம் ஒப்படைக்கப்பட்டன.

நாடகத் துறையுடன் மட்டும் நின்றுவிடாது கவிதைத் துறையிலும் காலூன்றிய எனது கவிதைகள் பரவலாகப் பல பத்திரிகைகளிலும் பிரசுரமாகி வெளிவந்தமை எனக்குப் பெரும் தெளிவீந்தன. தற்போது நான் வதியும் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை வளாகத்தில் பள்ளி கொண்டருளும் விநாயகப் பெருமான் மேல் என்னால் பாடப் பெற்ற மனிதம் எனும் மகுடத்திலான கவிதை நூல் 20 ஜூலை 2014 இல் வைத்தியசாலை மண்டபத்தில் அரங்கேற்றப்பட்டமையும் எனது கவித்துறைக்கு வழங்கப் பெற்ற அங்கீகாரமாகவே கருதுகின் றோம்.

**❖ தாங்கள் நெறியாள்கை செய்த அடங்காப்பிடாரி நாடகம் ஆயிரத்து 338 தடவைகள் மேடையேற்றப் பட்டு பெரும் புகழைப் பெற்றது. இந் நாடகம் பற்றி?**

எமது மன்றத்தின் 29 வது தயாரிப்பான அடங்காப்பிடாரி ஈழத்தின் மூலை முடுக்குகளெல்லாம் தமிழர் வாழும் பிரதேசங்களில் 1338 தடவைகள் மேடையேறியது. சமூகத்தில் காணப்படும் குறைகள், அக்குறைகள் ஏற்படுவதற்குரிய காரணிகள், அக்குறைகளைத் தவிர்க்கும் மார்க்கங்கள் ஆகியவற்றைத் தெளிவாக மக்கள் மனங்களில் பதிய வைத்தமையே அடங்காப்பிடாரியின் வெற்றிக்கு வித்திட்டவை என்றால் மிகையாகாது.

யாழ். திறந்த வெளியரங்கில் ஆயிரமாவது தடவையாக அடங்காப்பிடாரி மேடையேறிய போது பார்வையாளர்களாக வந்திருந்த கலையரசு சொர்ணலிங்கம், டொமினிக் ஜீவா போன்ற தமிழறிஞர் கள் இருபத்தையாயிரத்துக்குமதிகமான பார்வையாளர்கள் மத்தியில் தம்மை மறந்து பாராட்டியமையும் மறக்கமுடியாததாகும்..

**❖ தாங்கள் நெறியாள்கை செய்த நாடகங்கள் பற்றி?**

மன்றத்தின் நாடகங்கள் தவிர்ந்த ஏனைய நாடகங்களையும் வெவ்வேறு இடங்களில் நெறிப்படுத்தியுள்ளேன். நாட்டுப் துறையில் முதன்முதலில் கால் பதிப்பவர்கள் தொடக்கம் அனுபவம் மிக்க நடிகர்கள் வரை என்னிடம் பயின்றுள்ளார்கள். நான் கடமையாற்றிய காலை கல்முனைக் கலாலயம் எனும் பெயரில் என்னால் உருவாக்கப் பெற்ற நாடகமன்றத்தால் எனது நெறியாள்கையில் 6 நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. இதில் யாழ், கல்முனை ஆகிய இடங்களைச் சேர்ந்த நடிகர். நடிகைகள் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கதாகும். தூரம் அதிகமில்லை துயர் துடைப்போம், சிலம்பு. அத்தனை அருட்கடலை , பூதத்தம்பி மயான காண்டம் ஆகிய நாடகங்கள் மூன்று வருட காலப்பகுதியில் 37 தடவைகள் மேடை யேற்றப்பட்டன.

**❖ தாங்கள் நடித்த நாடகங்கள் பற்றி?**

யாழ்ப்பாணத்தில் அரியாலை சனசமூக நிலைய ஆண்டு விழாவில் புலித் தேவன் நல்லூர் தெற்கு சனசமூக நிலையத்தில் முதல் முழக்கம் தவிர யாழ்ப்பாணத்தில் பல நிகழ்வுகளில் நாடகங்களில் பங்கு பற்றியுள்ளேன்.

**❖ தங்களின் சுண்டிக்குளி யாழ். நாடகக் கலாமன்றம் பற்றி?**

73 வருடங்கள் நாலாயிரத்துக்கு மேற்பட்ட மேடைகளில் 48 நாடகங்களைப் பல்வேறு சந்தர்ப்பங்களில் மேடையேற்றியுள்ளோம். ஓர் இரவில் 3,4 தடவைகள் எமது நாடகங்களை மேடையேற்றிய பல சந்தர்ப்பங்கள் பல இடம் பெற்றுள்ளன. மேடையில் நடிக்க முனைந்த சந்தர்ப்பமொன்றில் ஈக்கள் மின் விளக்குகளில் பறந்து மேடையில் நடிக்க முடியாத நிலையைத் தோற்றுவித்தது. உடனே மின்விளக்குகளை அணைத்து கோவில் பந்தங்களைப் பாவித்து ஈக்களின் தொல்லைகளை நீக்க நாம் பந்தங்களிலேயே நாடகத்தை நடித்து முடித்த நிலை இன்னும் நீங்காது நினைவிலுள்ளது.

**❖ தாங்கள் பெற்ற வெற்றிகள், விருதுகள் பற்றி .....?**

நல்லூர் தெற்கு சனசமூக நிலையத்தின் 63 வது ஆண்டு விழாவில் நிலையத் தலைவர் இ. செல்வமாணிக்கராசா 08.05.2012 இல் பாராட்டு பத்திரம் வழங்கிக் கௌரவித்தார். 15.12.2015 இல் கலாபூஷண விருது வழங்கப் பட்டது. 28.01.2017 இல் கலைமாமணி விருது வழங்கப்பட்டது. (தேசோதயம், சர்வோதயம், யாழ் மாவட்டம்) பல இடங்களில், பல சந்தர்ப்பங்களில் கௌரவிக்கப்பட்டுள்ளேன். அவை அனைத்தும் இடப்பெயர்வின் போது தவறிவிட்டன.

**❖ தங்களின் கலையுலக வாழ்வில் மறக்க முடியாத அனுபவம் ஒன்றைக் குறிப்பிடுங்கள்?**

ஈக்களின் தொல்லையால் மின் விளக்குகளை அணைத்து தீப்பந்தத்தின் உதவியுடன் நாடகம் நடத்திய நிகழ்வைக் குறிப்பிடலாம்(பிரான்பற்றில்)

**❖ இன்றைய சூழலில் நாடகத்தின் போக்கு எப்படி இருக்கின்றது?**

நாடகமே அருகிவிட்டது. ஒரு சில இடங்களில் நடை பெற்றாலும் அவற்றுள் பொப்பிசை கலந்து விடுகிறது. இந்தியத் தொலைக்காட்சி நாடகங்களின் வருகையால் எல்லோரும் வீட்டுக்குள் முடங்கும் நிலை அதிகரித்துவிட்டது.

**❖ கூத்தாடி என்ற புனைபெயரை எவ்வாறு தெரிவு செய்தீர்கள்?**

நான் கவிதைகளை எழுதி ஆரம்ப காலத்தில் 1960 காலப் பகுதியில் வி.சி. குஞ்சிதபாதம்எனவேகுறிப்பிட்டுவந்தேன்.

பெயர் நீளமாகிவிட்டது என நண்பர்கள் கூறியதால் எனது பெயரின் அர்த்தத்தைக் குறிக்கும் சொல்லை கூத்தாடி எனக் குறுக்கிக் கொண்டேன். பின் நாளடைவில் நண்பர்கள் வேண்டுகையின் பிரகாரம் கூத்தாடி வி.சி. குஞ்சிதபாதம் எனக் குறிப்பிடத் தொடங்கினேன். குஞ்சிதபாதம் என்றால் காலைத் தூக்கி ஆடுகின்ற சிவன் என்பது அர்த்தம். கூத்தாடி என்றாலும் காலைத் தூக்கி ஆடும் சிவன் என்பதே அர்த்தம். அர்த்தம் ஒன்றாயிருப்பினும் சொற்கள் வேறாயிருப்பதால் தற்பொழுது கூத்தாடி வி.சி. குஞ்சிதபாதம் எனவே பாவித்து வருகின்றேன்.

**❖ 79 வயதான முதுபெரும் கலைஞரான தாங்கள் கலையுலகுக்கு மனந்திறந்து கூறுவது?**

நாடகம் என்பது வெறும் பொழுது போக்குக் கலையல்ல . சிந்திக்க வைக்கக் கூடிய சமூக சீர்திருத்தக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு நாடகங் கள் தயாரிக்கப்பட்டால் நிச்சயம் அவை வெற்றி பெறும். அந்தக் கால நினைவுகளை மீட்டுப் பார்த்தால் எமது தற்கால தமிழ்ச் சமூகமும் நல்ல வழியில் பயணிக்கவில்லை என்பதை நன்றாக உணர முடிகின்றது. எங்கு பார்த்தாலும் நாடகங்கள் மேடையேறிக் கொண்டிருந்த காலம் தற்போது இல்லை. தென்னிந்தியத் தொலைக்காட்சித் தொடர் நாடகங்களும் எமது ஈழத்தமிழர்களை இலகுவாக வீட்டுக்குள் முடக்கிவிட்டது. எமது தமிழர்கள் தேசிய உணர்வற்றவர்களாக தொலைக்காட்சியின் முன்னால் மண்டியிட்டுக் கிடக்கும் நிலை வேரோடு களையப்பட வேண்டும்.

**நேர்காணல்:**
**ஜெயம் ஜெகன்**

# பாரதம்

## மன்மோகன் சிங் குறித்து மோடியின் குற்றச்சாட்டு மோசமான உதாரணம்

### ராகுல் காந்தி கண்டனம்





(டில்லி)

முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் குறித்து பிரதமர் நரேந்திர மோடி கூறிய குற்றச்சாட்டு மோசமான முன்னுதாரணத்தை ஏற்படுத்தியுள்ளது என்று ராகுல் காந்தி கண்டனம் தெரிவித்தார்.

காங்கிரஸ் கட்சியின் தலைவராக தேர்வு செய்யப்பட்ட பின்னர் முதன் முறையாக ராகுல் காந்தி குஜராத் மாநிலம் ஆமதாபாத்தில் செய்தியாளர்களுக்கு நேற்று முன்தினம் பேட்டியளித்தார். அப்போது அவர் தெரிவிக்கையில்,

டில்லியில் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் மணிசங்கர் அய்யர் வீட்டில் நடந்த விருந்தில் பாகிஸ்தான் தூதர் மற்றும் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் ஆகியோர் சேர்ந்து குஜராத் சட்டசபை தேர்தலில் பா.ஜனதாவை தோற்கடிக்க தேச விரோத ஆலோசனையில் ஈடுபட்டதாக பிரதமர் நரேந்திர மோடி குற்றம்சாட்டியுள்ளார். இதற்கு மன்மோகன் சிங்கும் தகுந்த விளக்கம் அளித்துள்ளார். மன்மோகன் சிங் குறித்து மோடி கூறிய கருத்து ஏற்கத்தக்கதல்ல. மோடியின் இந்த குற்றச்சாட்டு மோசமான முன்னுதாரணத்தை ஏற்படுத்தியுள்ளது.

அமித்ஷா மகனின் தொழில் முறைகேடு, ரபேல் போர் விமான ஊழல் போன்ற குற்றச்சாட்டுக்கு பதிலளிக்காமல் மோடி மௌனமாக இருக்கிறார். தன்னுடைய சொந்த மாநிலத்தில் நடைபெறும் ஊழல் குறித்தும், விவசாயிகளின் பிரச்சினைகள் குறித்தும் பேச மறுக்கிறார்.

குஜராத் கோவிலுக்கு நான் சென்றதை அனைவரும் ஆர்வத்துடன் பார்க்கின்றனர். கோவிலுக்கு செல்வது தவறா? இந்த மாநில மக்களின் நலனுக்காக பிரார்த்தனை செய்வது குற்றமா?

ஆனால் அதே சமயம் தண்ணீரில் மிதக்கும் விமானத்தில் சென்று அங்குள்ள கோவிலில் மோடி வழிபட்டது ஒன்றும் குற்றம் கிடையாது. இது மக்களின் பிரச்சினைகளை திசைதிருப்பும் செயலாகும்.

கட்சியின் தலைவராக பொறுப்பேற்ற உடன் என்னுடைய முதல் இலக்கு கட்சியை பலப்படுத்துவது தான். அதை இந்த தேர்தலில் நீங்கள் பார்ப்பீர்கள். குஜராத் தேர்தலில் நாங்கள் கண்டிப்பாக வெற்றி பெறுவோம். எங்களுக்கு அந்த நம்பிக்கை அதிகமாகவே உள்ளது.

மேலும், அரசியலில் ஒருவர் மீது ஒருவர் சேற்றை வாரி வீசுவது போல கடும் சொற்களை பேசுவதையும் நான் மாற்றி காட்டி உதாரணமாக இருப்பேன். என் மீது மோடி எந்தவிதமான கடும் சொற்களை பேசினாலும் அதற்கு நான் மரியாதையாக தான் பதிலடி கொடுப்பேன். ஏனெனில் பிரதமர் பதவி என்பதற்கு ஒரு மரியாதை இருக்கிறது.

பிரதமர் குறித்து மணிசங்கர் அய்யர் கூறியது தவறான வார்த்தை. இது போன்ற வார்த்தைகளை பொறுத்துக் கொள்ள முடியாது.

தேர்தல் பிரசாரத்தின் போது குஜராத் மக்கள் அளித்த அன்பையும், ஆதரவையும் என் வாழ்நாளில் என்றும் மறக்க மாட்டேன். இந்த மாநில மக்கள் மிகவும் புத்திசாலிகள். பிரசாரத்தின் போது மாநிலத்தில் நடைபெறும் ஊழல் குறித்து மோடி பேசாததை அவர்கள் உணர்ந்து இருப்பார்கள்.

இந்த தேர்தலில் பா.ஜனதா அசுர பலத்துடன் எங்களை எதிர்த்து போட்டியிடும் என நான் நினைத்தேன். ஆனால் அவர்கள் அவ்வாறு இல்லாதது எனக்கு வியப்பை ஏற்படுத்தியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## இரட்டை இலைக்கு இலஞ்சம்

### தினகரன்மீது டில்லியில் குற்றப்பத்திரிகை தாக்கல்



(டில்லி)

இரட்டை இலை சின்னம் பெற தேர்தல் ஆணைய அதிகாரிகளுக்கு இலஞ்சம் கொடுக்க முயன்றதாக டி.டி.வி தினகரன் மீது டில்லி பொலிஸார் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளனர்.

இது தொடர்பாக தினகரன் மற்றும் இடைத்தரகர் சுகேஷ் சந்திரசேகர் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். இந்த வழக்கில் டிடிவி தினகரன் பிணையில் வெளியே வந்துள்ளார்.

இவ்வழக்கில்கடந்த ஜூலை மாதம் டில்லி திஸ் ஹசாரி நீதிமன்றத்தில் குற்றப்பிரிவு பொலிஸார் முதல் குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்தனர். இதில் சுகேஷ் சந்திரசேகரின் பெயர் மட்டும் இடம் பெற்றிருந்தது.

இந்நிலையில் துணை குற்றப்பத்திரிகையை டில்லி பொலிஸார் நேற்றுத்தாக்கல் செய்துள்ளனர். அதில் தினகரன், அவரது நண்பர் மல்லிகார்ஜூனா உள்ளிட்ட ஐந்து பேரின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன.

ஆர்.கே நகர் இடைத்தேர்தலில் தினகரன் போட்டியிட்டு பிரசாரத்தில் ஈடுபட்டு வரும் நிலையில், அவர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (இ)

## பாலியல் குற்றச்சாட்டு ஜனாதிபதி ட்ரம்ப் உ

### 54 பெண் எம்.பி

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீதான பாலியல் குற்றச்சாட்டுகளுக்கு பொறுப்பேற்று அவர் உடனடியாக பதவி விலக வேண்டும் என்று 54 பெண் எம்.பிக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

கடந்த ஜனவரி மாதம் அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்றார். ஜனாதிபதி தேர்தலில் அவர் போட்டியிட்டபோதே, அவர் மீது பல்வேறு பாலியல் குற்றச்சாட்டுகள் எழுந்தன. இதனிடையே, அவருக்கு எதிராக 16 பெண்கள் கடந்த சில மாதங்களுக்கு முன்பு பாலியல் குற்றச்சாட்டுகளை வெளிப்படையாகத் தெரிவித்தனர். இந்த விவகாரம் அமெரிக்காவில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. ஆனால், எந்த விசாரணை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இந்நிலையில், இந்த விவகாரத்தில் வெளிப்படையாக விசாரணை நடத்தக் கோரியும், ஜனாதிபதி ட்ரம்ப் பதவி விலகுமாறும் வலியுறுத்தி அந்நாட்டு பெண் எம்.பிக்கள் போர்க்கொடி தூக்கியுள்ளனர். இதுதொடர்பாக அமெரிக்க நாடாளுமன்றத்தின் கண்காணிப்பு மற்றும் அரசு சீர்திருத்தங்கள் குழுத் தலைவருக்கும் அவர்கள் கடிதம் எழுதியுள்ளனர். இந்தக் கடிதத்தில்,

ஜனநாயகக் ... பிக்கள் கை... இதுகுறி... கிறிஸ்டன் ... பாலியல் ... ஜனாதிபதி ... விலக வே... அமெரிக்க ந... யான விசா... றார். மற்றொ... ன்ஸ் கூறும்... குற்றம்சாட்ட... கள் தரப்பு ... அவர்களுக்... என்றார்.

வெ...

அமெரிக்... செய்தித் தொ... ங்டனில் செ...

## ஜெயலலிதாவின் திட்டங்கள் தொடர்ந்து நிறைவேற்றப்படும்

### ஓ.பன்னீர்செல்வம் உறுதி



(சென்னை)

ஆர்.கே.நகர் தொகுதியில் ஜெயலலிதாவின் திட்டங்கள் தொடர்ந்து நிறைவேற்றப்படும் என்று பிரசாரத்தின்போது துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் உறுதிபடத் தெரிவித்தார்.

ஆர்.கே.நகர் இடைத்தேர்தலில் அ.தி.மு.க. சார்பில் இ.மதுசூதனன் போட்டியிடுகிறார். அவருக்கு ஆதரவு கேட்டு அ.தி.மு.க.வின் ஒருங்கிணைப்பாளரும், துணை முதலமைச்சருமான ஓ.பன்னீர்செல்வம் நேற்று முன்தினம் சென்னை தண்டையார்பேட்டை பகுதியில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

திலகர் நகரில் பொதுமக்கள் மத்தியில் ஓ.பன்னீர் செல்வம் உரையாற்றுகையில்,

ஆர்.கே. நகர் தொகுதியில் வீடு இல்லாதோருக்கு வீடு கட்டி தரப்படும் என்று ஜெயலலிதா அறிவித்தார். அதன்படி வீடற்ற ஏழை-எளிய மக்களுக்கு வீடுகள் கட்டி தரப்படும். தமிழக மக்கள் பொருளாதார முன்னேற்றம் அடைய வேண்டும் என்று தமிழகம் முழுவதும் பல்வேறு திட்டங்களை ஜெயலலிதா அறிமுகப்படுத்தினார். குறிப்பாக ஆர்.கே.நகரில் சிறப்பு கவனம் செலுத்தினார். தமிழக அரசு தற்போது ஜெயலலிதாவின் திட்டங்களை தொடர்ந்து நடைமுறைப்படுத்தி வருகிறது. ஆர்.கே.நகரிலும் அந்த திட்டங்கள் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும்.

இளம் பெண்களுக்கு மானிய விலையில் ஸ்கூட்டி வழங்கப்படும் என்று ஜெயலலிதா அறிவித்திருந்தார். பெப்ரவரி 24ஆம் திகதி ஜெயலலிதா பிறந்த நாளன்று, ஆர்.கே. நகர் தொகுதியில் மானிய விலையில் ஸ்கூட்டி வழங்கும்திட்டம்தொடங்கப்படும்.

எனவே அ.தி.மு.க. வேட்பாளரான மதுசூதனனை வெற்றி பெறச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## அலபாமா தொ... ஜனநாயக க...



(வோஷிங்டன்)

அலபாமா தொகுதிக்கான அமெரிக்க செனட் உறுப்பினர் தேர்தலில் 25 வருடங்களின் பின்னர் முதன் முறையாக ஜனநாயகக் கட்சி வெற்றி பெற்றுள்ளது. குறித்த தொகுதியில் போட்டியிட்ட குடியரசுக் கட்சி உறுப்பினர் ரோய் மூருக்கு எதிரான கசப்பான பிரசாரங்களை தொடர்ந்து, ஜனநாயகக் கட்சி உறுப்பினர் டக் ஜோன்ஸ் வெற்றி பெற்றுள்ளார்.

அதன்படி செனட் சபையில், குடியரசுக் கட்சியின் பெரும்பான்மையை ஜனநாயகக் கட்சி நெருங்கியுள்ளது.

## மீண்டும் சந்திரனுக்கு வீரர்களை அனுப்பும்

### புதிய விண்வெளி கொள்கைக்கு அமெரிக்க ஜனாதிபதி ஒப்புதல்



(வோஷிங்டன்)

சந்திரன் மற்றும் செவ்வாய்க்கிரகங்களுக்கு, விண்வெளி வீரர்களை அனுப்புவது தொடர்பான புதிய விண்வெளிக் கொள்கையில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கையெழுத்திட்டுள்ளார். அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு மையமான நாசாவின் அப்பலோ விண்கலத்தில் அந்நாட்டு வீரர்கள் கடந்த 1969ஆம் ஆண்டு ஜூலை 20இல் சந்திரனில் தரையிறங்கினர்.

அதன்பின்னர் விண்வெளி வரலாற்றில் அமெரிக்கா பல்வேறு சாதனைகளை படைத்துவிட்டது.

இந்நிலையில், மீண்டும் விண்வெளிக்கு மனிதர்களை அனுப்ப அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. இதற்காக புதிய விண்வெளிக் கொள்கையை தயாரித்துள்ளது. இதில் அந்நாட்டு ஜனாதிபதி ட்ரம்ப் நேற்று முன்தினம் கையெழுத்திட்டுள்ளார். இதையடுத்து அவர் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்,

அமெரிக்காவின் புதிய விண்வெளிக் கொள்கையின்படி, மீண்டும் சந்திரனுக்கு மனிதர்களை அனுப்புவது குறித்து திட்டமிடப்படவுள்ளது. இந்த முறை சந்திரனில் நம்முடைய கொடி மற்றும் காலடியை மட்டும் வைக்கப்போவதில்லை. மாறாக செவ்வாய்க்கு செல்வதற்கான அடித்தளத்தையும் அமைக்கவுள்ளோம்.

விண்வெளி ஆராய்ச்சியில் அமெரிக்காதான் தலைமை இடத்தில் உள்ளது. தொடர்ந்து அமெரிக்கா தான் அந்த இடத்தை தக்க வைத்து கொள்ளும் என அவர் தெரிவித்தார். துணை ஜனாதிபதி மைக் பென்ஸ் தெரிவிக்கையில், "தற்பொழுது கையெழுத்தாகியுள்ள இந்த புதிய கொள்கை மூலம் விண்வெளி ஆராய்ச்சியில்

# வெளிநாடு

# ...டுக்களுக்கு பொறுப்பேற்று ...உடன் பதவி விலக வேண்டும் ...பிக்கள் வலியுறுத்தல்



...நாயகக் கட்சியைச் சேர்ந்த 54 பெண் எம். ...கள் கையெழுத்திட்டுள்ளனர்.

இதுகுறித்து ஜனநாயகக் கட்சியின் எம்.பி. ...ஸ்டன் கில்லிபிரான்ட் தெரிவிக்கையில், ...பாலியல் குற்றச்சாட்டுகளுக்கு பொறுப்பேற்று ...ாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உடனடியாக பதவி ...க வேண்டும். இந்த விவகாரம் குறித்து ...மரிக்க நாடாளுமன்றம் சார்பில் வெளிப்படை ...ன விசாரணை நடத்தப்பட வேண்டும் என் ... மற்றொரு பெண் எம்பியான பிரெண்டா லார ...ஸ் கூறும்போது, "குற்றம்சாட்டுபவர் அல்லது ...றம்சாட்டப்பட்டவர் யாராக இருந்தாலும் அவர் ... தரப்பு நியாயங்கள் கேட்கப்பட வேண்டும். ...வர்களுக்கு நீதி கிடைக்கப்பெற வேண்டும்" ...றார்.

### வெள்ளை மாளிகை விளக்கம்

அமெரிக்க ஜனாதிபதியின் வெள்ளை மாளிகை ...பதித் தொடர்பாளர் சாரா சாண்டர்ஸ், வோஷி ...னில் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில், ஜனாதிபதி பதவிக்கு ட்ரம்ப் போட்டியிடும் சமயங்களிலேயே ஏராளமான பாலியல் குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்பட்டன. மக்கள் அதனை ஏற்கவில்லை. ட்ரம்புக்கு மக்கள் வாக்களித்து வெற்றி பெறச் செய்துள்ளனர். இந்த குற்றச்சாட்டுகளுக்கு மக்கள் மன்றம் மூலம் பதிலளித்து விட்டோம். தற்போதும், அந்தப் பாதையையே முன்னெடுப்போம் என்று அவர் தெரிவித்தார். (இ)

# ...தொகுதியில் ...கட்சி வெற்றி



...டக் ஜோன்ஸின் எதிர்பாராத வெற்றி ...ரோய் மூரை ஆதரித்த அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கு பேரிடியாக அமைந்துள்ளது.

எனினும் தனது டுவிட்டர் ஊடாக ஜோன்ஸ்க்கு வாழ்த்து தெரிவித்துள்ள ஜனாதிபதி ட்ரம்ப், "டக் ஜோன்ஸின் கடினமான வெற்றிக்கு வாழ்த்துக்கள். அலபாமா மக்கள் சிறந்தவர்கள். குடியரசுக் கட்சி குறுகிய காலப்பகுதியில் இந்த தொகுதியில் மற்றுமொரு ஆசனத்தை பெற வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

தேர்தலில் போட்டியிட்ட முன்னாள் நீதிபதியும், குடியரசுக் கட்சி வேட்பாளருமான ரோய் மூருக்கு எதிராக பாலியல் குற்றச்சாட்டுக்களே குடியரசுக் கட்சியின் தோல்விக்கு காரணமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

மீண்டும் அமெரிக்கா தொடர்ந்து முதலிடம் வகிக்கும் இதை மீண்டும் செயற்படுத்த ஜனாதிபதி ட்ரம்ப், தேசிய விண்வெளி கழகத்தை நிறுவியுள்ளார்" என்றார்.

சந்திரனுக்கு சென்ற முதல் விண்வெளி வீரர் அமெரிக்காவின் நீல் ஆம்ஸ்ட்ரோங்க்.

❖ அமெரிக்காவை சேர்ந்த ஆம்ஸ்ட்ரோங்குடன் எட்வின் ஆல்டரின், மைக்கேல் கொலின்ஸ் என்ற 2 வீரர்களும் உடன் சென்றனர்.

❖ ஆம்ஸ்ட்ரோங்க் 8 நாட்கள், 14 மணிநேரம், 12 நிமிடம், 30 விநாடிகள் விண்வெளியில் இருந்தார்.

❖ 1969ம் ஆண்டு ஜூலை 20ஆம் தேதி அப்பலோ 11 என்ற விண்கலத்தில் சென்று சந்திரனில் காலடி எடுத்து வைத்தார்.

❖ ஆம்ஸ்ட்ரோங் 2012ஆம் ஆண்டு ஓகஸ்ட் 25இல் தனது 82வது வயதில் காலமானார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# சீனாவில் மின்சார ஸ்கூட்டர் வெடித்து தீ; 5பேர் உயிரிழப்பு

(பீஜிங்)

சீனாவின் பீஜிங் அருகேயுள்ள கிராமத்தில் மின்சார ஸ்கூட்டர் வெடித்து தீ விபத்து ஏற்பட்டதில் வீட்டிலிருந்த ஐந்து பேர் பலியானதாக அந்நாட்டு ஊடகம் தெரிவித்துள்ளது.

சீன தலைநகர் பீஜிங் அருகேயுள்ள பைகியாசிங் என்ற கிராமத்திலுள்ள ஒரு வீட்டில் இருந்த மின்சார ஸ்கூட்டரில் இருந்து நேற்றுக் காலை திடீரென தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து, தீ வீடு முழுவதும் பரவியது. இந்த கோர விபத்தில் வீட்டில் இருந்த ஐந்து பேர் உயிரிழந்ததாக அந்நாட்டு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த மாதம் இதே நகரில் தெற்கு பகுதியில் உள்ள குடியிருப்பு வளாகத்தில் தீ விபத்து ஏற்பட்டதில் 19 பேர் பலியாகினர். உயிரிழந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்களில் பெரும்பாலானோர் புலம் பெயர்ந்து குடியிருப்பவர்கள். இந்த விபத்தையடுத்து பீஜிங் நகர நிர்வாகம் 40 நாள் சிறப்பு நடவடிக்கை ஒன்றை நடத்தியது.

குடியிருப்பு வளாகங்களில் தீ அணைப்பு வசதிகள், அவசர கால வழிகள் ஆகியன இருக்கிறதா? என்றும், இல்லாத குடியிருப்புகளில் அவை அமைக்க நடவடிக்கையும் எடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ)

# எரிவாயு கிடங்கில் தீ

## ஒருவர் பலி! 18 பேர் படுகாயம்



(ஏதென்ஸ்)

ஆஸ்திரியா நாட்டின் கிழக்கு பகுதியிலுள்ள இயற்கை எரிவாயு சேமிப்பு கிடங்கில் பயங்கர தீவிபத்து ஏற்பட்டதில் ஒருவர் பலியானதாகவும், 18 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

ஐரோப்பிய நாடான ஆஸ்திரியாவின் வியன்னா நகரின் கிழக்கு பகுதியில் பாவும்கார்டென் இயற்கை எரிவாயு சேமிப்பு கிடங்கு உள்ளது. ரஷ்யாவில் உற்பத்தி செய்யப்படும் இயற்கை எரிவாயு இங்கு சேமிக்கப்பட்டு மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கு கொண்டு செல்லப்படுகின்றன.

இந்நிலையில், நேற்று முன்தினம் காலை ஆலையில் திடீரென வெடிச்சத்தம் கேட்டது. இதனைத் தொடர்ந்து அங்கு பயங்கரத் தீ விபத்தும் ஏற்பட்டது. இந்த விபத்தில் ஒருவர் பலியானதாகவும் 18பேர்வரை படுகாயமடைந்துள்ளதாகவும் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ)

# சிங்கப்பூரில் மின்சாரக் கார் பகிர்வுத் திட்டம் ஆரம்பம்





(சிங்கப்பூர்)

சிங்கப்பூரில் மக்கள் அரசு போக்குவரத்து வாகனங்களை பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் விதமாக மின்சாரக் கார் பகிர்வுத் திட்டம் நேற்று முன்தினம் தொடங்கப்பட்டுள்ளது. மின்சாரக் கார் பகிர்வு திட்டம் என்பது மின்சாரத்தின் மூலம் இயங்கும் கார்கள் பொது மக்களின் உபயோகத்திற்காக பயன்படுத்தப்படுதலாகும்.

ப்ளூஎஸ்ஜி என்ற நிறுவனமானது இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. அதன்படி காரானது அதற்கு ஏற்படுத்தப்பட்டுள்ள கார் நிலையத்தில் நிறுத்தப்பட்டிருக்கும். காரை பயன்படுத்தி அனைத்து இடங்களுக்கும் செல்லலாம்.

குறைந்த பட்ச பயண நேரம் 15 நிமிடங்கள் இதற்கான செயலியின் மூலம் வாடிக்கையாளர்கள் வாகனங்களை முன்பதிவு செய்து கொள்ளலாம்.

தற்சமயம் 80 கார்கள் மற்றும் 32 சார்ஜ் ஏற்றும் நிலையங்கள் உள்ளன. 2020ஆம்ஆண்டிற்குள் 1000 வாகனங்கள் மற்றும் 2000 சார்ஜ் ஏற்றும் நிலையங்கள் அமைக்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது.

இந்த திட்டம் மக்கள் பொது வாகனங்களை பயன்படுத்துவதை மேம்படுத்தும் விதமாக ஏற்படுத்தப்படவுள்ளது. மேலும் வாகனங்களின் எண்ணிக்கையை குறைப்பதற்காகவும் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

பாரிஸ்க்கு அடுத்து உலகின் இரண்டாவது மின்சார கார் பகிர்வு திட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# யூ டியூப் மூலம் 70 கோடி ரூபாய் சம்பாதித்த ஆறு வயதுச் சிறுவன்



(நியூயோர்க்)

இணையத்தளங்களில் பதிவு செய்த தனது வீடியோ மூலம் ஆறு வயது சிறுவன் ஒரு ஆண்டில் 70 கோடி ரூபாய் சம்பாதித்துள்ளது அனைவரிடமும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

இணைய தளங்களில் வெளியிடப்படும் வீடியோ மூலம் பலர் பிரபலமாகின்றனர். அவ்வாறு யூ டியூப் மூலம் பிரபலமான வர்களின் பட்டியலில் பல கோடி ரூபாய் சம்பாதித்த சிறுவன் என்ற பெருமையை அமெரிக்காவை சேர்ந்த ரியான் பெற்றுள்ளான்.

ரியான் மூன்று வயது முதல் தனது விளையாட்டு பொருட்களை வைத்து விளையாடும்போது பெற்றோர் அதனை வீடியோ எடுத்து யூ டியூபில் பதிவேற்றம் செய்து வருகின்றனர்.

இது சிறுவர்கள் மட்டுமன்றி அனைத்து தரப்பினரையும் கவர்ந்தது. அவனின் குழந்தை மொழிக்கு ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள் உள்ளனர்.

மிகச்சிறிய வயதிலேயே யூ டியூப் பிரபலமான ரியானுக்கு தனி இரசிகர்கள் கூட்டம் உள்ளது. அதன் மூலம் ஒரே ஆண்டில் 70 கோடி ரூபாய் சம்பாதித்துள்ளான். (இ)

# கலிபோர்னியாவில் காட்டுத்தீயை அணைக்க முடியாமல் திண்டாட்டம்

## நூற்றுக்கணக்கான கட்டடங்கள் நாசம்



(கலிபோர்னியா)

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் பற்றி எரியும் காட்டுத்தீயினால் நூற்றுக்கணக்கான கட்டடங்களும் வீடுகளும் சேதமடைந்துள்ளன. அத்தோடு, பல இலட்சம் ரூபாய் பெறுமதியான சொத்துக்களுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது.

கடந்த 4ஆம் திகதி கலிபோர்னியாவின் வடக்குப் பகுதியில் ஏற்பட்ட இந்தக் காட்டுத்தீயை கட்டுப்படுத்த தீயணைப்பு வீரர்கள் கடுமையாக போராடி வருகின்றனர். அத்தோடு, ஹெலிகொப்டர்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

காற்றின் காரணமாக தீ வேகமாக பரவி வரும் நிலையில், குடியிருப்புகளிலுள்ள மக்கள் பத்திரமாக வெளியேற்றப்பட்டுள்ளனர்.

நியூயோர்க் நகரத்தை விட பெரிய நகரான பர்பரா கௌண்டிஸ் மற்றும் வென்சுரா ஆகிய பகுதிகளின் மலையோர பிரதேசத்திலேயே இத்தீ பரவியுள்ளது. இதனால், நகரத்தின் 943 சதுர கிலோ மீற்றர்களுக்கும் அதிகமான நகர்ப்பகுதி புகைமூட்டத்தால் மூடப்பட்டுள்ளது.

அதிகரிக்கும் காற்று காரணமாக நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு மாத்திரம் சுமார் 2500இற்கும் அதிகமான ஏக்கர் வனப்பகுதி நாசமடைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இவ்வாறு இதுவரை சுமார் 50,000இற்கும் அதிகமான ஏக்கர் வனப்பகுதி தீயில் கருகியுள்ளது.

புகைமூட்டம் காரணமாக மக்கள் பெரும் அவதிப்பட்டு வருகின்ற நிலையில், தீயை அணைக்கும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.


அத்தோடு, தீயினால் ஏற்பட்ட சேத விபரங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டு வருகின்றது.

கலிபோர்னிய மாநில வரலாற்றில் பதிவாகியுள்ள ஐந்தாவது மிகப்பெரிய தீப்பரவல் சம்பவம் இதுவாகும். (இ)

# தமிழ்நாடு காவல்துறை அருங்காட்சியகத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் நீர்மூழ்கி

(சென்னை)

தமிழ்நாடு காவல்துறையின் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் நீர்மூழ்கி பார்வையாளர்களைப் பெரிதும் கவர்ந்து வருவதாக ஏஎன்ஐ செய்திநிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.



கோயம்புத்தூரில் தமிழ்நாடு காவல்துறையின் அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு தமிழ்நாடு காவல் துறையின், இந்திய இராணுவத்தின் பயன்பாட்டில் இருந்த ஆயுதங்கள், தளபாடங்களும், பழங்கால போர்க்கருவிகள் உள்ளிட்டவையும் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

பாகிஸ்தானுக்கு எதிராக கார்கில் போரின் போது இந்திய இராணுவத்தினரால் பயன்படுத்தப்பட்ட டாங்கி ஒன்றும் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

இங்கு கரையோரக் காவல்படையின் படகுகளும் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. அத்துடன், விடுதலைப் புலிகளால் தயாரிக்கப்பட்ட நீர்மூழ்கி ஒன்றும் இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்காக தமிழ்நாட்டில் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருந்த போது, இந்த நீர்மூழ்கி தமிழ்நாடு காவல் துறையினரால் கைப்பற்றப்பட்டது.

அருங்காட்சியகத்தில் இடம்பெற்றுள்ள இந்தச் சிறிய நீர்மூழ்கி, பார்வையாளர்களைப் பெரிதும் கவர்வதாக ஏஎன்ஐ செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)

# 'ஈ சுவாபிமானி' தங்க விருது ஜனாதிபதியிடம் கையளிப்பு

(கொழும்பு)

மக்களின் பிரச்சினைகளை நேரடியாக ஜனாதிபதியிடம் தெரிவித்து தீர்வுகளை பெற்றுக்கொள்வதற்காக ஜனாதிபதி அலுவலகத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் "ஜனாதிபதியிடம் தெரிவிக்க" நிகழ்ச்சித்திட்டத்திற்கு அண்மையில் கிடைக்கப்பெற்ற "ஈ சுவாபிமானி" தங்க விருது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்பட்டது.



ஜனாதிபதி அலுவலகத்தில் தொலைத் தொடர்பு டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் செயலாளர் வசந்த தேசப்பிரியவினால் இவ்விருது ஜனாதிபதியிடம் நேற்று முன்தினம் வழங்கப்பட்டது.

தகவல் தொழில்நுட்பத்தை மக்கள் சேவைக்காக உச்சளவில் பயன்படுத்தியதை பாராட்டி இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்தினால் "ஜனாதிபதியிடம் தெரிவிக்க" நிகழ்ச்சித் திட்டத்திற்கு இவ்விருது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

"ஜனாதிபதியிடம் தெரிவிக்க" நிகழ்ச்சித்திட்டம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதி பதவிக்கு தெரிவு செய்யப்பட்ட முதலாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு அறிமுகப்படுத்தப்பட்டதுடன், அரச சேவை வழங்கல் செயல்முறையை பலப்படுத்தி மக்களின் பிரச்சினைகள், மனக்குறைகள் மற்றும் கருத்துக்கள், முன்மொழிவுகளை ஜனாதிபதியிடம் தெரிவிப்பதுடன், அவற்றுக்கு துரிதமாகவும் பயனுறுதிமிக்க வகையிலும் தீர்வுகளை பெற்றுக்கொடுப்பதற்கும் வசதியளிப்பது இதன் நோக்கமாகும்.

பொது மக்களுக்கு 1919 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக அரச தகவல் மையத்துடன் தொடர்பு கொண்டு அல்லது இணையத்தளம், மின்னஞ்சல், தபால் ஆகிய வழிகளினூடாக ஜனாதிபதி அலுவலகத்திற்கு தமது முறைப்பாடுகள், மனக்குறைகள் அல்லது கருத்துக்களை முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் "ஜனாதிபதியிடம் தெரிவிக்க" நிகழ்ச்சித் திட்டத்தினூடாக வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு கிடைக்கும் முறைப்பாடுகள் ஜனாதிபதி அலுவலகத்தின் மக்கள் தொடர்பாடல் பிரிவினால் பரீட்சிக்கப்பட்டு அம் முறைப்பாடுகள் மேலதிக நடவடிக்கைகளுக்காக குறித்த அமைச்சுகள் அல்லது நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

மேற்படி அனைத்து நடவடிக்கைகளும் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி உருவாக்கப்பட்டுள்ள கணனி தரவு முறைமையினூடாக வினைத்திறன் மிக்க வகையில் முன்னெடுக்கப்படுகின்றன.

"ஜனாதிபதியிடம் தெரிவிக்க" நிகழ்ச்சித்திட்டத்திற்கு தற்போது 164,504 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், அவற்றில் தீர்க்கப்பட்டுள்ள முறைப்பாடுகள் 62,351 ஆகும். தீர்வுகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை 59,351 ஆகும்.

இந்நிகழ்வில் ஶ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத்தின் தலைவர் குமாரசிங்க சிறிசேன, ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் சுனந்த காரியப்பெரும, சிரேஷ்ட உதவிச் செயலாளர் சமந்தி ரணசிங்க, ஶ்ரீலங்கா மொபிட்டல் நிறுவனத்தின் சிரேஷ்ட பொது முகாமையாளர் சமன் பெரேரா, பொது முகாமையாளர் பிரபாத் கமகே ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-7)

# ஜனாதிபதி மைத்திரியை சந்தித்தார் இந்திய விமானப்படைத் தளபதி

(கொழும்பு)

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய விமானப்படைத் தளபதி எயர் சீவ் மார்ஷல் பிரேந்தர் சிங் டனோ, நேற்று முன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

நான்கு நாட்கள் பயணமாக கடந்த 10ஆம் திகதி இலங்கை வந்த இந்திய விமானப்படைத் தளபதி எயர் சீவ் மார்ஷல் பிரேந்தர் சிங் டனோ, கடந்த 11 ஆம் திகதி பிரதமர், மற்றும் பாதுகாப்பு உயர் மட்டத்தினருடன் பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

நேற்று முன்தினம் இந்திய விமானப்படைத் தளபதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை அவரது வதிவிடத்தில் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.



இந்தச் சந்திப்பில் இலங்கை விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் கபில ஜயம்பதி மற்றும் இலங்கைக்கான இந்திய தூதுவர் தரன்ஜித் சிங் சந்து ஆகியோரும் கலந்து கொண்டனர். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### பகிர்ந்து கொள்வதில் ஒரு விதம்

அம்மாவுக்கு நீரிழிவு வியாதி. மகன் சொன்னான்: "அம்மா! உனக்கு உடம்பு நல்லா ஆகிற வரை நான் எந்தப் பழமும் சாப்பிடமாட்டேன்." தாய் நெகிழ்ந்து போனாள்.

"வேண்டாம்டா. உனக்கு வயசாச்சுடா. என் காலம் கொஞ்சம்டா.நீ வாலிபன்டா. கல்லைத் தின்றாலும் செரிக்கிற வயசுடா. நீநல்லா சாப்பிடுடா எனக்காக இப்படி இருக்காதடா'' என்றாள். மகன் கேட்கவில்லை. கொஞ்ச காலம் ஓடியது அம்மாவின் நச்சரிப்புத் தாங்காமல் பழங்களைச் சாப்பிட ஆரம்பித்தான்.

அவன் கொஞ்ச காலம்தான் பழங்களை விட்டுவிட்டு இருந்தான். ஆனால் அச்செயலின் மூலம் அவன் தாயின் மனத்தில் நீங்காத இடத்தைப் பெற்றுக் கொண்டான்.

மகளுக்குத் தேர்வு நடக்கிறது அம்மாவோ ஒளியும் ஒலியும் பிரியை மகள் கேட்கிறாள் "இன்னைக்கு ஒலியும் ஒளியும்ல என்னென்ன புதுப்பாட்டும்மா போட்டாங்கா?'' "நான் பார்க்கலைம்மா உனக்குப் பரீட்சை நடக்கும் போது எனக்கெதுக்கும்மா கேளிக்கை?'' என்கிறாள் அம்மா. அவ்வளவுதான் மகள் உருகிப்போனாள்.

வீட்டில் அப்பாவுக்கு மஞ்சள் காமாலை. பத்தியச் சாப்பாடு சனிக்கிழமையானால் மீன் வாங்கிச் சமைப்பது அந்த வீட்டு வழக்கம். சனிக்கிழமையன்று அப்பா கேட்டார். "இன்னைக்குப் பிள்ளைங்களுக்கு ஏன் மீன் சமைக்கலை?''

"இல்லைங்க உங்க பெரிய மகன் வேண்டாம்னுட்டான். அப்பாவுக்குச் சரியானதும் தான் இந்த வீட்டுக்குள்ள மீன் வரலாம்னு ஒரே போடாய்ப் போட்டுட்டான்'' என்றாள் மனைவி. அப்பாவுக்கு ஒன்றும் புரியவில்லை. "நிஜமாவா, அப்படிச் சொன்னான்?'' என்றார். பெரிய மகனின் மனதை அவர் புரிந்து கொள்ளக் கிடைத்த அரிய சந்தர்ப்பம் அது. அவர் மஞ்சள் காமாலையைத் துரத்திவிட்டு எழுந்தார். இயல்பானார். அதன் பிறகு பெரிய மகனிடம் மிகப் பிரியமாக இருக்க ஆரம்பித்துவிட்டார்.

குடும்ப உறுப்பினர்களும் நண்பர்களும் சினிமாவில் வருவது போல் பாச வசனங்களைப் பேசிக் கொள்வது சாத்தியமல்ல. மனதில் இருக்கும் எண்ணங்கள் பலவும் இதுபோன்ற செயல்களில் இயல்பாக வெளிப்படவேண்டும். நீ பாடு சாகக் கிட! நான் உல்லாசடூர் போகிறேன் என்று ஒரு கணவன் தன் மனைவியை விட்டுவிட்டுப் புறப்பட்டால் அது அவர்களிடையே பெரிய உறவுச் சிதைவை உண்டாக்கும்.

குடும்ப உறுப்பினர்கள்; நண்பர்கள்; வேண்டியவர்களுக்காகச் சிறுசிறு தியாகங்களை நாம் மேற்கொள்ள வேண்டும். மற்றவர்களின் துன்பங்களையும் உணர்வுகளையும் நாமும் ஓரளவு பகிர்ந்து கொள்ளவேண்டும். அதன் விளைவாக நம்மைச் சுற்றிய உலகம் எவ்வளவு இனிமையானது என்பதை நமக்கு உணர்த்தும். விலகி விலகிப் போய்க்கொண்டே இருந்த பிறர் செயற்பாடுகளில் குறைபாடுகளை மட்டுமே சுட்டிக்காட்டிக் கொண்டிருந்தால் நமக்கு ஒரு துன்பம் வருகிறபோது அதைப் பகிர்ந்து கொள்ள ஈ காக்காய் வராது. துன்பத்திலேயே பெரிய துன்பம் நம் துன்பத்தைப் பகிர்ந்து கொள்ள எவரும் இல்லாமல் போவதுதான்!

இதை நாம் உணர ஆரம்பிப்போமா?

**லேனா தமிழ்வாணன்**

# எதிர்கால சந்ததியை போதைப்பொருள் பாவனையிலிருந்து விடுவிக்க பாடசாலை மட்டத்தில் பல்வேறு வேலைத்திட்டங்கள

## கல்வியமைச்சர் காரியவசம் தெரிவிப்பு



(கொழும்பு)

எதிர்காலசந்ததியைபோதைப் பொருள் பாவனையிலிருந்து பாதுகாப்பதற்காக பாடசாலை சமூகத்தில் மாத்திரமன்றி வெளித்தரப்புகளினதும் தலையீடு மிகவும் அவசியம் என்று கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சு பாதுகாப்புத் தரப்புடன் இணைந்து உளவுப் பிரிவு தகவல்களையும், பாடசாலை சமூகத்திடம் இருந்து பெற்றுக் கொள்ளும் தகவல்களையும் அடிப்படையாகக் கொண்டு இது தொடர்பில் நடவடிக்கை எடுத்துவருவதாக தெரிவித்தார்.

பாடசாலை மட்டத்தில் நிறுவப்படும் குழுக்கள் ஊடாகவும் பல்வேறு வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இலங்கைக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியத்தில் விரைவில் முறைப்பாடு

(கொழும்பு)

தொழிற்சங்க உரிமைகளைப் பறிக்கின்ற அரசாங்கத்திற்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியத்திடம் முறைப்பாடு செய்ய இலங்கையின் முன்னணி தொழிற்சங்கங்கள் தீர்மானித்துள்ளன.

தொழிற்சங்க உரிமைகளை அரசாங்கம் தொடர்ந்தும் பறித்துவந்தால் நாடளாவிய ரீதியில் பாரிய போராட்டங்களை செய்ய உத்தேசித்திருப்பதாக நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ரயில்திணைக்கள ஊழியர்களின் தொழிற்சங்கத்தை நசுக்கும் அடக்கு முறைக்கு எதிரான தொழிற்சங்கங்களின் ஒன்றியம் கொழும்பில் நேற்று ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தியது.

இதில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட இலங்கை ஆசிரியர்சங்கத்தின்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் “ரயில்வே திணைக்கள ஊழியர்கள் கடந்த 6 தினங்களாக வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தார்கள். எனினும் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட நேரத்தில் தலையிடாமல் நேற்று முன்தினமே அரசாங்கம் அதில் தலையீடு செய்து குழு அமைத்து பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கு முயற்சி செய்தது.

எனினும் கடந்த திங்கட்கிழமை கல் விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைகள் ஆரம்பமாகியதுடன், மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். அதற்கு அரசாங்கமே பொறுப்புக் கூற வேண்டும்.

சாதாரணமாக தொழிற்சங்கப் போராட்டமொன்றை தொழிற்சங்கங்கள் மேற்கொண்ட சந்தர்ப்பங்களில் அதனை தடுப்பதற்கு அரசாங்கம்அடக்குமுறையை கையாண்டது. அதன் ஓரங்கமாகவும், ஆயுதமாகவும் பயன்படுத்திய அரசாங்கம், ரயில் சேவையை அத்தியாவசிய சேவையாக அரசாங்கம் அறிவிக்க முயற்சித்தமை கண்டிக்கத்தக்க விடயமாகும்.

ஐரோப்பிய ஒன்றியத்தினால் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை வழங்கப்பட்டபோது, தொழிலாளர்களின் தொழிற்சங்க உரிமைகளைப் பாதுகாப்பதாக இலங்'கை உறுதியளித்தது. இருப்பினும் உள்நாட்டில் அந்த உறுதிமொழிகளை நிறைவேற்ற அரசாங்கம் தவறிவருகிறது. இதனை சுட்டிக்காட்டி ஐரோப்பிய ஒன்றியத்திற்குச் சென்று அரசாங்கத்தின் செயற்பாட்டிற்கு எதிராக முறையிட தீர்மானித்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# “புதிய உள்ளூராட்சித் தேர்தல் முறைகள்” பற்றிய சிந்தனைக் கூடத்தின் கருத்தரங்கு

சிந்தனைக்கூடம் - யாழ்ப்பாணம் எனும் ஆய்வு, அபிவிருத்திக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் கருத்தரங்கு ஒன்று நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணி முதல் முற்பகல் 11 மணிவரை நல்லூர் பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

மேற்படி கருத்தரங்கில் “புதிய உள்ளூராட்சித் தேர்தல் முறைகள், வேட்பாளருக்கான விதிமுறைகள்,பெண் வேட்பாளர்களுக்கான புதிய நடைமுறைகள், வாக்காளருக்கான வழிகாட்டல்கள்” எனும் தலைப்பில், யாழ். மாவட்ட பிரதித் தேர்தல் ஆணையாளர் தனபால சிங்கம் அகிலன் கருத்துரை வழங்குவார்.

கருத்துரையின் பின்னர் கலந்துரையாடல்இடம்பெறும்.

மேற்படி கருத்தரங்கு எதிர்வரும் தேர்த லில் வேட்பாளர்களாகப் போட்டியிட எண்ணியுள்ள ஆண்களுக்கும், பெண்களுக்கும் மிகப் பயன் மிக்கதாக அமையும். கட்சி பேதமின்றி அறிவைப் பகிர்வதையே நோக்கமாகக்கொண்ட இந் நிகழ்வுக்கு ஆர்வளர்கள் எவரும் வருகைதந்து பயன் பெறலாமெனசிந்தனைக்கூட பணிப்பாளர் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் அறிவித்துள்ளார். (இ-7)

# அபிவிருத்தி உதவியாளர்களின் நியமனத்தை உடன் நிறுத்தவும்

## பிரதமர் ரணில் உத்தரவு



(கொழும்பு)

அபிவிருத்தி உதவியாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்களின் நியமனத்தை நிறுத்தி வைக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை வழங்கியுள்ளார். தேர்தல்ஆணையகம் விடுத்த கோரிக்கைக்கு உடனடி தீர்வு வழங்கும் பொருட்டே தாம் இந்த ஆலோசனையை வழங்கியுள்ளதாக தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு உள்ளிட்ட நாடளாவிய ரீதியில் பல்கலைக்கழக கல்வியை பூர்த்தி செய்து வெளியேறிய 10 ஆயிரம் பட்டதாரிகள் போட்டிப் பரீட்சையின் பின்னர், நேர்முகத் தேர்வில் சித்தியடைந்திருந்தனர்.

இந்நிலையில் தற்போது மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை ஆகியவற்றுக்கான தேர்தல் நடத்தப்படவுள்ள நிலையில் அரச நியமனங்கள் வழங்குவது பொருத்தமற்றதென தேர்தல்கள் ஆணைக்குழு, அரசாங்கத்திடம் அறிவித்தது.

குறித்த விடயம் தொடர்பில் கவனத்தில் எடுத்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தேர்தல் நிறைவடையும் வரை நியமனம் வழங்குவதை நிறுத்தி வைக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல் இரண்டு வாரங்களுக்குள் நடைபெற்றால் தகுதிபெற்றவர்களுக்கு தேர்தல் நிறைவடைந்த அடுத்த வாரம் நியமனம் வழங்கப்படும் என உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன உறுதியளித்துள்ளார். (இ-7)



# மகிந்த ஏற்றதை வரவேற்கிறேன் -அசாத் சாலி-



(கொழும்பு)

தன்னுடன் இருப்பவர்கள் மோசடிக்காரர்கள்என்பதை மகிந்த ராஜபகஷ் ஏற்றுக் கொண்டுள்ளதை வரவேற்கின்றோம். அத்துடன் ஜனாதிபதியின் நேர்மையான போக்கை உணர்ந்து கொள்கின்றவர்களே அரசாங்கத்தில் இணைகின்றனர் என தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அஸாத் சாலி தெரிவித்தார்.

அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படுத்தும் இயக்கம் கொழும்பில்நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையி லேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.(இ-7)

# சர்வமதப் பேரவை இரங்கல்




(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சர்வமதப் பேரவையின் மூத்த உறுப்பினர் சுப்பிரமணியம் பரமநாதனின் திடீர் மறைவு பெரும் அதிர்சியை ஏற்படுத்தியுள்ளது. இவரது மறைவு தமிழ் பேசும் மக்கள் அனைவரையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

சிறந்த சமூக சேவையாளராகிய இவர் தமிழ் மக்களின் உரிமைக்காக குரல் கொடுத்த மாமனிதன். தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகப் பாடுபட்ட இவர் எங்கு அநீதி நடக்கின்றதோ அதனைத் தட்டிக்கேட்கத் தயங்குவதில்லை.

“மக்கள் சேவையே மகேசன் சேவை” என இணையற்ற சேவை புரிந்த அன்னாரின் மறைவு ஈடுசெய்ய முடியாத ஒன்றாகும். இவரது ஆத்மா சாந்தியடைய யாழ். மாவட்ட சர்வமதப் பேரவையினராகிய நாம் அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். (இ)

# ராஜாங்க அமைச்சர் ரங்கே விடுதலை



(கொழும்பு)

சட்டவிரோதமாக பெற்ற ஜீப் ஒன்றுக்கு, பிறிதொரு வாகனத்தின் பதிவுச் சான்றிதழை பயன்படுத்திய சம்பவம் தொடர்பில், குற்றம்சாட்ட இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டார கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் குறித்த வழக்கு ஏ.ஏ.ஆர்.ஹெய்யந்துட்டுவ முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது, பிரதிவாதி தரப்பு மற்றும் முறைப்பாட்டாளர் தரப்பும் சமரசம் செய்து கொள்ள இணங்கியுள்ளதாக சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் கிஹான் ரத்நாயக்க சுட்டிக்காட்டினார்.

எனவே பிரதிவாதிக்கு எதிரான குற்றப் பத்திரிகையை இரத்துச் செய்ய அனுமதிக்குமாறு அவர் கோரினார்.

இதனை கருத்தில்கொண்ட நீதவான் வழக்கை நேற்று முன்தினத்துடன் நிறைவு செய்து சந்தேக நபரையும் விடுவித்துள்ளார். (இ-7)

# மரண அறிவித்தல்

## திருமதி. மகாதேவா இராஜேஸ்வரி



*கொக்குவில் மேற்கு மணியர்பதி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மகாதேவா இராஜேஸ்வரி கடந்த (10.12.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.*

*அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்- பாக்கியம் தம்பதியரின் செல்வப் புதல்வியும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-பவளம் தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்ற மகாதேவாவின் மனைவியும் நிஷானந்தி, பார்த்தீபன் ஆகியோரின் பாசமிகு தாயும் பிறேமகுமார், சித்தா ஆகியோரின் அன்பு மாமியும் பரமேஸ்வரி, நாகேஸ்வரி, சொர்ணலக்சுமி, புஸ்வவதி, யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, இரத்தினசபாபதி மற்றும் பாக்கியநாதன், பரமேஸ்வரி, ஞானேஸ்வரி, கமலேஸ்வரி, அசோக்குமார் ஆகியோரின் மைத்துனரும் அதீனா, அதீனன், அக்ஷாயினி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14.12.2017 இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கொக்குவில் மேற்கு மணியர்பதி வீதியிலுள்ள அன்னாரினது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.*


*இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.*

மணியர்பதி வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்,
தே.ஜெயக்குமார் (மருமகன்).

(1803)

# அமைச்சர் ஜோன் அமரதுங்க நேற்று அடிக்கச் சொன்னார் இன்று தாக்கினார்-சொய்சா



(கொழும்பு)

பொலிஸாரும் எம்முடையது. அரசாங்கமும் எம்முடையது. எதிர்த்து வருகின்ற அனைவரையும் அடித்து விரட்டுங்கள் என அரசாங்கத்தின் முக்கிய அமைச்சரான ஜோன் அமரதுங்க நேற்று தெரிவித்திருந்த கருத்து இன்று ரக்வானையில் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக கூட்டு எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்ஜித் சொய்சா தெரிவித்தார்.

வெலிகெபல பிரதேச சபை ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களினால் தாக்குதலுக்குள்ளானவர்களை இரத்தினபுரி வைத்தியசாலைக்குச் சென்று சுகம் விசாரித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை, தாக்குதல் மேற்கொண்ட ஐ.தே.கவின் வேட்பாளர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு எதிர்வரும் 22 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)




# ஊழல்வாதிகள் இன்னும் தண்டிக்கப்படவில்லை!

## சரத் பொன்சேகா வருத்தம்



(கொழும்பு)

மகிந்த அரசாங்கத்தில் இருந்த சில ஊழல் வாதிகள் தொடர்பில் இன்னும் நடவடிக்கை எடுக்காமை வருத்தமளிப்பதாக அமைச்சர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

மாகொல பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்ட அவர் ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

# கட்டுப்பாட்டு விலையை மீறி தேங்காய் விற்றால் வழக்கு

(கொழும்பு)

தேங்காயின் கட்டுப்பாட்டு விலையான 75 ரூபாவை விட அதிக விலைக்கு விற்பனை செய்த வியாபாரிகள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தும் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. மூதூர் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதியில் 110 ரூபாவிற்கு தேங்காய் விற்பனை செய்த கடை உரிமையாளருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டு பதில் நீதவான் இல்லியாஸ் முபாரீஸினால் ரூபா 1,500 அபராதம் விதிக்கப்பட்டதாகவும் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை அறிவித்துள்ளது. (இ-7)

# ‘புறக்கணிப்பை கைவிடவும்’



(கொழும்பு)

பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள புகையிரத தொழிற்சங்கங்களின் கோரிக்கைகள் தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்டுள்ள குழுவினால் விரைவில் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க முடியும்" என, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான மகிந்த அமரவீர தெரிவித்தார்.

அமைச்சர் சரத் அமுனுகமவின் தலைமையின் கீழ் அமைச்சரவையினால் இந்த குழு நியமிக்கப்பட்டுள்ளதாக, சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

"எனவே, இந்தக் குழுவினால் தீர்வுகள் வழங்கப்படும் வரை சாதாரண தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் நிலையை கருத்திற்கொண்டு பணிப்புறக்கணிப்பை கைவிடுமாறு பணியாளர்களிடம் கோரிக்கை விடுக்கிறேன்" என அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார். (இ-7)

# மத்திய வங்கியின் பகல் கொள்ளை எம்மீது இல்லை, நாம் சுத்தம்- எஸ்.பி



(கொழும்பு)

மத்திய வங்கியின் பகல் கொள்ளை யாருடைய தலையில் விழுந்துள்ளது என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிந்தே வைத்துள்ளதாகவும், தமக்கு தூய்மையான ஒரு தலைவரும் மக்கள் பிரதிநிதிகள் கூட்டமும் இருப்பதாகவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கண்டி மாவட்டத்தின் பஸ்பாகே கோரல பிரதேச சபைக்கு நேற்று முன்தினம் வேட்புமனுவைத் தாக்கல் செய்துவிட்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

எதிர்வரும் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கே வெற்றி வாய்ப்பு அதிகம் உள்ளதாகவும், மகிந்த ராஜபக்ஷவின் குழுவுக்கு வாய்ப்பு இல்லையெனவும், அவரது ஆதரவாளர்கள் தற்பொழுது அவரை விட்டும் வெளியேற ஆரம்பித்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இறந்த நிலையில் மற்றுமோர் யானை



(கொழும்பு)

அநுராதபுரம் திறப்பனை எதமடேகம பிரதேசத்தில் இறந்த நிலையில் காட்டு யானை ஒன்றின் உடல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை இந்த உடல் மீட்கப்பட்டதாக வனவிலங்கு திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட காட்டு யானை ஒன்றின் உடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது என அவர்கள் தெரிவித்திருந்தனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை திறப்பனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். இலங்கையில் அண்மைக்காலமாக காட்டு யானைகள் சுட்டுக் கொல்லப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தம்மாலோக்க தேரருக்கு வெளிநாடு செல்ல அனுமதி



(கொழும்பு)

யானைக் குட்டியொன்றை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டுடன் தொடர்புடைய உடுவே தம்மாலோக்க தேரருக்கு வெளிநாடு செல்ல கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று முன்தினம் அனுமதி வழங்கியது.

பௌத்த பிரசங்கம் நிகழ்த்துவதற்காக தமக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து கொழும்பு மேல் நீதிமன்றில் அவர் அனுமதி கோரி மனுத்தாக்கல் செய்திருந்தார்.

இந்நிலையில் குறித்த மனு, நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது,

கொழும்பு மேல் நீதிமன்ற நீதவான் சம்பத் விஜேரத்ன அனுமதியளித்து உத்தரவிட்டார். உலகின் பல நாடுகளின் பௌத்த தலைவர்கள் விடுத்த அழைப்பின் பேரில் உடுவே தம்மாலோக்க தேரருக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் 18 ஆம் திகதி வரை வெளிநாடு சென்று வருவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

உடுவே தம்மாலோக்க தேரர் அமெரிக்கா, தாய்லாந்து உள்ளிட்ட நாடுகளுக்கு தர்ம போதனை நிகழ்த்துவதற்காகச் செல்லவுள்ளார். பொதுச்சொத்தான யானைக் குட்டியை அனுமதிப்பத்திரமின்றி வைத்திருந்ததாக சட்டமா அதிபரினால் உடுவே தம்மாலோக்க தேரருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டு தொடரில் 19 சாட்சியாளர்கள் மற்றும் மூன்று ஆவணங்களை எதிர்பார்த்திருப்பதாக சட்டமா அதிபர் நீதிமன்றத்திடம் தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சிலுவை யுத்தத்திற்கு வழிவகுக்கிறார் ட்ரம்ப்

## அமைச்சர் சம்பிக்க விசனம்



(கொழும்பு)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், சிலுவை யுத்தத்திற்கு வழி வகுத்துள்ளார்" என, மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். உள்நாட்டு,வெளிநாட்டு அரசியல் மற்றும் சமூகப் பிரச்சினைகளின் பகுப்பாய்வு தொடர்பில், தனது பேஸ்புக் வலைத்தள பதிவிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, “விசேடமாக இஸ்ரேலின் தலைநகரமாக ஜெருசேலமை ஏற்றுக்கொள்வதாகவும், அமெரிக்காவின் தூதரகத்தை ஜெருசலேத்தில் அமைக்கவும் ட்ராம்ப் தீர்மானித்துள்ளார். அவர் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கிறிஸ்தவர்களுக்கு வழங்கிய வாக்குறுதிக்கு அமையவே, ஜெருசலேம் இஸ்ரேலின் தலைநகராக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எனினும், இதற்கு கத்தோலிக்கர்களின் பிரதானியான போப்பாண்டவர் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார். யூதர்களின் கைகளுக்கு ஜெருசலேத்தின் ஆட்சி அதிகாரம் சென்றால் கத்தோலிக்கர்களின் பிரச்சினையை எதிர்கொள்வர், என்பதே போப்பாண்டவரின் எண்ணம். இந்த விடயத்தால் பல குழப்ப நிலைகள் உருவாகியுள்ளன. ஒருபக்கம் இஸ்லாம் நாடுகள் இதற்கு எதிர்ப்பை வெளியிட்டுள்ளன" எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# அதிகாரப்பகிர்வு மாத்திரம் பிரச்சினைக்குத் தீர்வல்ல



## அமைச்சர் மனோ கணேசன் தெரிவிப்பு

(கொழும்பு)

அதிகாரப்பகிர்வு மூலமாக மாத்திரம் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது ஒருபோதும் சாத்தியமாகாது. கடந்த கால தவறு களைத் திரும்பிப்பார்த்து விடப்பட்ட தவறுகள் அனைத்தும் சரி செய்யப்பட வேண்டும் என தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். வடக்கிலும், தெற்கிலும் இருந்து நாட்டினை பிரிக்கும் எந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டாலும் அதனை நாம் தடுத்து நாட்டினை ஒன்றிணைப்போம் எனவும் அவர் தெரிவித்தார்.

ஒன்றிணைத்த மதச் சகவாழ்வு மாநாடு நேற்று முன்தினம் கொழும்பு பண்டாரநயாக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் அமைச்சர் மனோ கணேசன் உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார்.

பௌத்த மாநாயக்க தேரர்கள், இந்து மதத் தலைவர்கள், கிறிஸ்தவ, இஸ்லாமிய மதத் தலைவர்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் சிவில் மற்றும் சர்வதேச பிரதிநிதிகள் என அனைவரும் கலந்துகொண்ட இந்த மாநாட்டில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார்.

இந்த மாநாட்டில் அமைச்சர் மேலும் உரையாற்று கையில்,

நாட்டின் ஆட்சியினை சரியான பாதையில் கொண்டு செல்ல அரசாங்கமாக நாம் செயற்பட்டு வருகின்றோம். அரசியல் அமைப்பினை அடிப்படையாகக் கொண்டு நாம் செயற்பட்டு வருகின்றோம். ஜனாதிபதி தலைமையில் அரச இயந்திரம் செயற்பட்டு வருகின்றது.

எனினும் அதையும் தாண்டி மதத் தலைவர்களின் தலைமைத்துவமும், வழிகாட்டலும் எமக்கு தேவைப்படுகின்றது. நாம் மத சகவாழ்வு மாநாட்டினை நடத்தும் நிலையில் இதில் முக்கியமான சில விடயங்களை கருத்தில் கொண்டு செயற்பட்டு வருகின்றோம். குறிப்பாக "அரசியல் அதிகார இலக்கில் ஆயுதம் தூக்காதிருப்போம்" , "இலங்கையர் எம் அடையாளம் பன்மைத்துவம் எம் சக்தி ", "வரலாற்றை திரும்பிப்பார். தவறுகளைத் திருத்திக்கொள்", "ஓர் நாட்டில் அனைவருக்கும் அதிகாரம்" என்ற பிரதான நான்கு காரணிகளைத் தொனிப்பொருளாக கொண்டே நாம் எமது பயணத்தினை ஆரம்பித்துள்ளோம்.

இந்த நாட்டின் உரிமைகளை வென்றுகொள்ள வடக்கிலும் சரி தெற்கிலும் சரி இனியொருபோதும் ஆயுதம் எந்தக் கூடாது என்பது எமது இலக்காகும். அத்துடன் எமது வரலாற்றை திரும்பிப் பார்த்தல் அதில் தவறவிட்ட விடயங்களை திருத்திக் கொண்டு சரியான பாதையில் பயணிக்க வேண்டும் என்ற கட்டாயமும் உள்ளது. மேலும் ஒரே நாட்டுக்குள் அதிகாரங்களைப் பகிர்ந்து கொண்டு முன்னோக்கிச் செல்ல வேண்டும். நாட்டில் பிரிவினை, இனவாதம், ஆயுத மோதல் அனைத்தையும் முடிவுக்கு கொண்டுவந்து அதிகாரங்களை அனைவருக்கும் பகிர்ந்து வழங்க வேண்டும். கடந்த காலங்களில் ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் கொழும்பை அடிப்படையாகக் கொண்டு அதிகாரங்களை குவித்துக்கொண்டு ஆட்சி செய்தது.

இப்போது அதிகாரங்களை பரவலாக்கி ஆட்சி செய்து வருகின்றோம். அதிகாரப் பகிர்வு தான் இனப் பிரச்சினைக்குத் தீர்வு என்றால் அது ஒருபோதும் சாத்தியம் ஆகாது. அதை என்னால் ஏற்றுக்கொள்ளவும் முடியாது. ஜனநாயக நாட்டில் மேற்கூறப்பட்ட நான்கு விடயங்களும் உள்ளடக்கப்பட வேண்டும். அப்போதே பயணம் இலகுவாகும்.


தேசியக் கொடி, தேசிய அடையாளம், அரசியல் அமைப்பு என்பதை அடிப்படையாகக் கொண்டே அனைவரும் செயற்பட வேண்டும். ஜனாதிபதி முதல் பிரதேச சபை உறுப்பினர்கள் வரை இதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். எனினும் அண்மையில் வடக்கில் மாகாணசபை உறுப்பினர் ஒருவர் தேசியக் கொடியை ஏற்ற மாட்டேன் என்ற வகையில் செயற்பட்டிருந்தார். இது மிகவும் மோசமான செயற்பாடாகும். நாம் அப்போதே இதனைக் கண்டித்திருந்தோம். அதேபோல் தெற்கிலும் சில காலத்திற்கு முன்னர் சிறுபான்மை மக்களின் அடையாளங்களை நீக்கிய தேசியக் கொடியாக ஒன்றை ஏந்தியிருந்தனர். இதுவும் கண்டிக்கத்தக்க விடயமாகும். வடக்கிலும் தெற்கிலும் இனவாதத்தைத் தூண்டும் செயற்பாடுகள் உள்ளன. அரசியல்தீவிரவாதிகள், இனவாதிகள், அடிப்படை வாதிகள் இரு தரப்பிலும் இருந்துசெயற்பட்டுவருகின்றனர்

எனினும் நாம் நடுநிலையாக இருந்து நாட்டினை பாதுகாக்கும் செயற்பாட்டினை முன்னெடுத்து வருகின்றோம். இதில் மதத் தலைவர்கள் அனைவரதும் ஆலோசனை, ஒத்துழைப்புகள் எமக்கு அவசியம். இதனையே ஜனாதிபதி தொடர்ச்சியாக எமக்கு வலியுறுத்தி வருகின்றார். ஆகவே அரசாங்கத்தின் பயணத்தில் மதத் தலைவர்கள் அனைவரதும் ஒத்துழைப்பினை பெற்றுக்கொண்டு பலமான அரசாங்கத்தினை கொண்டு செல்ல வேண்டும் என்றே நாம் நினைக்கின்றோம்.

வடக்கிலோ தெற்கிலோ நாட் டினை பிளவுபடுத்தும் செயற் பாடுகள் முன்னெடுக்கப்படு மாயின் அதனை நாம் வேடிக்கை பார்க்கப் போவதில்லை. பிரிவினைவாதிகள் எத்தனிக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாம் நாட்டினை ஒன்றிணைக்கும் வேலைத்திட்டங்களை முன்னெடுப்போம். அதில் நாம் அனைவரும் முன்னின்று செயற்படுவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1278

### சந்துரு



பிரச்சினை சிறிதெனில் சாமியிடம் போய்விடு... பிரச்சினை பெரியதெனில் சாமியாரா-கவே போய் விடு!

### கவிஷ்னா

படிச்சு முடிக்கிற வரைக்கும் எக்ஸாம் மட்டும் தான் கஷ்டமா தோனும்...



படிச்சு முடிச்சதுக்கு அப்புறம் வாழ்க்கையே கஷ்டமா தோண ஆரம்பிச்சிடும்

### மேகலா

ரதி: ATM மெஷினே வெடிக்கிற அளவுக்கு என்னடி செஞ்ச...?



லதா: ENTER YOUR PIN கேட்டப்ப பேர்ஸிலிருந்து பெரிய பின்னா எடுத்து உள்ள விட்டேன் ஷாட் சர்கூட் ஆகி வெடிச்சிடிச்சு

### பிரியா



எவ்வளவு பெரிய வீட்டில வாழுகிறோம் என்பது பெரிதல்ல!!! எவ்வளவு நிம்மதியாக வாழுகிறோம் என்பதே முக்கியம்

### முருகன்

பரீட்சையில எதிர்பார்த்த ரிசல்ட் வரலேனா மாணவர்கள் தற்கொலை பண்ணிக்கிற மாதிரி



எலெக்சனில எதிர்பார்த்த ரிசல்ட் வராட்டி அரசியல்வாதிகள் தற்கொலை பண்ணிகிட்டா எவ்வளவு நல்லா இருக்கும்

### பரமேஸ்


உலகத்திலேயே சொல்பேச்சு கேட்காத விலங்கு ஆடுதாங்க...



காலாகாலமாக ஆடு ஆடுன்னு சொல்றமே ஒன்னாவது ஆடியிருக்குதா

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# வடக்கில் சுற்றுலாத்துறையை மேம்படுத்தி இளையோருக்கு வேலைவாய்ப்பு அதிகரிக்கப்படும்



**முதலாவது வடக்கு மாகாண சபையின் 112ஆவது அமர்வு 12.12.2017 அன்று மாகாண பேரவைச் சபா மண்டபத்தில் முத லமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட இலக்கு மற்றும் பெறு பேறுகளை அடிப்படையாகக் கொண்ட 2018ஆம் ஆண்டுக் கான வரவு-செலவுத்திட்ட முதலமைச்சரின் அமைச்சறிக்கை**

01

மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நடைபெற்ற போரினால் கடுமையாக பாதிக்கப்பட்ட வடமாகாணமாகிய எமது பிரதேசம் அடிப்படை வசதிகள், கட்டுமானங்கள் என்பன பாதிக்கப்பட்டு காணப்படுகின்றன. அவற்றினையும் மக்களின் மனதில் ஏற்பட்டுள்ள வடுக்களினையும் சீர்செய்வதற்கு காலம் தேவைப்படும். இருப்பினும் வடமாகாணத்திற்குரிய தலா வருமானத்தினை அதிகரிக்கவும் மக்கள் தங்களது வாழ்வாதாரங்களை செப்பனிட்டு அடிப்படைத் தேவைகளைப் பெற்றிடவும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டியுள்ளது.

2015ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதிக்குப் பின்னரான இந் நாட்டு மக்களின் எதிர்பார்ப்பானது ஜனநாயகத்தை நிலைநாட்டுதல், மக்களின் சுபீட்சத்தை உறுதிப்படுத்தல், கல்வி, சுகாதார, சமூக, கலாசார, பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளில் அபிவிருத்தியை மேற்கொள்ளல், மக்களுக்கான வாழ்வாதார அபிவிருத்தியை ஏற்படுத்தல், உயர்ந்த பொருளாதாரமொன்றினை உருவாக்கல், மனித வளங்களை சிறப்புற பயன்படுத்தல், நீண்டகால நிலைபேறான அபிவிருத்தியை நிறைவேற்றல் ஆகியவற்றை உள்ளடக்கியது என்று அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

தேசிய பொருளாதாரக் கொள்கை வழிகாட்டுதலுக்கமைய எமது மாகாண முன்னுரிமை தேவைப்பாடுகளும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வகையில் வளர்ச்சிக்கான புதிய அணுகுமுறையில் வளர்ந்து வரும் தொழிற்றுறையாக சுற்றுலா மற்றும் தொழிற்சந்தை, பௌதீக உட்கட்டுமானங்கள், சமூகப்பாதுகாப்பு, விவசாயமும் நிலைபேண் அபிவிருத்தியும், பிராந்திய பொருளாதார அபிவிருத்தி, சுற்றாடலும் அனர்த்த முகாமைத்துவமும், நல்லாட்சியும், பொறுப்புக்கூறலும் 2025ஆம் ஆண்டின் தொலைநோக்கங்களாக அமைந்துள்ளன.

அந்நோக்கங்களுக்கு அமையவே நிதியும் திட்டமிடலும் மற்றும் மாகாண நிர்வாகம் ஆகிய துறைகளைத் தவிர ஏனைய சகல திணைக்களங்களையும் உள்ளடக்கிய எமது அமைச்சிற்கு 2018 ஆம் ஆண்டிற்காக ரூபா 3,572 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதில் 2,639 மில்லியன் ரூபா மீண்டுவரும் செலவினத்திற்கும் 933 மில்லியன் ரூபா மூலதனச் செலவினத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ளன.

**இதில் முதலமைச்சரின் அமைச்சிற்கு மட்டும் 2018 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு.**

| விடயம் | ஒதுக்கீடு (மில்லியனில்) |
|---|---|
| மீண்டெழும் செலவினம் | 68.878 |
| பிரமாண அடிப்படையிலான கொடை(CBG) | 2.200 |
| மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி கொடை(PSDG) | 130.000 |
| மொத்தம் | 201.078 |

1. சுற்றுலாத்துறை

பாரியளவில் வளர்ந்து வருகின்ற சேவைத்துறையான சுற்றுலாத்துறை பலவழிகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது என்பதனை யாவரும் அறிவர். அந்தவகையில் வடமாகாணத்திலும் சுற்றுலாத்துறையினை வளர்த்தெடுப்பதன் மூலம் எமது மக்களும் அதன் பொருளாதார ரீதியான பலாபலன்களைப் பெற்றுக் கொள்ள எம்மால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன. எமது மக்களின் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களுக்கு பாதிப்பு ஏற்படாதவகையிலும் சமூகத்தில் பிறழ்வுகள் ஏற்படாமல் இருக்கவும் எம்மால் தயாரிக்கப்பட்ட சுற்றுலா தந்திரோபாயத் திட்டத்தின் அடிப்படையில் ஒரு ஒழுங்கான திட்டமிடல் செயற்பாட்டின் மூலம் சுற்றுலாத்துறையை மேம்படுத்த நடவடிக்கைகள் எடுத்துள்ளோம். அந்தவகையில், வேலைவாய்ப்பினை எதிர்பார்த்திருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு விருந்தோம்பல் துறையில் உரிய தொழில் தகைமையுள்ள பயிற்சிகளை வழங்குவதற்கு எதிர்வரும் ஆண்டிலும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். மேலும், ஏலவே இத்துறையில் சேவை வழங்குநர்களாக இணைந்திருப்பவர்களுக்கு திறன்விருத்தி பயிற்சிகளை வழங்குவதன் மூலம் அவர்களிடமிருந்து தரமான சேவைகளை சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்க முடியும் என எண்ணுகின்றோம்.

வடமாகாண சுற்றுலாத்துறையில் இனங்காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக பின்வரும் நடவடிக்கைகள் எம்மால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

➢ 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் சுற்றுலாத்துறை தொடர்பில் பல அபிவிருத்தித் திட்டங்கள் எமது வடமாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றின் மீதான முதலீடுகள் பயனுறுதி தன்மைவாய்ந்த வகையில் எதிர்காலத்தில் தொடர்ந்தும் மேற்கொள்வதற்கு ஏதுவாக சுற்றுலாத்துறை சார்ந்த தந்திரோபாயத் திட்டம் துறைசார் வல்லுநர்களின் ஆலோசனை பெற்று உருவாக்கப்பட்டுள்ளது.

➢ கட்டடக்கலை வடிவமைப்பாளர் ஒருவரின் உதவியுடன் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக அடையாளம் காணப்பட்ட இடங்களின் பௌதீக தரைத் தோற்றத்திற்கேற்ப கட்டடங்கள் மற்றும் திட்டவடிவமைப்பு உருவாக்கம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

➢ சுற்றுலாத்துறை தொடர்பான நியதிச்சட்டம் உருவாக்கப்பட்டு ஆளுநரின் அனுமதிக்காக 2017 ஆம் ஆண்டு நவம்பர் 10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

➢ சுற்றுலா தொடர்பான வழிகாட்டல் நூல்கள் மற்றும் கலாசார விழுமியங்களை விபரிக்கும் நூல்கள் மும்மொழியிலும் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

➢ சுற்றுலாத்துறை தொடர்பான இணையத்தளமொன்று இவ்வருடம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

➢ சுற்றுலாத் துறையினை மேம்படுத்துவதற்கான துண்டுப் பிரசுரங்களும் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளன.

➢ எமது அமைச்சினால் சுற்றுலாத்தினமானது செப்டெம்பர் மாதம் 25 ஆம் திகதி சிறப்பாக கொண்டாடப்பட்டது.

வடமாகாணத்தில் பல சுற்றுலாத்தலங்கள் காணப்பட்டாலும் அவற்றில் போதியளவு வசதிகள் காணப்படவில்லை என்ற குறையினை நீக்கும் முகமாக கடந்த ஆண்டுகளைப் போலவே இவ்வாண்டிலும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தும் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இருப்பினும், இச்செயற்பாடுகளை மேற்கொள்ளும்போது தொடர்புடைய திணைக்களங்கள் உள்ளடங்கலாக பல நிறுவனங்களின் அனுசரணையை பெறவேண்டியிருப்பது காலதாமதத்தை ஏற்படுத்துகின்றது எனச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். திணைக்களங்களும் மற்றும் நிறுவனங்களும் காலதாமதமின்றி தமது கடமையைச் செய்ய முன்வந்தால் எமது மாகாண அபிவிருத்தியை நாம் விரைவாக நடைமுறைப்படுத்தலாம். எமது கோரிக்கைகள் பல நிறுவனங்களில் கவனிப்பார் அற்றுக் கிடந்து அடி மேல் அடி அடித்தே அம்மியை நகர்த்தி வருகின்றோம்.

இவ்வருடம் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி கொடையின் கீழ் ரூபா. 30.0 மில்லியன் ஒதுக்கீட்டில் 5 மாவட்டங்களிலும் 10 வேலைத்திட்டங்கள் சிறப்பான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவற்றிற்கு மேலதிகமாக மத்திய அரசாங்கத்தினாலும் எமது அமைச்சினூடாக சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா. 7.896 மில்லியன் பெறுமதியான 3 திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2018 ஆம் ஆண்டிற்கு ரூபா 60.00 மில்லியன் நிதியானது சுற்றுலாத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிதியினை அமைச்சின் ஆலோசனைக் குழுவினூடாக அடையாளம் காணப்பட்டு அனுமதிக்கப்பட்ட பின்வரும் திட்டங்கள் மீது மேற்கொள்ளவுள்ளோம்.

➢ சுற்றுலாப்பயணிகளை கவரக்கூடிய இடங்களை அழகுபடுத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல்.

➢ வரலாறு சார்ந்த சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்தல்.

➢ சமயம் சார்ந்த சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்தல்.

➢ மருத்துவம் சார்ந்த சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்தல்.

➢ சுற்றுலாத்துறைக்கான தகவல் வழங்கும் மையங்களை ஸ்தாபித்தல்.

➢ அடையாளங்காணப்பட்ட பூங்காக்களை அபிவிருத்தி செய்தல்.

➢ ஒருங்கிணைக்கப்பட்ட வசதிகள்/சௌகரியங்களை உள்ளடக்கிய மையங்களை தனியார் துறையின் பங்களிப்புடன் உருவாக்குதல். இதற்கு IFC என்ற சர்வதேச நிதிய கூட்டுத்தாபனம் என்ற நிறுவனம் எமக்கு உதவி செய்ய முன்வந்துள்ளது.

➢ சுற்றுலாத்துறைக்கான தகவல்களை வெளியிடுதல் மற்றும் அத்துறை சார்ந்த ஊழியர்களுக்கான இயலுமை விருத்தி பயிற்சிகளை வழங்கல்.

➢ சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கான ஒளிப்பதிவேற்றப்பட்ட காட்சிப்படுத்தல்களை மேற்கொள்ளல்.

➢ ஏனைய மாகாணங்களில் அபிவிருத்தி செய்யப்பட்ட சுற்றுலா மையங்களை எமது அலுவலர்கள் பார்வையிட வசதியளித்துக் கொடுத்தல்.

சுற்றுலாத்துறையில் காணப்படுகின்ற வாய்ப்புக்களை தக்கவகையில் பயன்படுத்துவதன் மூலம் எமது பிரதேசத்திற்குரிய வளங்களை முன்னிலைப்படுத்தி சமுதாய அடிப்படையிலான சுற்றுலாத் துறையினை வளர்த்தெடுப்பதன் மூலம் கிராமிய மக்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் தொழில் வாய்ப்பினை பெறுவதன் ஊடாக வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்திக் கொள்ளமுடியும். இவ்வகையில் நிலைபேறான கிராமிய பொருளாதார வளர்ச்சிக்கு சுற்றுலாத்துறையும் பங்களிப்பினை வழங்க முடியும் எனத்திடமாக நம்புகின்றோம்.

2. உள்ளூராட்சித் திணைக்களம்

எமது வடமாகாண உள்ளூராட்சித் திணைக்களமானது 01 மாநகர சபை, 05 நகரசபைகள் மற்றும் 28 பிரதேசசபைகள் உள்ளடங்கலாக 34 உள்ளூராட்சி அதிகாரசபைகளை உள்ளடக்கியுள்ளது. மேலும் உள்ளூராட்சித் திணைக்களத்தின் கீழுள்ள 05 பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்களூடாக உள்ளூராட்சி மன்றங்கள் கண்காணிக்கப்பட்டு மேற்பார்வை செய்யப்பட்டு வருகின்றன. அத்துடன் உள்ளூராட்சி மன்றங்களினால் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள், திண்மக்கழிவு முகாமைத்துவ செயற்பாடுகள், பொதுப்பயன்பாட்டு சேவைகள் மற்றும் மக்களோடு தொடர்புபட்ட அத்தியாவசிய சேவைகள் என்பனவும் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் சனசமூக நிலையங்களின் மூலம் மக்கள் பங்களிப்பு ஊடாக பலமான ஜனநாயக செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் உள்ளூராட்சி மன்றங்கள் பிரதேச ரீதியாக நூலக செயற்பாடுகளை நிறுவியும் ஊக்கப்படுத்தியும் சமூகத்தின் அறிவை மேம்படுத்துவதற்கும் வழிவகுத்து வருகின்றன.

(தொடரும்...)

## தீவிரவாத எண்ணங்கள் முற்றாக தோற்கடிக்கப்படவில்லை

# நல்லிணக்கம், சகவாழ்வை ஏற்படுத்த சர்வமதத் தலைவர்கள் முன்வரவேண்டும்

## ஜனாதிபதி மைத்திரி அழைப்பு




(கொழும்பு)

சகல சமய கோட்பாடுகளும் வழிகாட்டும் நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு பற்றிய செய்திகளை மக்களிடையே கொண்டுசேர்ப்பதற்கு தலைமை வகிக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சர்வமத தலைவர்களிடம் கோரிக்கை விடுத்தார்.

நேற்று முன்தினம் பிற்பகல் கொழும்பு, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற சர்வமத மாநாட்டில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

நாட்டைப் பிரிப்பதற்காக போராடிய தீவிரவாதிகள் யுத்தத்தின் மூலமாக தோற்கடிக்கப்பட்டுள்ள போதிலும் அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட எண்ணங்கள் முற்றாக தோற்கடிக்கப்படவில்லை என்றும் மாற்று எண்ணக்கருக்களினூடாகவே அவற்றை இல்லாது செய்யலாம் என்றும் ஜனாதிபதி இதன் போது தெரிவித்தார்.

இனங்களுக்கிடையே பல்வேறு பிரச்சினைகளும் நெருக்கடிகளும் கடந்த சில தசாப்தங்களாக எமது நாட்டில் காணப்பட்டபோதிலும் விகாரை, பள்ளிவாசல் மற்றும் கோவில்களின் சமயத் தலைவர்களிடையே அத்தகைய பிரச்சினைகள் ஏற்படவில்லை என்பதை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, தவறான பாதையில் பயணிக்கும் சமூகத்தை நல்வழிப்படுத்துவதற்கு சமயப் போதனைகளும், கோட்பாடுகளுமே ஏதுவாக அமைகின்றன என்றும் தெரிவித்தார்.

நாட்டில் மீண்டும் யுத்தமொன்று ஏற்படாத வகையில் நாட்டில் நல்லிணக்கத்தையும் சகவாழ்வையும் கட்டியெழுப்புவதற்கு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் செயற்றிட்டங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கு ஒன்றிணைவது அனைவரினதும் பொறுப்பாகும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் இச்செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு சகலரும் ஒன்றிணைய வேண்டியதன் தேவை குறித்து வலியுறுத்திய ஜனாதிபதி, மாகாண மற்றும் பிரதேச மட்டத்தில் சமய சகவாழ்வு குழுக்களை நியமித்து சகல மக்களிடையேயும் நல்லிணக்கத்தையும் சகவாழ்வையும் ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் முக்கியத்துவத்தையும் இதன் போது சுட்டிக்காட்டினார்.

தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த மாநாட்டில் அமரபுர நிக்காயவின் மகாநாயக்க தேரர் வண. கொடுகொட தம்மாவாச நாயக்க தேரர், மல்வத்து பிரிவின் வண. பகமுனே சுமங்கல தேரர், அஸ்கிரிய பிரிவின் மெதகம தம்மானந்த தேரர், ராமக்ஞ நிக்காயவின் வண. அத்தன்கனே சாசனரத்தன தேரர் உள்ளிட்ட மகாசங்கத்தினரும் இந்து, இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவ மதத் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

அமைச்சர்களான மனோ கணேசன், சரத் பொன்சேகா, இராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகளும், அரச அதிகாரிகளும் இந்நிகழ்வில் பங்குபற்றினர். (இ-7)

# ஜனாதிபதி கருத்துத் தெரிவித்தும் பட்ஜெட்டில் மாற்றம் வரவில்லை

## மகிந்த ராஜபக்ஷ விசனம்




(கொழும்பு)

வரவு-செலவுத் திட்டத்தில் கூறப்பட்ட விடயங்களுக்கு எதிராக கருத்துத் தெரிவித்தவர்களில் ஜனாதிபதியும் காணப்படுவதாகவும் இருப்பினும், எந்தவித மாற்றமும் இன்றி அது எதிராக கருத்துத் தெரிவித்தவர்களின் வாக்குகளினாலேயே நிறைவேற்றப்பட்டதாகவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விமர்சித்தார்.

பியர் விலை குறைப்பு உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களே அதிகளவில் எதிராகக் கருத்துத் தெரிவித்தனர். இருப்பினும் எந்தவொரு மாற்றமும் செய்யப்படவில்லை. கருத்துத் தெரிவித்தவர்களும் ஆதரவாகவே வாக்களித்தனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் தலதா மாளிகைக்குச் சென்று வழிபாட்டில் ஈடுபட்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

# ட்ரம்பின் ஜெருசலேம் முடிவை கண்டிக்கிறது முஸ்லிம் காங்கிரஸ்



(கொழும்பு)

இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேத்தை அங்கீகரிப்பதற்கு, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எடுத்துள்ள முடிவை, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கண்டித்துள்ளது.

இது தொடர்பாக, கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம், நேற்று முன்தினம் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில், இஸ்ரேல், பாலஸ்தீனம் ஆகிய இரண்டு நாடுகளுக்கான இணைந்த தலைநகராக ஜெருசலேம் காணப்படுகிறது என்ற சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தையே தாம் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமாதானத்தைக் காண்பதற்கு விரும்பும் சர்வதேச சமூகத்தின் கோரிக்கையாக இதுவே இருந்தது. இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடாகவும் இதுவே இருந்தது.

அமெரிக்க ஜனாதிபதியால் எடுக்கப்பட்ட முடிவுக்கு மாற்றாக, இலங்கையின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் திலக்மாரப்பன வெளியிட்ட அறிக்கையை நாம் வரவேற்கிறோம். இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேத்தை அங்கீகரித்து, தற்போது காணப்படும் நிலைமையை ஜனாதிபதி ட்ரம்ப் மாற்றியுள்ளதோடு, பாலஸ்தீனர்களின், பாலஸ்தீன தேசம் என்ற வாய்ப்பு மீண்டும் மறுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

ஜெருசலேம் என்பது ஒரு கடவுளின், இரண்டு மக்கள் தொகுதியின், மூன்று வெவ்வேறான நம்பிக்கைகளின் இடம் என அமைச்சரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியின் அறிவிப்பு, இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்துக்கும் இடையில் காணப்படும் வித்தியாசத்தை, மேலும் அதிகரிக்கிறது எனக் குறிப்பிட்ட அமைச்சர், விட்டுக்கொடுப்பு உணர்வுகளின் அடிப்படையில், பாலஸ்தீன மக்களுடன் பேரம்பேசல்களுடன் ஈடுபடுவதற்கு, இஸ்ரேலை அது ஊக்குவிக்காது என்றும் தெரிவித்தார்.

இந்த அறிவிப்பென்பது, ஐக்கிய நாடுகளின் தீர்மானங்களுக்கு முரணானது என்பதோடு மாத்திரமல்லாது, ஜெருசலேத்தின் நிலையையும் பண்பையும் மாற்றுவதற்கான ஒன்றாக அமையும் என்பதோடு, பிராந்தியத்தில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளையும் பாதிக்குமெனவும் தெரிவித்தார். (இ)

# மாணவியின் திறமையை பாராட்டி ஜனாதிபதி பரிசு

(கொழும்பு)

கெக்கிராவை திப்பட்டுவெவ பிரதேசத்தில் கடந்த ஒக்டோபர் மாதம் நடைபெற்ற தேசிய ஏர் பூட்டு விழாவில் கெக்கிராவை மத்திய மகா வித்தியாலயத்தில் தரம் 9 இல் கல்வி கற்கும் ஆர்.எம். தெவ்மினி இந்ரநாத மாணவியினால் ஆக்கப்பட்ட கவிதை நூல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்பட்டது.



குறித்த மாணவியை நேற்று முன்தினம் முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்திற்கு அழைத்த ஜனாதிபதி அம்மாணவியின் எதிர்கால கல்வி நடவடிக்கைகளுக்காக பணப்பரிசிலை வழங்கினார். (இ-7)

# காணாமல் போனோர் தொடர்பில் பதிவுகளை மேற்கொள்வது காலம் கடத்தும் செயற்பாடு

## வவுனியா அரச அதிபருக்கு உறவினர்கள் மகஜர் கையளிப்பு





(குருமன்காடு)

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் மீண்டும் மீண்டும் பதிவுகளை மேற்கொள்வது காலம் கடத்தும் செயற்பர்டு எனத் தெரிவித்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் வவுனியா அரச அதிபரிடம் மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் வவுனியா மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் சோமரத்தின விதான பத்திரன மற்றும் பிரதேச செயலகத்தில் வவுனியா பிரதேச செயலாளர் ஆகியோரை நேற்று சந்தித்து உரையாடிய பின் மகஜர் ஒன்றினை கையளித்தனர்.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விற்கும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களுக்கும் இடையில் கடந்த 16 ஆம் திகதி சந்திப்பு ஒன்று இடம்பெற்றிருந்தது. அதன் பின்னர் மீள் குடியேற்ற, புனர்வாழ்வு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் ஊடாக பிரதேச செயலகம் மூலம் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் புதிதாக பதிவுகளை மேற்கொள்ளுமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகள் தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழு உள்ளிட்ட பல்வேறு பதிவுகள் இடம்பெற்றிருந்தன. முன்னாள் ஜனாதிபதியும், இந்நாள் ஜனாதிபதியும் தொடர்ந்து பதிவுகளை மேற்கொண்டு காலத்தை இழுத்தடிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் தற்போது கோரப்பட்டுள்ள பதிவுகளை நாம் நிராகரித்து புறக்கணிக்கின்றோம் என காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் இதன்போது தெரிவித்ததுடன் மகஜர் ஒன்றினையும் கையளித்தனர். (2-250-281)





பூநகரி கலாசாரப் பேரவையின் ஏற்பாட்டில் நடைபெற்ற பண்பாட்டுப் பெருவிழா பூநகரி பிரதேச செயலரும் கலாசாரப் பேரவையின் தலைவருமான சி.ச.கிருஸ்னேந்திரன் தலைமையில் அண்மையில் பூநகரியில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கலந்து கொண்டிருந்தார். (படங்கள்: பூநகரி செய்தியாளர்)

# இரு வேறு சம்பவங்களில் ஐந்து பேர் கைதாகினர்

(மல்லாவி)

தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் இரு வெவ்வேறு சம்பவங்களின் போது 200 லீற்றர் கசிப்புக் கோடாவையும் 100 லீற்றர் கசிப்பையும் கைப்பற்றியுள்ளதுடன், சந்தேகத்தின் பேரில் 5 பேரைக் கைது செய்துள்ளதாக கிளிநொச்சி/ முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5.30 மணி தொடக்கம் பிற்பகல் 7.30 மணி வரையான காலப்பகுதியில் நடைபெற்றுள்ளது.

கிளிநொச்சி/ முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான போதைப்பொருள் தடுப்பு மற்றும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் படைப்பிரிவின் பொலிஸ் அணியினர் தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள கட்டைக்காடு இரட்டை பனைக் குளம் காட்டுப் பகுதியில் சட்ட விரோதமான முறையில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்றை சுற்றி வளைத்து சந்தேக நபர் ஒருவரைக் கைது செய்துள்ளதுடன், 200, லீற்றர் கசிப்புக் கோடாவுடன், 20, லீற்றர் கசிப்பையும், கசிப்புக் காய்ச்சுவதற்குப் பயன்படுத்திய உபகரணங்களையும் கைப்பற்றிய பின்னர் கசிப்பு உற்பத்தி நிலையத்தை நிர்மூலமாக்கியுள்ளனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்களுடன் கைதான சந்தேக நபருடன் தருமபுரம் பொலிஸ் நிலையம் நோக்கி பயணித்த போது கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து, கட்டைக்காட்டு குடியிருப்பு பகுதியில் உள்ள 3 வீடுகளை திடீரென சோதனையிட்ட போது விற்பனை செய்யும் நோக்கோடு மறைத்து வைக்கப்பட்டிருந்த 80, லீற்றர் கசிப்பை மீட்டுள்ளதுடன் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற ரீதியில் 4.பேரையும் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்களையும் கைதான சந்தேக நபர்களையும் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் மேலதிக விசாரணைகளுக்காகவும், அதன் பின்னரான நீதிமன்ற நடவடிக்கைகளுக்குமாக ஒப்படைத்துள்ளதாக அத்தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# சுனாமி விழிப்புணர்வு செயலமர்வு முல்லை.மாவட்ட செயலகத்தில்





(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் ஏற்பாட்டில் சுனாமி தொடர்பிலான கருத்தரங்கு மாவட்ட செயலகத்தில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப்பணிப்பாளர் காமினி பிரியந்த தலைமையில் நேற்று முற்பகல் 10 மணியளவில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சுனாமி தொடர்பாகவும் அதனை மக்களுக்கு எடுத்துரைக்கும் வழிமுறைகள் தொடர்பிலும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் அனர்த்த முகாமைத்துவ பிரிவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த கருத்தரங்கில் திருகோணமலை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப்பணிப்பாளர் கு. சுகுணதாஸ் கலந்துகொண்டு கருத்துக்களை தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரையோரபகுதி மக்கள் சுனாமி தொடர்பான வதந்திகளால் அண்மைக்காலங்களில் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

வடக்கினை பொறுத்தமட்டில் முல்லைத்தீவு மாவட்டத்திலே அதிகளவில் சுனாமி வதந்திகள் பதிவாகி அது தொடர்பிலான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக அவர் தெரிவித்தார்.

குறிப்பாக தற்போது ஏற்படுத்தப்படும் பதிவுகள் மற்றும் பல்வேறு தகவல்களை மக்கள் நம்பி ஏமாறுகின்றார்கள். இதில் இருந்து மாற்றத்தை கொண்டு வர வேண்டும்.

மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும். இதற்காக அனர்த்த முகாமைத்துவத்தின் தகவல்களை உள்வாங்கி அதற்கேற்ற வகையில் செயற்படுத்த வேண்டும் என்றும் திருகோணமலை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

மாவட்ட செயலக மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டத்தினை சேர்ந்த மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் ஊடகவியலாளர்கள், அரச செயலக உத்தியோகத்தர்கள் என பலர் கலந்துகொண்டு பயனடைந்துள்ளார்கள்.

இதேவேளை தற்போது இலங்கை அரசின் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தொலைபேசி ஊடான குறுந்தகவலை அனுப்பி வெற்றி கண்டுள்ளது.

முன்னர் குறித்த ஒருசில அரச திணைக்கள அதிகாரிகளுக்கு மாத்திரம் குறுந்தகவல் அனுப்ப கூடியவாறு அமைந்துள்ளது. அண்மையில் ஏற்பட்ட புயல் நிலையினை நாட்டில் பல ஆயிரக்கணக்கான மக்களுக்கு குறுந்தகவல் மூலம் முன் கூட்டியே அறிவிக்கக்கூடிய தொழில்நுட்ப அபிவிருத்தியினை மேற்கொண்டு வந்துள்ளது. இது மக்களுக்கான பாதுகாப்பின் அடுத்த கட்ட செயற்பாடாக அமைந்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார் இதனைவிட இவ்வாறான வதந்திகளை கேள்வியுற்றால் உடனடியாக அனர்த்த முகாமைத்துவ பிரிவோடு தொடர்புகொண்டு உறுதிப்படுத்துங்கள். எனவே வதந்திகளை நம்பவேண்டாம் எனவும் கேட்டுக் கொண்டார். (2-281)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 100 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 50 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 450 | 300 | 250 | 300 | 400 |
| தக்காளி | 100 | 100 | 90 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 30 | 30 | 60 | 40 |
| கோவா | 140 | 160 | 80 | 140 | 160 |
| கரட் | 150 | 250 | 150 | 200 | 200 |
| பூசணி | 60 | 50 | 50 | 60 | 60 |
| புடோல் | 120 | 120 | 80 | 100 | 120 |
| வாழைக்காய் | 70 | 80 | 70 | 70 | 120 |
| சின்ன வெங்காயம் | 350 | 400 | 350 | 400 | 400 |
| பெரிய வெங்காயம் | 160 | 200 | 130 | 160 | 160 |
| பாகற்காய் | 300 | 400 | 240 | 240 | 300 |
| வெண்டிக்காய் | 100 | 140 | 80 | 100 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 50 | 60 | 80 |
| பயற்றங்காய் | 250 | 200 | 140 | 160 | 200 |
| லீக்ஸ் | 250 | 300 | 220 | 280 | 300 |
| பீற்றூட் | 180 | 200 | 140 | — | 200 |
| கரிமிளகாய் | 400 | 300 | 250 | 320 | 400 |
| முருங்கைக்காய் | 400 | — | 300 | 400 | 400 |
| போஞ்சி | 200 | 250 | 220 | 260 | 240 |
| கத்தரி தம்புள்ள | 60 | 60 | 80 | 100 | 100 |
| கீரை - பிடி | 60 | 50 | 50 | 100 | 50 |
| தேசிக்காய் | 80 | 40 | 40 | 60 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 70 | 90 | 75 |
| இராசவள்ளி | 350 | 400 | 300 | 400 | 300 |
| வெங்காயப்பூ | 300 | 300 | -- | — | -- |
| முள்ளங்கி | 100 | 100 | 70 | 100 | 120 |
| டொன்னாங்காணி | 50 | 40 | 40 | 50 | 40 |
| வல்லாரை | 30 | 20 | 10 | 20 | 20 |
| ஈரப்பலா | — | 60 | -- | 60 | 80 |

பிச்சை வேண்டாம் நாயைப் பிடி.
– தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வேட்பாளர் உண்டோ இங்கு வேட்பாளர் உண்டோ...

அரசியல் என்றாலே தமிழ் மக்களுக்கு வெறுப்பு வந்துவிட்டது. அந்தளவுக்கு நம் அரசியல்வாதிகள் மக்களை நம்பவைத்து ஏமாற்றிவிட்டனர்.

ஒரு காலத்தில் அரசியல் கட்சிகளில், அரசியலில் ஈடுபடுபவர்களைப் பார்த்து பெருமிதம் கொள்ளும் நிலைமை இருந்தது.

அந்தளவுக்கு அவர்கள் மக்கள் பணியிலும் சமூகப் பணியிலும் ஈடுபட்டனர். அதனால் அவர்களுக்கு மிகுந்த மரியாதை இருந்தது.

அன்றைய காலத்தில் தேர்தலில் போட்டியிடுவதற்குக் கடும் போட்டி நிலவியது. கிராம சபை முதல் பாராளுமன்றம் வரை நடைபெறும் தேர்தல்களில் போட்டியிடுவதற்காக கட்சிகளை நாடுவதும் கட்சிக்காக கடுமையாக உழைப்பதும் கட்சித் தலைவர்களிடம் சென்று தேர்தலில் போட்டியிட ஒரு சந்தர்ப்பம் தாருங்கள் என்று கேட்பதுமே அன்றைய வழமை இருந்தது.

அன்று ஒருவர் தேர்தலில் போட்டியிட்டார் என்றால், வெற்றி தோல்விகளுக்கு அப்பால் அவர் மீது மிகுந்த மதிப்பும் மரியாதையும் இருந்தது.

அந்தளவுக்கு அவர் சமூகத்தில் மதிக்கப்பட்டார். நல்ல மனிதர் எவருக்கும் உதவக் கூடியவர் பதவிக்கு வந்தாலும் யாரும் அணுகக் கூடியவர் என்ற நன்மதிப்பை அவர் வெற்றிருந்தார். ஆனால் இன்று அந்த நிலைமை மலையேறிவிட்டது.

இன்று அரசியலில் இருக்கக்கூடிய பலரின் நேர்மைத் தன்மை பற்றியும் இனப் பற்றுதல் குறித்தும் பல்வேறு வினாக்கள் எழுகின்றன.

இதன் காரணமாக அரசியலில் ஈடுபடுவது தம் பெயருக்குக் களங்கத்தை ஏற்படுத்தி விடுமோ என்ற பயம் கொள்ளும் அளவில் நிலைமை வந்துவிட்டது.

மக்கள் சமூகத்தில் மதிக்கப்படுபவரை ஐயா தேர்தலில் போட்டியிடுகிறீர்களா? என்று கேட்டால், ஏன் நாம் நிம்மதியாக இருப்பது உங்களுக்குப் பிடிக்கவில்லையா? என்று கேட்குமளவிலேயே இன்றைய சூழ்நிலை அமைந்துள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் களமிறங்கவுள்ள அரசியல் கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் வேட்பாளர்களைத் தேடி அலைகின்றனர்.

சமூகத்தில் மதிக்கப்படுவோரின் வீடுகளுக்குச் சென்று வேட்பாளர்களாக நில்லுங்கள் என்று கேட்டதுதான் தாமதம்; அரசியல் வேண்டாம் நம் குடும்பத்தில் அதனை விரும்பமாட்டார்கள் என்பதே பதிலாக இருக்கிறது.

ஆக, இன்றைய சூழ்நிலையில் தமிழ் மக்கள் அரசியலை வெறுக்கின்றனர். தேர்தலில் போட்டிடுவதற்கு பலர் பின்னடிக்கின்றனர்.

நடப்பதெல்லாம் எங்களுக்குத் தெரிகிறது. தமிழினத்தின் எதிர்காலம் மிகவும் ஆபத்தாகவுள்ளது என்பதும் புரிகிறது.

ஆனாலும் எங்கள் அறிவு சொல்கிறது வேட்பாளராக நின்றுவிடாதே என்று.

இதனை வடிவேலுவின் நகைச்சுவைப் பாணியில் கூறினால், கேட்பார்கள் ஆசை வார்த்தை காட்டியும் கேட்பார்கள் ஏன் கெஞ்சியும் கேட்பார்கள் மாட்டேன் என்று சொல்லிவிடு என்பதாக நம் புத்தி அறிவுரைக்கிறது என்று கூறுமளவில் நம் தமிழினத்தின் நிலைமை உள்ளது.

ஆக, இதிலிருந்து தேர்தல் வெற்றி என்பது கூட, வெற்றி என்று உரிமை கோர முடியாதது என்பதே உண்மையாகும்.

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

# சாவகச்சேரி நகர சபை தேர்தலுக்கு நேற்றைய தினம் வேட்புமனு தாக்கல்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் ஒற்றை யாட்சியை நிராகரித்து மாற்றத்தை ஏற்படுத்த நினைப்பவர்களாக இருந்தால் இம்முறை உள்ளூராட்சி தேர்தலில் தமக்கு வாக்களிக்க வேணடும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியானது கேட்டுக்கொண்டுள்ளது.

சாவகச்சேரி நகர சபை தேர்தலுக்கான வேட்பு மனுக்களை நேற்றைய தினம் யாழ்.மாவட்ட செயலக தெரிவத்தாட்சி அலுவலரிடம் தாக்கல் செய்த பின்னர் அக் கட்சியின் தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி மணிவண்ணன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இதனை தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

சாவகச்சேரி நகர சபைத் தேர்தலில் நாம் மிக கடுமையான போட்டியினை கொடுப்போம். இத் தேர்தலில் நாம் மாற்றத்தை எதிர்பார்க்கின்றோம்.

அதற்கேற்ற வகையிலேயே எமது வேட்பாளரை தயாரித்துள்ளோம்.

இத் தேர்தலில் நாம் வெற்றி பெறுவதனூடாக சாவகச்சேரி நகர சபையில் ஊழல் அற்ற நிர்வாகத்தை நடத்த தீர்மானித்துள்ளோம். ஆனால் நாம் இத் தேர்தலில் மிகப்பெரிய வெற்றியை எதிர்பார்க்கவில்லை.

இருந்தபோதிலும் நாம் மாற்றத்திற்காக கடுமையான போட்டியை கொடுப்போம். ஏனெனில் இத் தேர்தலை பிரதேச சபைக்கான தேர்தலாக கருதவில்லை. இத் தேர்தலானது ஏற்கெனவே வெளியிடப்பட்ட இடைக்கால அறிக்கை மீதான சர்வஜன வாக்கெடுப்பை நாடி பிடித்து பார்க்கின்ற முதல் கணிப்பாக பார்க்கின்றோம்.

தமிழ் மக்கள் ஒற்றை யாட்சியை நிராகரிப்பதை இதனூடாக வெளிப்படுத்த வேண்டும்.

அந்தவகையில் இத் தேர்தலில் எமது மிகப்பெரிய கோஷம் ஒற்றையாட்சியை நிராகரிப்பதற்காக மக்கள் எமக்கு வாக்களிக்க வேண்டும என்பதுவாகும் என்றார். (ம-4)

## வவுனியாவில் இரு சபைகளுக்கு கட்டுப்பணம் செலுத்தியது ஈபிடிபி

(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தின் ஐந்து சபைகளில் வவுனியா நகரசபை மற்றும் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை ஆகிய இரு சபைகளில் போட்டியிடுவதற்கான கட்டுப் பணத்தை ஈழமக்கள் ஜன நாயகக் கட்சி (ஈபிடிபி) நேற்று வவுனியா மாவட்ட உதவித் தேரதல் ஆணையாளர் அலுவலகத்தில் செலுத்தியது.

இதன்பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ஈபிடிபி கட்சியின் மாவட்ட அமைப்பாளர் கு.திலீபன்,

ஈழமக்கள் ஜனநாயக கட்சி சார்பாக வவுனியா நகர சபை மற்றும் வவுனியா தெற்கு பிரதேச சபை என்பவற்றுக் கான கட்டுப்பணம் நேற்று பிற்பகல் 4 மணியளவில் கட்டப்பட்டுள்ளது.

மக்கள் போலித் தேசியம் பேசுபவர்களையும் போலி வாக்குறுதிகளை கொடுப்பவர்களையும் இனங்காணத தொடங்கியுள்ளனர். இம்முறை நடைபெறப் போகின்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஈழமக்கள் ஜன நாயகக் கட்சி வவுனியாவில் ஆழமான கால்பதிக்கும். இளைஞர்களின் வரவேற்பு அதிகரித்துள்ளது.

கிராமங்கள், நகரங்கள் என செல்லும் இடமெல்லாம் எமது கட்சியையும், அதன் செயலாளர் நாயகத்தின் அபிவிருத்தியையும் மக்கள் அங்கீகரிக்கத் தொடங்கியுள்ளனர். இம்முறை புதிய மாற்றத்துடன் அபிவிருத்தி நோக்கி எமது கட்சி பயணிக்கும் எனத் தெரிவித்தார்.

இதில் கட்சி வேட்பாளர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ம-250)

## யாழில் வழிபறி

யாழ்.சுன்னாகம் மற்றும் மானப்பாய் பகுதிகளில் வழிபறி கொள்ளைகளில் ஈடுபட்டு வந்தவர்கள் எனும் சந்தேகத்தில் மானிப்பாய் பொலிஸாரால் இருவர் கைது செய்யப்பட்டு உள்ளனர். சங்கானை பகுதியில் வீதியில் நடந்து சென்ற பெண்ணின் கழுத்தில் இருந்த ஒன்றரை பவுண் தங்க சங்கிலியை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அறுத்து கொண்டு தப்பி சென்றனர். அவ்வேளை குறித்த பகுதியில் சிவில் உடையில் நின்றிருந்த இரு பொலிஸார் அவர்களை துரத்தி சென்று மடக்கிப் பிடித்தனர். (ம)

### தபால்மூல வாக்காளர்களே!

## தேர்தல் சுற்றுநிருபங்களில் கோரப்பட்டுள்ள தகவல்களுக்கு அமைய விண்ணப்பியுங்கள்

தபால் மூல வாக்குகளுக்காக விண்ணப்பிப்பவர்கள் 2017ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களின் தேர்தல் சுற்றுநிருபங்களில் கோரப்பட்டுள்ள தகவல்களுக்கு அமைய விண்ணப்பிக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

குறித்த சுற்றுநிருபங்கள் மாவட்டம், பிரதேச செயலக அலுவலகம், கிராம அலுவலர்கள் அலுவலகம் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

மேலும் 2017ஆம் ஆண்டிற்குரிய சுற்றுநிருபங்களில் உள்ள தகவல்களைத் தவிர வேறு தகவல்கள் காணப்படுமாயின் அந்த விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் எனவும் மகிந்த தேசப்பிரிய சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

## அரச நிகழ்வுகளில் அரசியல்வாதிகளுக்கு கட்டுப்பாடு விதிப்பு


(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் அறிவிக்கப்பட்ட பின்னர் இடம்பெறும் அரச நிகழ்வுகள் தொடர்பான முறைப்பாடுகள் அதிகரித்துள்ளமைக்கு மத்தியில், அவ்வாறான நிகழ்வுகளில் அரசியல்வாதிகளின் பங்குபற்றுகையை மட்டுப்படுத்தி, அரச அதிகாரிகளை அந் நிகழ்வுகளில் பங்குபற்ற வைப்பதற்கான அறிவித்தலொன்று, தேர்தல்கள் ஆணைக்குழுவால் விடுக்கப்படவுள்ளது.

அரசாங்கத் தரப்பு அரசியல்வாதிகள் பங்குகொள்ளும் இவ்வாறான நிகழ்வுகள் குறித்த பல முறைப்பாடுகள், தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குக் கிடைத்துள்ளதோடு, வீதி அபிவிருத்திக்கான பணம் ஒதுக்கீடு, ஓய்வு விடுதிகள் போன்ற அரச சொத்துக்களை பிரசாரத் தேவைகளுக்காகப் பயன்படுத்தி துஷ்பிரயோகம் செய்கின்றமை தொடர்பான முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன.

இவ்வாறான நடவடிக்கைகள், அரசாங்கத் தரப்பு அரசியல்வாதிகளுக்கு அனுகூலத்தை வழங்குவதால், தேர்தல் காலத்தில் இவற்றைச் செய்வதற்கு அனுமதி இல்லை என, தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பெப்ரவரியில் இடம் பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்கான வேட்புமனுக்களை ஏற்றுக் கொள்ளும் நடவடிக்கையில், தேர்தல்கள் ஆணைக்குழு ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)



## சத்திய தரிசனம்

### அறநூல்களைப் படியுங்கள்

❖ நற்பண்புகள் கொண்ட வாழ்க்கை மிகவும் முக்கியமானது. இறைப்பணியாக நமது வாழ்க்கையை மேற்கொண்டு தன்னம்பிக்கையுடன் செயற்பட வேண்டும்.

❖ பஞ்ச பூதங்களால் ஆன இயற்கை இறைவனின் சொரூபமாக விளங்குகிறது. அதன் தூய்மையைக் கெடுத்தால், நம்முடைய ஐம்புலன்களின் தூய்மை பாழடைவதுடன் மனமும் மாசடையும். இயற்கையைப் பாதுகாத்தால் இறைவனை வழிபட்டவர்களாவோம்.

❖ அறவழி நூல்களைப் படிப்பதும், அனுபவம் மிக்கவர்களுடன் பழகுவதும், ஆண்டவனிடத்தில் முழுநம்பிக்கை வைப்பதும், அவதார புருஷர்களின் உபதேசத்தைப் பின்பற்றுவதும், பக்தி மார்க்கத்தில் வெற்றி கிடைக்க உதவி செய்யும்.

❖ ஒரு தெய்வ உருவத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். பிறகு அதையே திரும்பத் திரும்ப எண்ணிப்பாருங்கள். உங்கள் நினைவிலும் வாக்கிலும் மீண்டும், மீண்டும் அந்தத் தெய்வ உருவமும், நாமமும் வரும். அதுவே மனதுக்கும், நாவிற்கும் இனிமை இருக்கும்.

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




### குழந்தைக்கு ப்ரஹ்மி கொடுப்பது எதற்காக?

ப்ரஹ்மி என்பது ஒரு மூலிகைச் செடியாகும். இந்த மருத்துவக் குணம் பழைய காலம் முதலே அங்கீகரிக்கப் பட்டதாகும். இதன் மருத்துவக் குணமானது மூளை நரம்புகளைத் தூண்டிவிட்டு செயற்படச் செய்யும் தன்மையுடையதாகும். குழந்தைகளுக்கு இதைக் கொடுப்பதால் மூளை வளர்ச்சி பெருகும். அறிவு வளர்ச்சியும் புத்துணர்வும் ஏற்படும். எனவே குழந்தைகளுக்கு ப்ரஹ்மி கொடுப்பதால் குழந்தைப் பருவம் முதலே அறிவு வளரத் தொடங்கி பெரியவனாக வளரும் போது புத்திமானாக வருவான். (தொடரும்)

# டெஸ்ட் அங்கீகாரம் பெற்றது ஆப்கானிஸ்தான் முதலாவது போட்டியில் இந்தியாவுடன் மோதல்



ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி அறிமுகமாகவுள்ள டெஸ்டில் இந்திய அணிக்கு எதிராக மோத உள்ளது.

சர்வதேச கிரிக்கெட் அமைப்பு, கடந்த ஜூன் மாதம் அயர்லாந்து மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு டெஸ்ட் அங்கீகாரம் வழங்கியது.

இதனைத் தொடர்ந்து, டெஸ்ட் போட்டிகளில் விளையாட இரு அணிகளும் தகுதி பெற்றன.

அயர்லாந்து அணி, 2018 ஆம் ஆண்டு மே மாதம் பாகிஸ்தானுக்கு எதிராக முதல் டெஸ்டில் விளையாட உள்ளது.

இந்நிலையில், இந்திய கிரிக்கெட் வாரியத்தின் சிறப்பு பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில், 2019-2023 ஆண்டுகளில் இந்திய அணி விளையாட உள்ள சுற்றுப் பயணம் வெளியிடப்பட்டது.

அதில், ஆப்கானிஸ்தான் அணி அறிமுகமாகும் முதல் டெஸ்ட் போட்டி, இந்திய மண்ணில் என்பது உறுதி செய்யப்பட்டது. இதற்கான அட்டவணை விரைவில் வெளிவர உள்ளது. (க)

# தென்னாபிரிக்காவை வேகத்தில் நிலைகுலையவைப்போம் இந்திய வேகப்பந்து வீச்சாளர் எச்சரிக்கை



இந்திய கிரிக்கெட் அணி தற்போது இலங்கை அணிக்கு எதிரான ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது. எதிர்வரும் 17ஆம் திகதியுடன் ஒருநாள் தொடர் முடிகிறது. அதை தொடர்ந்து இலங்கையுடன் மூன்று 20 ஓவர் போட்டிகளில் ஆடுகிறது. 24ஆம் திகதியுடன் இலங்கை தொடர் முடிகிறது.

அதன்பிறகு இந்திய அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் செய்து 3 டெஸ்ட், 6 ஒருநாள் போட்டி மற்றும் மூன்று 20 ஓவர் போட்டிகளில் விளையாட இருக்கின்றது

இந்தியா- தென்னாபிரிக்கா அணிகள் மோதும் முதல் டெஸ்ட் போட்டி எதிர்வரும் 5 ஆம் திகதி கேப்டவுனில் தொடங்குகிறது.

தென்னாபிரிக்கா டெஸ்ட் தொடர் குறித்து இந்திய அணியின் வேகப்பந்து வீரர் உமேஷ் யாதவ் கூறுகையில்,

தென்னாபிரிக்க ஆடுகளங்கள் வேகப்பந்து வீச்சுக்கு ஏற்ற வகையில் இருக்கும். இதனால் எங்கள் மீது அதிகமான எதிர்பார்ப்பு இருக்கும். இந்திய வேகப்பந்து வீச்சை பொறுத்தவரை தென்னாபிரிக்காவில் 20 விக்கெட்டுகளை கைப்பற்ற முடியும்.

அதற்கான திறமை எங்களிடம் இருக்கிறது. கடந்த 14 மாதங்களாக இந்திய அணி சொந்த மண்ணில் சிறப்பாக விளையாடி வெற்றிகளை பெற்று இருக்கிறது. தற்போது வெளிநாட்டில் வெற்றி பெற வேண்டிய நேரம் இதுவாகும்.

உடல் தகுதி, முறையான திட்டம் ஆகியவை எங்களது வெற்றிக்கு முக்கிய பங்கு வகித்தது.

இதே நிலையை தென்னாபிரிக்காவிலும் கடைப்பிடிப்போம். யாரும் எங்களை தடுத்து நிறுத்த முடியாது.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

உமேஷ் யாதவ் கடந்த 14 மாதங்களில் 17 டெஸ்டில் விளையாடி 40 விக்கெட் கைப்பற்றியுள்ளார். அவர் இந்திய அணியின் முன்னணி வேகப்பந்து வீரர்களில் ஒருவராக இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# கோலி- அனுஷ்கா திருமணம் மோதிரத்தின் விலை ஒருகோடி



இந்திய கிரிக்கெட் அணியின் தலைவரும் ஹிந்தி நடிகை அனுஷ்கா சர்மாவும் கடந்த 2013-ம் ஆண்டில் இருந்து காதலித்து வந்தனர். முதலில் மறைமுகமாக இருந்த இந்த காதல் பின்னர் வெளிப்படையாக இருந்தது.

4 ஆண்டுகளாக காதலித்து வந்த இருவரும் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்தனர்.

இதற்காக விராட் கோலி இலங்கைக்கு எதிரான ஒருநாள் தொடர் மற்றும் 20 ஓவர் போட்டியில் ஓய்வு கேட்டு இருந்தார்.

இவர்களது திருமணம் இத்தாலியில் உள்ள மிலன் நகர் அருகே டஸ்கேனியில் உள்ள சொகுசு விடுதியில் 11ஆம் திகதி நடந்தது.

இந்த திருமணத்தில் நெருங்கிய உறவினர்கள், நண்பர்கள் மட்டுமே பங்கேற்று மணமக்களை வாழ்த்தினார்கள்.

இந்த தகவலை விராட் கோலி மற்றும் அனுஷ்கா சர்மா ஆகியோர் டுவிட்டரில் தெரிவித்தனர்.

விராட் கோலி, ஒரு பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட வைர மோதிரத்தை அனுஷ்கா சர்மாவுக்கு திருமணப் பரிசாக அளித்தார். ஆஸ்திரியாவை சேர்ந்த பிரபல வைர நகை வடிவமைப்பாளர்களால் வடிவமைக்கப்பட்ட இந்த மோதிரத்தின் விலை சுமார் ஒரு கோடி ரூபாய் என திருமண ஜோடிக்கு நெருக்கமானவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது திருமணம் நடைபெற்ற சொகுசு விடுதிக்கு செலவிடப்பட்ட தொகையை விட அதிகமானதாகும்.

கோலி- அனுஷ்கா திருமண வரவேற்பு இரண்டு இடங்களில் நடக்கிறது. வருகிற 21 ஆம் திகதி டில்லியிலும், 26ஆம் திகதி மும்பையிலும் திருமண வரவேற்பு மற்றும் விருந்து நிகழ்ச்சிகள் நடக்கிறது.

டில்லியில் நடைபெறும் திருமண வரவேற்பில் குடும்ப உறவினர்கள் மட்டும் கலந்து கொள்வார்கள். மும்பையில் நடைபெறும் திருமண வரவேற்பில் கிரிக்கெட் வீரர்கள், பொலிவுட் நட்சத்திரங்கள், அரசியல் பிரமுகர்கள், தொழில் அதிபர்கள் பங்கேற்கிறார்கள். (க)

# மூன்றாவது ஆசஷ் டெஸ்ட் போட்டி பேர்த் மைதானத்தில் இன்று ஆரம்பம்



இங்கிலாந்து கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது.

இரு அணிகள் இடையேயான 5 டெஸ்ட் கொண்ட ஆசஷ் தொடரில் அவுஸ்திரேலியா 2-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

பிரிஸ்பேனில் நடந்த முதல் டெஸ்டில் 10 விக்கெட் வித்தியாசத்திலும், அடிலெய்டுவில் நடந்த 2ஆவது டெஸ்டில் 120 ஓட்டங்கள் வித்தியாசத்திலும் அந்த அணி வெற்றி பெற்று இருந்தது.

அவுஸ்திரேலியா- இங்கிலாந்து அணிகள் மோதும் 3ஆவது டெஸ்ட் போட்டி பேர்த் மைதானத்தில் இன்று தொடங்குகிறது.


முதல் 2 டெஸ்டில் தோற்ற இங்கிலாந்து அணி இன்றைய டெஸ்டிலாவது பதிலடி கொடுக்குமா? என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் தொடரை இழக்காமல் இருக்க அந்த அணி வெற்றி பெறுவது அவசியமாகிறது.

முன்னாள் தலைவர் குக்குக்கு இந்த போட்டி 150-வது டெஸ்ட் போட்டியாகும். இந்த மைல்கல்லை தொடும் முதல் இங்கிலாந்து வீரர் ஆவார். சர்வதேச அளவில் 8-வது வீரர் ஆவார்.

அவுஸ்திரேலிய அணி இந்த டெஸ்டில் வென்று ஹட்ரிக் சாதனையுடன் தொடரை கைப்பற்றும் ஆர்வத்துடன் உள்ளது.(க)

# லாலிகா உதைபந்தாட்ட தொடர் பார்சிலோனாவின் ஆதிக்கம் தொடர்கிறது



ஸ்பெயின் நாட்டின் கால்பந்து அணிகளுக்கு இடையில் "லா லிகா" கால்பந்து தொடர் நடைபெற்று வருகிறது.

நடைபெற்ற போட்டியில் முன்னணி அணிகளான பார்சிலோனா, வில்லாரியல் அணிகள் மோதின.

சொந்த மைதானத்தில் விளையாடிய வில்லாரியல் பார்சிலோனா அணிக்கு நெருக்கடி கொடுத்தாலும் இறுதியில் கடுமையான தாக்குதல் ஆட்டத்தை கைக்கொண்ட பார்சிலோனா 2-0 என வெற்றிபெற்றது.

இந்த வெற்றியின் மூலம் பார்சிலோனா தொடர்ந்து தொடரில் முன்னிலை பெற்று வருகிறது.

இதுவரை பார்சிலோனா 15 போட்டிகளில் 12 வெற்றியுடன் 39 புள்ளிகள் பெற்று முதலிடத்தில் உள்ளது.

இவர்களுக்கு கடுமையான போட்டியாக திகழும் ரொனால்டோவின் ரியல் மாட்ரிட் அணி 31 புள்ளிகளுடன் 4 ஆவது இடத்திற்கு பின்தள்ளப்பட்டுள்ளது. (க)

## முன்னாள் புலி உறுப்பினர்...

சரணாலயத்துக்குள் கிளைமோர் குண்டை வெடிக்கச் செய்து, மருத்துவர் உட்பட 7 பேரை கொலை செய்த குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை ஏற்றுக் கொள்வதாகக் கட்டளை வழங்கிய மேல் நீதிமன்றம் 7 பேருக்கும் இந்தத் தண்டனையை வழங்கியது.

மன்னார், சாவகச்சேரி, வவுனியா, புத்தளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 7 பேர் இந்த தண்டனையை பெற்றுள்ளனர்.

சிமியன் சந்திரயோகி, சிறில் இராசமணி, முத்து மரிக்கார் அப்துல் சலீம், சின்னப்பன் பாக்கியநாதன், சாந்தன் ஸ்ரேனிஸா ரமேஷ், இராகவன் சுரேஷ் மற்றும் ஒருவரே அவர்களில் அடங்குகின்றனர். அவர்கள் 7 பேரும் 2011ஆம் ஆண்டு முதல் சிறைகளில் 8 ஆண்டுகள் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர்.

சதித்திட்டம், பயங்கரவாதச் செயலில் ஈடுபட்டமை, 7 பேரின் உயிரிழப்புக்கு காரணமாகவிருந்தமை உள்ளிட்ட 8 குற்றச்சாட்டுக்களின் கீழ் சட்டமா அதிபரால் 7 பேர் மீதும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் குற்றப்பத்திரிகை அநுராதபுரம் சிறப்பு மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது.

சந்தேகநபர்களின் குற்ற ஒப்புதல் வாக்குமூலங்கள் நீதிமன்றால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதனடிப்படையிலேயே நேற்று அவர்களுக்கு தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

வில்பத்து தேசிய சரணாலயத்தில் கெப் வாகனமொன்றை இலக்கு வைத்து 2006 ஆம் ஆண்டு மே மாதம் 27ஆம் திகதி இந்த கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டது. (ம)

## தமிழரசுக் கட்சி...

உள்ளூராட்சி தேர்தல் தொடர்பாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் பங்காளி கட்சிக்கு இடையில் அண்மையில் இடம்பெற்ற முரண்பாடுகளை தீர்க்கும் வகையில் பங்காளி கட்சி தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் இணைந்து அண்மையில் கொழும்பில் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

கலந்துரையாடலின் இறுதியில், தமிழ்தேசிய கூட்டமைப்பின் பங்காளி கட்சிகள் தமக்குள் இருந்த பிரச்சினைகள் சுமுகமாக தீர்க்கப்பட்டுள்ளதாகவும் ஒன்றாக இணைந்து தேர்தலை எதிர்கொள்வதாகவும் அறிவித்திருந்தனர். அன்றைய கூட்டத்தில் ஆசனப்பங்கீடுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டிருந்தது.

குறிப்பாக அதில் வலி. மேற்கு பிரதேச சபை, முதல் இரண்டு வருடங்கள் புளொட்டுக்கும் இறுதி இரண்டு வருடங்கள் தமிழரசுக்கட்சிக்கும் என இணக்கம் காணப்பட்டதுடன், மானிப்பாய் பிரதேச சபை முதல் இரண்டு வருடம் தமிழரசுக்கட்சிக்கும் இறுதி இரண்டு வருடங்கள் புளொட்டுக்கும் என இணக்கம் காணப்பட்டு 3 கட்சி தலைவர்களும் கையெழுத்திட்டிருந்தனர்.

இந்த நிலையில் நேற்று இது குறித்து மீண்டும் பங்காளி கட்சிகளுடன் கலந்துரையாடுவதற்காக மாட்டீன் வீதியில் அமைந்துள்ள தமிழரசுக்கட்சி அலுவலகத்தில் கூட்டம் கூட்டப்பட்டது.

அதில் தமிழரசுக்கட்சி வலி. மேற்கு பிரதேச சபையை முழுமையாக தாம் எடுத்துக் கொள்ளவுள்ளதாக தெரிவித்துள்ளது.

இதனால் ஏமாற்றம் அடைந்த புளொட் அமைப்பு தாம் இதற்கு இணங்க முடியாது எனவும், தமிழரசுக்கட்சியின் அதிகாரத்தை வைத்தே இதை எடுத்துக்கொண்டுள்ளீர்கள் என தெரிவித்து கூட்டத்தில் இருந்து முறுகல்

இது குறித்து புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தனை தொடர்பு கொண்டு கேட்ட போது, எமக்கு சபைகள் பிரித்து கொடுப்பது தொடர்பில் முன்னர் கலந்துரையாடப்பட்ட போது இணக்கம் தெரிவித்திருந்தனர். பின்னர் தமது அதிகாரத்தை பயன்படுத்தி அதை மீண்டும் பறித்துக்கொண்டுள்ளனர். இதில் எமக்கு எந்த உடன்பாடும் இல்லை. உறுதி மொழி வழங்கி ஏமாற்றி விட்டனர் என மேலும் தெரிவித்தார். (ம-9)

## வித்தியா வழக்கு...

வாக தீர்ப்பாயத்தால் ரத்தப்பட்ட வழக்கேடுகள் நேற்று உயர் நீதிமன்றில் கையளிக்கப்பட்டன.

யாழ்.மேல் நீதிமன்ற பதிவாளர் திருமதி மீரா வடிவேற்கரசன் மற்றும் உத்தியோகத்தர்கள் நேரில் சென்று வழக்கு ஆவணங்களை உயர் நீதிமன்றப் பிரதிப் பதிவாளர் சட்டத்தரணி கிரிஷானி டி கோத்தகொடயிடம் கையளித்துள்ளனர்.

புங்குடுதீவு மாணவி வித்தியா 2015ஆம் ஆண்டு மே 13ஆம் திகதி கூட்டு வன்புணர்வின் பின் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்டார்.

இறுதியில் கடந்த செப்டம்பர் 28ஆம் திகதி 9 எதிரிகளில் 7 பேர் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டு அவர்களுக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டதுடன், 2 பேர் நிரபராதிகள் என விடுவிக்கப்பட்டனர்.

இந்த வழக்கில் 7 பேரை குற்றவாளிகளாக தீர்ப்பாயத்தின் 3 நீதிபதிகளுமே ஏகமனதாகத் தீர்மானத்திருந்தனர்.

இந்த நிலையில் 5க்கும் குறையாத நீதியரசர்கள் அடங்கிய அமர்வின் முன்னிலையிலேயே தீர்ப்பாயத்தின் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்ய முடியும் என்ற சட்ட ஏற்பாட்டுக்கு அமைவாக உயர் நீதிமன்றுக்கு மேன்முறையீட்டு மனு முன்வைக்கப்பட்டது.

சுவிஸ்குமார் என அழைக்கப்படும் மகாலிங்கம் சசிகுமார் மற்றும் அவரது சகோதரர் மகாலிங்கம் சசிந்தரன் ஆகியோர் சார்பில் சட்டத்தரணி ஆறுமுகம் ரகுபதியும் பூபாலசிங்கம் ஜெயக்குமார், பூபாலசிங்கம் தவக்குமார், தில்லைநாதன் சந்திரகாசன், சிவதேவன் துஷாந்த் மற்றும் ஜெயதரன் கோகிலன் ஆகியோர் சார்பில் சட்டத்தரணி மகிந்த ஜெயவர்த்தனவும் மேன்முறையீட்டு அறிவித்தலை ஒக்டோபர் நடுப்பகுதியில் முன்வைத்தனர்.

யாழ்.மேல் நீதிமன்ற தீர்ப்பாயத்தின் வழக்கேடானது 3,540 பக்கங்களைக் கொண்டது. அத்துடன், ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றின் வழக்கேடு 1,053 பக்கங்களைக் கொண்டது.

இரண்டு வழக்கு ஏடுகளையும் இணைத்து 4,540 பக்கங்களை உடைய 15 பிரதி வழக்கேடுகள் யாழ். மேல் நீதிமன்றால் தயாரிக்கப்பட்டன.

அவற்றில் 14 பிரதி வழக்கேடுகளும் மூல வழக்கேடுகளுமே நேற்று உயர் நீதிமன்றில் கையளிக்கப்பட்டன. மேலும் ஒரு பிரதி வழக்கேடு யாழ்.மேல் நீதிமன்றில் பேணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## தென்னிலங்கையில்...

கொண்டுள்ளனர்.

நேற்று புதன்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு சென்ற குறித்த உறுப்பினர்கள் சுதந்திர கட்சிக்கு தங்கள் ஆதரவைத் தெரிவித்து, மைத்திரியுடன் இணைந்து கொண்டுள்ளனர்.

மேலும், ஐக்கிய தேசிய கட்சியை சேர்ந்த தெஹியோவிட்ட பிரதேச சபையின் முன்னாள உறுப்பினர் தோமஸ் சமிந்த, தெரணியகலையைச் சேர்ந்த அதிகார சபைச் செயலர் விடபியரத்ன ஆகியோர்களும் சுதந்தரக் கட்சியில் இணைந்து கொண்டுள்ளனர்.

இதேவேளை, அண்மைக்காலமாக தென்னிலங்கையில் கட்சித்தாவல்கள் இடம்பெறும் என்று அடுத்தடுத்து செய்திகள் வெளிவரும் நிலையில் மேற்குறித்த மாற்றங்கள் அரசியல் வட்டாரத்தில் சலசலப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் அண்மித்துவரும் காலத்தில் இத்தகைய கட்சித்தாவல்கள் தேர்தல் முடிவுகளை தீர்மானிக்கக் கூடியவை என்பது சுட்டிக்காட்டப்படத்தக்கது.

கூட்டு எதிர்க்கட்சியின் முக்கியஸ்தர்கள் சுதந்திரக்கட்சியுடன் இணைய மாட்டோம் என்று கருத்துகளை முன்வைத்துவருகின்ற அதேசமயம், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளூராட்சி சபைத் தேர்தலின் பின்னர் மைத்திரியுடன் இணைந்து கொள்ளவுள்ளதாக செய்திகள் கசிந்தன.

இந்த நிலையில் தற்போது படிப்படியாக இடம்பெற்றுவரும் கட்சித்தாவல்கள் குறித்த இணைவுக்கான சாத்தியப்பாட்டினை வலுப்படுத்தி வருவதாக அரசியல் அவதானிகள் மத்தியில் விமர்சனங்கள் எழுந்துள்ளன. (ம)

## ஆளுங்கட்சிக்கு எதிராக...

ள்ளது.

குறிப்பாக தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் ஆளுங்கட்சியின் உறுப்பினர்கள் பலர் பொது நிகழ்வுகளில் கலந்துகொண்டதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், இது தொடர்பில் சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

அத்தோடு, அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி மற்றும் அரச சொத்துக்களை தேர்தல் செயற்பாடுகளுக்காக பயன்படுத்துகின்றமை தொடர்பிலும், பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் காலத்தில் இவ்வாறான செயற்பாடுகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக சட்டம் கடுமையான முறையில் நடைமுறைப்படுத்தப்படுமென ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. அரசியல் கட்சிகள் யாவும் சட்டத்தை மதித்து செயற்படுவது அவசியம் என்றும் குறிப்பிட்டுள்ளது. (ம)

## அரசியலிலிருந்து விலகி...

யாழ்ப்பாணத்தில் நேற்று வேட்புமனுக்களைத் தாக்கல் செய்த பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சுரேஸ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எவ் மற்றும் சிறு சிறு கட்சிகள் ஆனந்த சங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைந்து உதயசூரியன் சின்னத்தில் தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு என்ற பெயரில் உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## பிரித்தானிய பிரபு...

இறுதிப் போரில் ஐ.நா அறிக்கையில் கூறப்பட்டது போல 40 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்படவில்லை என்றும், இறுதிப் போரில் 7 ஆயிரம் தொடக்கம் 8 ஆயிரம் வரையானவர்களே கொல்லப்பட்டனர் என்றும், அவர்களில் கால்வாசிப் பேர் சாதாரண உடையில் இருந்த புலிகள் என்றும் கடந்த ஒக்ரோபர் மாதம் பிரித்தானிய பிரபுக்கள் சபையில் உரையாற்றிய போது, நெஸ்பி பிரபு கூறியிருந்தார்.

இந்த நிலையில், இலங்கை அரசுக்கு ஆதரவாக கருத்து வெளியிட்ட நெஸ்பி பிரபுவுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நன்றி தெரிவித்து கடிதம் எழுதியுள்ளார் என்றும், தமிழ் பிரிவினைவாதிகளின் அழுத்தங்களால் அந்தக் கடிதம் இரகசியமாக வைக்கப்பட்டுள்ளது என்றும் உதய கம்மன்பில தெரிவித்தார்.

நெஸ்பி பிரபுவுக்கு நன்றி தெரிவித்து இலங்கை சார்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடிதம் எழுதியுள்ளார். இது பாராட்டப்பட வேண்டியது. ஆனால் இந்தக் கடிதம் பற்றி இலங்கையிலோ, பிரித்தானியாவிலோ யாருக்கும் தெரியாது.

ஜனாதிபதி மைத்திரியின் கடிதம், இலங்கை வெளிவிவகாரச் செயலரின் கடிதம் ஒன்றுடன் இணைத்து வழங்கப்பட்டுள்ளது.

வெளிவிவகாரச் செயலரின் இணைப்புக் கடிதத்தில், ஜனாதிபதி மைத்திரியின் கடிதத்தின் உள்ளடக்கம் இலங்கை அல்லது பிரிததானிய ஊடகங்களுக்குப் பகிரப்படக் கூடாது என்று கூறப்பட்டுள்ளது. (ம)

## பெற்றோல் தட்டுப்...

ய்க் கிணறுகளை இந்தியாவிற்கு குத்தகை அடிப்படையில் வழங்க நல்லாட்சி அரசாங்கம் முயற்சி செய்து வருகின்றது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்த பணி பகிஷ்கரிப்பு போராட்டம் நடத்தவுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்கள் சங்கத்தின் தலைவரான டீ.ஜே ராஜகருணா தெரிவித்தார்.

இதேவேளை ஏற்கெனவே நிலவிய பெற்றோல் தட்டுப்பாடு காரணமாக நாடு முழுவதிலும் பெரும் பாதிப்பு ஏற்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (ம)

## தேர்தல் தொடர்பில் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி தேர்தல் தொடர்பில் பெண்களுக்கு விளக்கமளிக்கும் கருத்தரங்கு ஒன்று இன்று மாலை 3 மணிக்கு அரசடி வீதி, தட்டாதெரு சந்தி, இல.32 இல் அமைந்துள்ள சிரேஷ்ட சட்டத்தரணி சீவரட்ணம் மல்லிகாதேவியின் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

தமிழர் சம உரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் தமிழ் தேசிய பேரவை வேட்பாளர்களுக்கு தேர்தல் தொடர்பாக தெளிவுபடுத்தும் கருத்தரங்கில் கலந்துகொண்டு பயனடைய விரும்பும் மகளிர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், பெண்கள் வருகை தர முடியும் என்றும், மேலதிக விபரங்களுக்கு 0721820020 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் தமிழர் சம உரிமை இயக்கத்தின் பொதுச்செயலாளர் கா.நிகேதன் அறிவித்துள்ளார். (ம-9)

## தமிழரசுக்கும்-ரெலோவுக்கும் இடையில் முரண்பாடு

(மன்னார்)

உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பாக இலங்கை தமிழரசுக் கட்சிக்கும், ரெலோவிற்கும் இடையில் நேற்று மாலை மன்னாரில் உள்ள இலங்கை தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் இடம் பெற்ற பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்துள்ளது.

மன்னார் நகர சபை ரெலோவிற்கு வழங்கப்பட்ட போதும் அதனை இலங்கை தமிழரசுக் கட்சிக்கு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கு அமைவாக அவசர சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பில் இலங்கை தமிழரசுக் கட்சி சார்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.பிரிமூஸ் சிராய்வா மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

ரெலோ சார்பாக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம் உள்ளிட்ட கட்சியின் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

நீண்ட நேரமாக பேச்சுவார்த்தை இடம்பெற்ற போதும் மன்னார் நகர சபையின் ஆட்சி இலங்கை தமிழரசுக் கட்சிக்கு வழங்கப்பட வேண்டும் என கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

எனினும் குறித்த கோரிக்கையை ரெலோ நிராகரித்ததோடு, ரெலோவிற்கே வழங்கப்பட வேண்டும்என கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதனால் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் சந்திப்பில் இருந்து வெளியேறியுள்ளார். இதனால் பேச்சுவார்த்தை தீர்வின்றி நிறைவடைந்துள்ளதாக அறிய முடிகின்றது. (ம)

## புலிகள் மீதுள்ள...

கொள்வதில்லை என்றும் ஓய்வுபெற்ற கடற்படை அதிகாரியான ரியல் அட்மிரல் சரத் வீரசேகர குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்யும் ஐ.நா. அமைப்பினர் சிறைக்குச் சென்று புலிச் சந்தேகநபர்களை பார்வையிடுவதாகவும், அதே இடங்களில் நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள கொமாண்டர் தஸநாயக்க மற்றும் கொமாண்டர் சுமித் ரணசிங்க ஆகியோரை சந்திக்கவில்லையென்றும் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த இரு கடற்படை அதிகாரிகளும் குற்றமிழைத்ததாக எவ்வித ஆதாரங்களும் இல்லையென குறிப்பிட்ட சரத் வீரசேகர, அவர்களை பிணையில் விடுவித்து, ஆதாரங்கள் இருக்கும் பட்சத்தில் வழக்கைத் தொடருமாறு குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பணத்திற்காகவே அரசியல்வாதிகள் கட்சி மாறுகின்றனர் என்ற குற்றச்சாட்டை முன்வைத்துள்ள சரத் வீரசேகர, இவ்வாறானவர்களுக்கு எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மக்கள் தகுந்த பாடம் கற்பிக்க வேண்டுமென்றும் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த 2008 மற்றும் 2009ஆம் ஆண்டு காலப்பகுதியில் கொழும்பு மற்றும் புறநகர்ப் பகுதிகளில் 11 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் செய்யப்பட்ட சம்பவம் தொடர்பிலேயே, கொமாண்டர் தஸநாயக்க மற்றும் சுமித் ரணசிங்க ஆகியோர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## பணிப்பகிஷ்கரிப்பு...

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ரயில்வேயின் பதின்மூன்று தொழிற்சங்கங்கள் தொடர்ந்து 7 நாட்களாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வந்த நிலையில் நேற்று குறித்த போராட்டம் கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஒப்பந்த அடிப்படையில் ரயில்வேயில் பணியாற்றும் ஊழியர்கள் பணிக்குத் திரும்பாதவிடத்து, உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் அவர்கள் வேலை நீக்கம் செய்யப்படவுள்ளதாகவும் ரயில்வே திணைக்களம் ஏற்கெனவே தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## 2018-ம் ஆண்டுக்...

ள்ளதாக தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் 2018 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தின் மீதான விவாதத்தின் 2 ஆம் நாள் அமர்வு நேற்று வடக்கு மாகாண சபையில் நடைபெற்றது.

அதில் பாதீட்டு உரை நிகழ்த்தும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தனது உரையில் மேலும் தெரிவிக்கையில்,

2018ஆம் ஆண்டு வட மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதிக்கொடையின் கீழ் ரூபாய் 644 மில்லியனிற்கு திட்ட முன்மொழிவுகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் ரூபாய் 160 மில்லியனே விவசாயத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் 30 திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் ஏனைய நிதிமூலங்களையும் கருத்திற்கொண்டு மாவட்டங்களுக்கிடையில் பின்வருமாறு ஒதுக்கீடு பகிர்ந்தளிக்கப்படவுள்ளது. இதில் 8 ஆயிரத்து 234 விவசாயிகள் நேரடியாக பயன்பெறவுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு 32.7 மில்லியன் ரூபாயும், கிளிநொச்சி மாவட்டத்துக்கு 29.6 மில்லியன் ரூபாயும், மன்னார் மாவட்டத்துக்கு 33.45 மில்லியன் ரூபாயும், முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 29.05 மில்லியன் ரூபாயும், வவுனியா மாவட்டத்துக்கு 35.02 மில்லியன் ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதில் புகையிலைக்கு பதிலாக மாற்றுப் பயிர்ச்செய்கையை ஊக்குவித்தல், கைவிடப்பட்ட மேட்டுநிலங்களில் பயிர்ச்செய்கையை மீள மேற்கொள்ளல், வயல் நிலங்களில் மறுவயற்பயிர்ச்செய்கையை ஊக்குவித்தல், தரமான விதை நெல் உற்பத்தி நிகழ்ச்சித்திட்டம், மற்றும் உவரால் கைவிடப்பட்ட வயல் நிலங்களில் மீளசெய்கையை ஊக்குவித்தல் போன்ற திட்டங்களிற்கென ரூபாய் 18 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டு ஆயிரத்து 960 விவசாயிகளுக்கு விவசாய உள்ளீடுகள் மற்றும் தொழில்நுட்பங்கள் வழங்கப்படவுள்ளன.

வருமானத்தை பெருக்கும் செயற்பாடுகளினூடாக வறுமையை ஒழிப்பதற்கென பெறுமதிசேர் நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கென 5 மில்லியனும் மற்றும் காளான் உற்பத்தி, தேன் உற்பத்தி ஏற்றுமதியை நோக்காக கொண்ட பழப்பயிர்ச்செய்கை ஊக்குவிப்பு, பப்பாசி உற்பத்தியும் விற்பனையும் என்பனவற்றுக்கென ரூபாய் 14 மில்லியனுக்கும் திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இத்திட்டங்களில் 634 பயனாளிகள் பயனடையவுள்ளனர்.

அறுவடைக்கு முந்திய மற்றும் பிந்திய இழப்புகளை குறைப்பதற்கென 100 வெங்காய சேமிப்புக்குடில்கள், 20 நெல் உலர்த்தும் தளம் என்பனவற்றுடன் குரங்கினால் ஏற்படும் விவசாய இழப்புக்களை குறைப்பது என்பனவற்றை உள்ளடக்கி ரூபாய் 17 மில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி சேவைக்கால பயிற்சி நிலையத்தை தரமுயர்த்தல் மற்றும் மாவட்ட விவசாயப்பயிற்சி நிலையங்களை பலப்படுத்துவதற்கும் விவசாய கண்காட்சியை நடத்துவதற்குமென ரூபாய் 12மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

ரூபாய் 4 மில்லியன் செலவில் கிராஞ்சி தென்னை நாற்று உற்பத்திப்பண்ணையின் அலுவலகக்கட்டடம் அமைப்பதற்காகவும், ரூபாய் 14 மில்லியனில் மல்லாவி, பாலம்பிட்டியில் விவசாயிகள் பயிற்சி நிலையங்களை கட்டமைப்பதும் முல்லைத்தீவு, மன்னார் மாவட்ட விவசாயப்பயிற்சி நிலையத்தில் ரூபாய் 12 மில்லியன் களஞ்சியங்களை கட்டமைப்பதற்கும், ரூபாய் 17 மில்லியனில் வவுனியாவில் புதிய பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தை கட்டமைப்பதற்கும், ரூபாய் 12 மில்லியனில் யாழ் மாவட்ட விவசாயப்பயிற்சி நிலையத்தின் விரிவுரை மண்டபத்தை அமைப்பதற்கும் முன்மொழிவுகள் வழங்கப்பட்டுள்ளன.

பருவமற்ற காலங்களில் மரக்கறிப் பயிர்ச் செய்கையை வலைவீடுகளில் மேற்கொள்வதற்கென ரூபாய் 5 மில்லியன் ஒதுக்கப்பட்டிருப்பது இரசாயனப் பாவனையை குறைப்பதை நோக்காக கொண்டு சேதன மரக்கறிச்செய்கையை ஊக்குவித்தல், கூட்டுப்பசளை உற்பத்தியும் பயன்பாடும் விவசாய வளமாக்கல் போன்ற திட்டங்களுக்கென ரூபாய் 11 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார். (ம-4-9)

## மலேசி...

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு, மலேசிய பிரதமர் நஜீப்ரஷாக் இலங்கை வரவுள்ளார்.

எதிர்வரும் 17-ம் திகதி இலங்கை வரவுள்ள மலேசிய பிரதமர், 19-ம் திகதி வரை இலங்கையில் தங்கியிருப்பார்.

எதிர்வரும் 2020-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாடு மலேசியாவில் நடைபெறவுள்ளது. இந்நிலையில், குறித்த மாநாடு தொடர்பிலான கருத்துப் பகிர்வுகள் இவ் விஜயத்தின் போது இடம்பெறவுள்ளதாக மலேசிய வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அத்தோடு, இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் பல உயர்மட்ட சந்திப்புகளும் இடம்பெறவுள்ளன.

மலேசிய பிரதமருடன் அமைச்சர்கள் மட்ட குழுவொன்றும் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதோடு, இலங்கை விஜயத்தின் பின்னர் அவர்கள் மாலைதீவுக்குச் செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)


**விற்பனைக்கு**

Hero Pleasure - சிவப்பு - முதற்பதிவு - 2015 - BBT தொடரிலக்கம் - தனிப்பாவனை - 18000km ஓடிய மோட்டார் சைக்கிள்.

**0750824530** விலை: 140,000/=

(1822)

**விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்**

● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில் [C-622]



UK-550/=Kg

DELIVERY IN 3 - 5 DAYS

**V2 TRAVELS-0768226240**

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

**புதிய வகுப்புக்கள் 'The World of Hopes'**

- "மெல்லக் கற்கும்" மாணவர்களிற்கு மட்டுமேயானது.
- தரம் 4, தரம் 5 இற்கான புதிய குழு வகுப்புக்கள் ஆரம்பம்.
- புலமைப் பரிசில் பரீட்சையை அடிப்படையாகக் கொண்டது.
- ஒவ்வொரு மாணவரின் மீதும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.
- மட்டுப்படுத்தப்பட்ட மாணவர் அனுமதி

மேலதிக விபரங்களுக்கு : 075 333 9904
இல : 234, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (1825)

**வேலை ஆட்கள் தேவை**

யாழ்.நகரில் இயங்கும் பிரபல இலத்திரனியல் விற்பனை நிலையத்துக்கு ஆண் விற்பனையாளர்கள் தேவை. வயதெல்லை 18 - 45.

தொடர்புகளுக்கு:

**0703043633, 0703043636** (1827)

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம். www.ambafrance-lk.org

**021 222 8093** 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம் (1811)

**BIT Semester 1, 3, 5 & Project Classes**

கொழும்பு பல்கலைக் கழகத்திடமிருந்து கணினி பட்டம் 2nd Upper உட்பட இதுவரை 77 இற்கும் மேற்பட்டோர் BIT பட்டம் பெற்றுள்ளனர். 12 வருட கற்பித்தல் அனுபவம்

Windows based, Web based & Mobile based Project classes

**By: T.Tharmmendra (BIT, MCSE, MBCS)-0779785796**

Semi 3: at Sat 1.30 pm, Semi 5: at 9.30am on 9-Dec, Semi 1: on 16-Dec at 7.30am

சகல விதமான IT மற்றும் Programming வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

**#28/23, Manaltharai Lane, Kandarmadam, Jaffna.** (1670)

**தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா**
**கொழும்பு பல்கலைக்கழகம்**

க.பொ.த சா/த சித்தியடைந்தோர் யாவரும் விண்ணப்பிக்கலாம்.

உ/த 2017 தோற்றியோரும் விண்ணப்பிக்கலாம். வேலை தேடுவோர்

பதவி உயர்வுக்கு விண்ணப்பிப்போர் அனைவருக்கும் ஏற்றது. விரிவுரைகள் வார, வாரஇறுதி ஞாயிறு மட்டும் என மூன்று பிரிவுகளாக நடைபெறும். புலமைப்பரிசில் மேலதிக விபரங்களிற்கு

Type DIT<Name> & send to 772395895 (C-889)

**MCS** யாழ் பல்கலைக்கழகம் அருகில் Winner of Best Performances Award

**எவரெஸ்ட் குமாரிக்கா சந்தனாதி தைலம்**



- நீண்ட கூந்தல் வளர்ச்சிக்கும்
- இளநரையை போக்கவும்
- பொடுகிலிருந்து நிவாரணம் பெறவும்
- கண் எரிச்சல், தலை வலியை நீக்கவும்
- ஞாபக சக்தியை அதிகரிக்கச் செய்யவும்
- ஏழு வகையான மூலிகைகள் உள் அடங்கிய சிறப்பு தைலம்

100 வீதம் இயற்கையானது

(கற்றாழை, வல்லாரை, நெல்லிக்காய், கரிசலாங்கண்ணி, கறிவேப்பிலை, பொன்னாங்காணி, அவுரி மற்றும் விற்றமின் E) (1394)


எல்லா மருந்தகங்களிலும் சாதாரண கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்

தயாரிப்பு: எவரெஸ்ட் மருந்தகம், உசன், மிருசுவில், யாழ்ப்பாணம்.

ஏக விநியோகஸ்தர் பிரமநாதன் & Co என்.28, 26, பேரின்பநாயகம் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

கைபேசி எண்: 0776389356, 0777153571


**இதய அஞ்சலி**



அமரர்
**சுப்பிரமணியம் பரமநாதன்**

பாமரர் முதல் கற்றறிந்தோர் வரை இலகுவில் அணுகி உறவாடிய, இன மத பேதமின்றி மனித நேயத்திற்காக குரல் கொடுத்த, கருத்துச் சுதந்திரத்திற்காக முன்னின்றுழைத்த, வலி வடக்கு மீள்குடியேற்றம், மீழெழுச்சிக்காகப்பாடுபட்ட, மக்கள் நலன் தொடர்பான சகல அமைப்புக்களிலும் முக்கிய பங்காற்றிய, எங்கு பிழை நடந்தாலும் எந்த மட்டத்திற்கும் சென்று எடுத்துரைத்த, இளம் சமுதாயத்தினரை சமூகத்தின் பணிக்காக இணைக்கத் தூண்டிய, எமது நிறுவன அறப்பணிகளில் ஆக்கமும் ஊக்கமும் தந்து சிறப்பித்த சமூக சேவையாளர் அமரர் சுப்பிரமணியம் பரமநாதன் அவர்கள் சிவபதமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைவதோடு அவர் தம் குடும்பத்தினரின் பிரிவுத் துயரிலும் பங்கெடுத்து அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

527, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

பணிப்பாளர், பணியாளர்கள்
தியாகி அறக்கொடை நிறுவனம்.

(C-881)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.12.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.